


கல்கி
30 நயா பைசா
KALKI 14-12-1958


உங்கள் கேசத்திற்கு உரிய
பராமரிப்பை அளிக்கிறீர்களா ?
இராஸ்மிக் பர்ப்யூம்ட் கோகனட் ஹேர் ஆயில் உபயோகித்து அன்றாடம் பராமரித்துவந்தால் உங்கள் கேசம் அடர்த்தியாகவும், பளபளப்புடனும் மிளிரும். சுத்தமான தேங்காயெண்ணெயான இராஸ்மிக், கேசத்திற்கு போஷாக்களித்து சம்ரட்சிக்கும். உங்களுக்குப் பிடித்தமான—ரோஜா அல்லது மல்லிகை—நறு மணத்துடன் கிடைக்கும் சீசா ஒன்றை இன்றே வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட் ஹேர் ஆயில்
Erasmic
PERFUMED
COCONUT
HAIR OIL
பரிகத்தத்திற்கு உத்தரவாதம்
புதுமை மாறாமல் நீடித்திருக்கும்
ECH. 3-50 TM

கல்கி பொருளடக்கம்

அரசியல்		
கோபியில் காங்கிரஸ்	...	3
எது அந்நியம்?	...	4
நல்ல உபதேசம்!	விஜீ	5
சோஷலிஸ சமுதாயத்தில் தொழிற்சங்கங்கள்	...	7
பர்மாப் பிரதமர் ஊ நூ	...	8
கதைகள்		
மூடியும் விடியும்	ரங்கமணி	47
மூன்று நண்பர்கள்	வாண்டு மாமா	58
பொங்கிவரும் பெருநிலவு	வி. ராஜேந்திரன்	63
மயக்கம் தெளிந்தது!	எஸ். ரங்கநாயகி	73
காசிக்குப் போனாலும்..!	சியாமா	83
அன்பின் அழைப்பு	சேத்தூர் கூத்தன்	91
சரித்திரத் தொடர் :		
பாண்டிமாதேவி	நா. பார்த்தசாரதி	31
கட்டுரைகள்		
டி. வி. எஸ். ஸ்தாபகருக்கு அஞ்சலி	...	13
வள்ளுவர் வாசகம்	ராஜாஜி	15
சமஷ்டி ஆட்சிக்கு ஆதரவு	ரஜனி	16
பெஷிப் பாதிரியார்	க. நா. சுப்பிரமணியம்	20
பக்தி வயல்	பௌராணிகா	25
டாக்டர் ஷிவாகோ	க. சந்தானம்	43
நாட்டு வைத்தியம்	ஸ்ரீஹரி	79
சோலைகள் சூழ்ந்த கோவில்	பிலோ இருதயநாத்	89

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் : சம்பவங்களும் கற்பனையே.



பெர்க்லி முந்துகிறது !
எல்லா இடங்களிலும் பெர்க்லி சிகரெட்டுகள் முன்னேறுவதில் ஆச்சரியமில்லை. இந்த அதிசய சிகரெட்டுகள் தனி ஆனந்தத்தை அளிக்கின்றன. எல்லிடங்களிலும் மேலும் மேலும் தனிப்பட்ட மக்கள் பெர்க்லிக்கு வருகிறார்கள்.
Berkeley
பெர்க்லி
சிகரெட்டுகள் ,
Issued by The Imperial Tobacco Company of India Limited



மலர் 18 இதழ் 20 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | விளம்பி௵ கார்த்திகை 29

கோபியில் காங்கிரஸ்

கோபிசெட்டிப்பாளையத்தில் தமிழ்நாடு காங்கிரஸின் அரசியல் மகாநாடு மிக ஆடம்பரமாக நடைபெற்றது. காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ யு. என். தேபர், ஸ்ரீமதி இந்திரா காந்தி, ஆந்திர முதன் மந்திரி ஸ்ரீ சஞ்சிவி ரெட்டி முதலிய பலரும் விஜயம் செய்து சொற்பொழிவாற்றி யிருக்கிறார்கள்.

எல்லோரும் ஒரே விஷயத்தை ஏறத்தாழ ஒரேமாதிரி பேசியிருக்கிறார்கள்.

அதுதான் நில உரிமை உச்சவரம்பு விஷயம்!

"நிலச் சீர்திருத்தப் பிரச்னையில் நாங்கள் மிகவும் அக்கறை கொண்டிருக்கிறோம்; காங்கிரஸ் அக்கிராசனர் ஸ்ரீ தேபர் சம்மதமளிக்க வேண்டியதுதான் தாமதம்; ஒரு சில நாட்களிலே (உச்ச வரம்பு) மசோதாவை நிறைவேற்றி விடுவோம்" என்றார் ஆந்திர முதன் மந்திரி திரு சஞ்சிவி ரெட்டி.

காங்கிரஸ் அக்கிராசனர் தேபரோ, "விவசாயிகளுக்கு எல்லாவித உதவிகளும் அளிக்க வேண்டும். இடையில் நிற்கும் எல்லாரையும் அகற்ற வேண்டும். நிலத்தை உழுகிறவனுக்கு, தான் உற்பத்தி செய்வதெல்லாம் தனக்குச் சொந்தம் என்ற எண்ணம் ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் அவன் அதிகம் உழைக்க முடியும்!" என்று சொல்லியிருக்கிறார்.

நம் நாட்டில் நூற்றுக்கு எழுபது பேர் நிலத்தை நம்பி வாழ்பவர்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் நாட்டில் சாகுபடியாகக் கூடிய எல்லா நிலங்களையும் பிரித்துக் கொடுக்க முடியுமா? தலைக்கு என்ன அளவில் வரும்? அது லாபகரமான பண்ணையாகுமா?

தான் சாகுபடி செய்து உண்டாக்கிய தானியம் தனக்கே சொந்தம் என்ற உணர்ச்சியை உழவன் உள்ளத்தில் புகுத்த வேண்டும் என்கிறார்களே, இது சரியான எண்ணந்தானா என்பதை யாராவது யோசித்தார்களா? நிலத்துக்குப் பணம் போட்டவர்களைப்பற்றி என்ன யோசனை? இந்த எண்ணத்தைப் புகுத்திய பிறகு அதை நிறைவேற்றக் காங்கிரஸ் சர்க்காரால் அல்லது வேறு எந்தச் சர்க்காராலும் சாத்தியமா?

பண்டை நெடுங்கால முதல் சுயநலமில்லாது வாழ்க்கை நடத்தும் மக்கள் வேளாண் மக்கள். இதை மிக வியந்து நமது புலவர்கள் பாடியிருக்கிறார்கள். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்று சொன்னார் திருவள்ளுவர்.

அப்படிப்பட்ட மக்களின் அடிப்படை வாழ்க்கை வசதிகளைப் பெருக்க வேண்டும்; வைத்திய உதவி, கல்வி வசதி முதலியவைகளை அளிக்க வேண்டும் என்றெல்லாம் பேசுவது நியாயம். நிலச் சொந்தக்காரர்களுக்கும் உழுபவர்களுக்கும் பகையை மூட்டி விடுவது நல்லதா? பொறுப்புள்ளவர்கள் பேசக்கூடிய பேச்சா இது?

நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதால் உழவன் தனக்கு வேண்டியதைச் சம்பாதித்துக் கொள்ளக் கூடிய அளவு தானியம் விளையக் கூடிய நிலமாகக் கிடைக்காது. எந்த ஊரில் எந்தக் கணக்கில் நிலம் இருக்கிறது? பெற்றுக் கொள்ளக் கூடியவர்கள் எந்த ஊர் என்றெல்லாம் யோசித்தார்களா? சின்னஞ் சிறு துண்டு நிலம்தான் கிடைக்கும். அதனால் அவன் அடையும் கஷ்டம்தான் அதிகமாக இருக்கும். சிறு பண்ணைகளைப் பெரிது படுத்தினால், வேலையில்லாமல் இருக்கும் உழவர்களுக்கு உழைத்துப் பாடுபட வாய்ப்புகள் கிடைக்கும். அதற்குப் பதில் நேர் தலைகீழ் வேலையாகக் காங்கிரஸ்காரர்கள் செய்கிறார்கள்.

"நில உச்ச வரம்பு" என்று வாயால் சொல்லிக் கொண்டு, மனத்தில் அடுத்த தேர்தலை எண்ணிக்கொண்டு தங்களுக்கும் மக்களுக்கும் புரியாத ஒரு காரியத்தைச் செய்து வருகிறார்கள்!


எது அந்நியம்?

கோபிசெட்டிப்பாளையம் காங்கிரஸ் அரசியல் மகாநாட்டில் தலைமையுரை நிகழ்த்திய திரு ராஜாராம் நாயுடு ஆட்சி மொழியைப் பற்றி, "ஹிந்தியை மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக்கக் கூடாது என்று சொல்வது சென்னை ராஜ்யத்தில் தமிழை ஆட்சிமொழியாக்கக் கூடாது என்று சொல்வதற்கு ஒப்பாகும்!" என்று பேசியிருக்கிறார். இந்த வாக்கியத்தைப் படித்ததும் "சபாஷ்! ரொம்ப அழுத்தமாகப் பேசியிருக்கிறாரே!" என்று நினைத்துக் கொண்டோம். ஆனால் பாலில் தண்ணீரைக் கலப்பதுபோல் அடுத்த வரியில் பின்வருமாறு பேசியிருக்கிறார்:


"மத்திய ஆட்சி மொழியை நிர்ணயிப்பதற்கு முன்பு ஹிந்தி பேசப்படாத ராஜ்யங்களின் மக்கள் போதுமான அளவு அம்மொழியில் பயிற்சியடையும்வரை பொறுத்திருப்பது மிகவும் அவசியமாகும். இன்னும் சில ஆண்டுகள் தாமதமாயினும் பரவாயில்லை!" என்று சொல்லுகிறார். இது அவருடைய பயத்தை நன்கு காட்டுகிறது. 1965-ல் ஹிந்தி ஆட்சிமொழியாக வந்து விடுவதற்கு அவர் தயாராயில்லை. அதற்கு இணங்கினால் காங்கிரஸ் தனது செல்வாக்கைத் தமிழ்நாட்டில் இழந்து விடுமோ என்ற கிலி உள்ளத்திலிருந்து உலுக்குவதால் வீரதீரமாகப் பேசியவர், அடுத்த வரியிலேயே இம்மாதிரி பேசியிருக்கிறார்.

இந்தப் பயம் எங்கே வெளியில் தெரிந்து விடப் போகிறதோ என்று அதற்கு அடுத்த வரியில் "அந்நிய மொழியாகிய ஆங்கிலத்தையே என்றென்றும் ஆட்சிமொழியாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பது சரியல்ல!" என்கிறார். இந்த அந்நிய மொழி வாதத்துக்கு ஆயிரம் தடவைகள் பதில் சொல்லியாகி விட்டது. அந்நிய டாலர்களைக் கடன் வாங்கலாம்; அந்நிய காமன்வெல்த்துடன் உறவாடலாம்; அந்நிய யந்திர சாதனங்களை வேண்டி வேண்டி வாங்கலாம். அந்நியர் போட்ட தந்தி, ரயில் முதலியவற்றை "நமது, நமது" என்று சொல்லிப் பெருமையுடன் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அந்நிய நாட்டு சோஷலிஸ சமுதாயத்தை ஏற்படுத்தப் போவதாகப் பேசலாம். ஆனால் அந்நிய நாட்டிலிருந்து நம் நாட்டுக்கு வந்து நமது மொழிகளில் ஒன்றாகி நமக்கு விஞ்ஞான அறிவையும் மற்றும் பல இலக்கியச் செல்வங்களையும் தந்து வழிகாட்டிய ஒரு மொழியை மட்டும் இன்னும் அந்நியமாகவே பாவிக்க வேண்டுமாம்! இது என்ன பேதைமை!


விவசாயிகளின் குரல்!



நல்ல உபதேசம்!



கல்கத்தாவில் திரு மொரார்ஜி வரிப்பளுவைக் குறைப்பதற்கில்லை என்று கையை விரித்துவிட்டு, மனத்தளர்ச்சி அடையக் கூடாது என்று உபதேசமும் செய்திருக்கிறார்.



திரு கிருஷ்ணமேனன் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கும் ராணுவத் துறையில் ஊழல் மலிந்து விட்டதாகப் பெரும் புகார் எழும்பியிருக்கிறது. இதன் விளைவாக திரு கிருஷ்ண மேனன் அமெரிக்காவிலிருந்து விரைவில் இந்தியாவுக்குத் திரும்பிவரக் கூடும்.

சென்னையில்: ஸ்ரீகிருஷ்ணா, பிளாஸா, உமா



Elegant

சோஷலிஸ சமுதாயத்தில் தொழிற் சங்கங்கள்

[ராஜாஜி சுயராஜ்யா பத்திரிகையில் எழுதுகிறார்.]

பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குள் புகுந்ததும், பிரிட்டிஷ் தொழிற்கட்சி சோஷலிஸ்ட் கட்சியாக மாறி விட்டது. அப்போதிலிருந்து அரசியல் சமுதாய சக்திகள் பிரிட்டிஷ் கன்ஸர்வேடிவ் கட்சியையும் சோஷலிஸ்ட் கொள்கைகளைக் கடைப்பிடிக்கச் செய்தன. அதன் விளைவாக, சோஷலிஸ்டுகள் லட்சியமாகக் கொண்டிருந்த, "எல்லாருக்கும் வேலை வாய்ப்பளிக்கும் க்ஷேமநல அரசு" இன்று பெரும் பகுதி பிரிட்டனில் நிறைவேறி விட்டது. கட்சி எடுத்துக்கொண்ட காரியம் முடிந்த பிறகும் கட்சியை உயிரோடு வைத்திருப்பது மிகவும் கஷ்டம். ஆகவே தொழிற் கட்சியை, மீண்டும் சக்தி வாய்ந்த கட்சியாக்க என்ன திட்டம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதே இன்றைய பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் பிரச்னை! ஏற்கனவே நிறைவேற்றப் பட்ட காரியத்துக்காக அவர்கள் மீண்டும் சண்டை போட்டுக் கொண்டிருக்க முடியாது.

நமது நாட்டிலுள்ள தொழிற் சங்கங்கள் இன்னும் சோஷலிஸ்ட் கட்சிகளாக மாற வில்லை. அவை தங்கள் நலன்களுக்காகவே அதாவது ஆலைத் தொழிலாளர்களின் நலன்களுக்காகவே இன்னும் போராடி வருகின்றன. தொழிலாளர்களின் ஊதிய உயர்வுக்காகவும், வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக்கொள்வதற்காகவுமே போராடி வருகின்றன.

காங்கிரஸ் கட்சியோ, (அதாவது அரசாங்கம்) சோஷலிஸ பாணி சமுதாயத்தை நிலை நாட்டுவதைத் தன் லட்சியமாகவேகொண்டு விட்டது. அதனால் தொழிற் சங்கங்கள் சோஷலிஸ கொள்கையைத் தம் தனிக் கொள்கையாகக்கொண்டு இயங்கலாம்என்றால் இதற்குச் சற்றும் வாய்ப்பில்லாமலே போய் விட்டது.

இன்று தொழிற்சங்கங்கள் நடத்தும் கிளர்ச்சிகள் சர்க்காரின் லட்சியங்களை நிறைவேற்ற முடியாமல் தடுக்கின்றன. இந்தியத் தொழிலாளர்களின் கோரிக்கை முதலாளிகளிடம் மூலதனம் சேர விடாமல் தடுக்கின்றன. மூலதனம் இல்லாததால் புதிய தொழில்கள் பெருக வாய்ப்பில்லாமல் போகின்றன. தொழில்கள் பெருகாததால் வேலையில்லாத் தொழிலாளர்களின் கஷ்டத்தைப் போக்கும் வாய்ப்பும் இல்லாமல் போகிறது.

தொழிலாளர்கள் குறைந்த கூலிக்கு அதிக வேலை செய்வதைத் தொழிற்சங்கங்கள் தடுக்கின்றன! தொழிலாளர்களிடையே சம்பளப் போட்டி ஏற்படாமல் பார்த்துக் கொள்கின்றன.

தொழிற்சங்கம் இல்லாமலிருந்தால் தொழிலாளர்களுக்கு இவ்வளவு கூலி கிடைக்காது. உண்மை. ஆனால் தொழில்கள் பெருகவும் விரியவும் நல்ல வாய்ப்புண்டாகி யிருக்கும். மேலும் வேலை வாய்ப்புக் கிடைத்துள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையும் பெருகி யிருக்கும். ஆகவே, 'தொழிலாளர்களுக்கு அதிக கூலி கொடுக்கவேண்டி யிருக்கிறது. அதனால் எங்களால் தொழில்களைப் பெருக்க முடியவில்லை. வேலையில்லாமல் திண்டாடும் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முடிய வில்லை' என்று, சோஷலிஸபாணி சமுதாயத்தைச் சிருஷ்டிக்கப் போவதாகச் சொல்லும் சர்க்கார் சமாதானம் கூற முடியுமா? ஒரு நாளும் முடியாது!

தொழில்களைத் தேச உடைமையாக்குவது என்பது சாதாரணமாக எல்லா சோஷலிஸ பாணி சர்க்கார்களின் லட்சியமாகவே இருக்கும். அப்போது தொழிற்சங்க நடவடிக்கைகள் அந்தச் சர்க்கார் லட்சியத்துக்கு முரண்பட்டதாகத்தான் இருக்கும். சர்க்காரே ஒரு தொழிலை ஏற்று நடத்தும்போது, முதலாளியிடம் உரிமைகளுக்காகப் பேரம் பேசுவது, வேலை நிறுத்தம் செய்து பயமுறுத்துவது போன்ற நடவடிக்கைகள் சற்றும் பொருத்தமல்ல. இவை நீடித்தும் நடக்காது. பழைய பழக்கத்தின் காரணமாக ஒரு சிலகாலம் இந்தத் தொழிலாளர் போராட்டம் நடக்கலாம். பின்னர் தொழிலாளர்களை நியமிக்கும் சர்க்கார், இதிலுள்ள முரண்பாட்டை உணர்ந்து அவற்றைநிறுத்தவே செய்யும். தேச உடைமையாக்கப்பட்ட தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களை, சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் போலவும்தான், ராணுவத்தினரைப் போலவும்தான் நடத்த முடியும். சர்க்கார் ஒரு முடிவு செய்தால் அதைச் சிப்பந்திகள் ஒழுங்காக நடத்தியே தீரவேண்டும். முடிவைத் தீர்மானிக்கும் பொறுப்பு சர்க்காருக்கன்றி வேறு யாருக்கு உண்டு? தொழிலாளரிடையே ஒழுங்கீனம், கட்டுப்பாடின்மை ஏற்பட்டால் ராணுவத்துள் ஏற்படும் கலவரம் போலவே கருதப்பட்டுத் தண்டிக்கப்படும்.

தேசீய உடைமையாக்கப்பட்ட தொழில் ஸ்தாபனங்களில் வேலை நிறுத்த உரிமையிராது என்று சொன்ன மாத்திரத்தில் தொழிற்சங்கங்களுக்கு வேலையில்லையே என்றோ, சர்க்கார் செய்யும் முடிவுகளுக்கு முன்னதாகத் தங்கள் யோசனைகளைக் கூறும் வாய்ப்பிராது என்றோ எண்ணக் கூடாது.

அப்படியல்ல; சோஷலிஸபாணி சமுதாயத்திலும் தொழிற் சங்கங்கள் இருக்கும். அவற்றுக்குப் பல பணிகளும் இருக்கும். எல்லாவற்றையும் விட, தொழிலாளர்களின் திறமையை வளர்ப்பதும் நிர்வாகஸ்தர்களோடு ஒத்துழைத்து உற்பத்தி செய்யப்படும் பொருளின் தரத்தை உயர்த்துவதுமே முக்கியமான பணியாக இருக்கும். இதைத் தவிர, தொழிலாளர்களின் நலன்களுக்காகவும் ஊதியத்துக்காகவும் நிர்வாகஸ்தர்களைக் கண்டு பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டிய பணியுமிருக்கும். போராட்டமே உயிர் வாழ்வதற்கு முக்கியம் என்ற மனோபாவம், சோஷலிஸ சர்க்காரில் எடுபடாது; நடக்காது. காங்கிரஸ் அரசியல் கட்சி தொழிலாளரின் கட்சித் தளவாடங்களை அபகரித்து விட்டது. அதனால் இனி உற்பத்தியைப் பெருக்குவதிலும் அமைதியை நிலைநாட்டுவது முதலிய பணிகளிலுமே பல தொழிற் சங்கங்கள் ஈடுபட வேண்டும். பகைவன் பணிந்த பின்னரும் போர் நடத்திக் கொண்டிருக்க முடியுமா, என்ன?

பர்மாப் பிரதமர் ஊ நூ

பர்மாவில் ராணுவ ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு வரையில் பிரதமராக இருந்த ஊ நூ ஒருவார காலத்துக்குப் புத்த பிக்ஷுவாக இருந்தார். பதவி துறந்தபின்னர் பர்மாவில் பிரபல சுயேச்சை பத்திரிகையான "நேஷன்" அவருடைய நேர்மையைப் பற்றி ரசமான விவரங்களை வெளியிட்டிருக்கிறது.

அவர் பிரதம மந்திரியாகப் பதவியேற்றுக் கொண்டபோது அவருக்கு இருந்தது மூன்று அல்லது நான்கு மாற்று உடைகள் மட்டுமே. பதவியை விட்டு விலகும்போதும் அதே மூன்று அல்லது நான்கு உடைகளுடன் தான் விலகினார். அவருடைய இதர உடைகள், ஸூட்டுகள், அரசாங்கச் செலவில் தைத்து அணிந்து கொண்டிருந்த ஆடைகள், நண்பர்களால் இலவசமாக அளிக்கப்பட்ட உடைகள், தம்முடைய சம்பளத்திலிருந்து சொந்தச் செலவில் தயாரித்துக் கொண்ட ஆடைகள் எல்லாவற்றையும் "பாமா இத்", "நேஷன்" ஆகிய இரு பத்திரிகைகளின் ஆசிரியர்களிடம் ஏழைகளுக்குக் கொடுத்து விடும்படியோ அல்லது இஷ்டப்படி விநியோகிக்கும்படியோ ஒப்படைத்து விட்டார்.

அயல் அரசாங்கங்களிடமிருந்தும் நாட்டுக்கு அரசாங்க விருந்தினர்களாக வரும் பிரமுகர்களிடமிருந்தும் சன்மானமாகப் பெற்ற விலையுயர்ந்த பரிசுப் பொருள்களெல்லாம் எப்படிக் கிடைத்தனவோ, அப்படியே ஜாபிதா எடுத்துப் பர்மா அரசாங்கத்திடம் அல்லது ஆளும் கட்சியினிடம் ஒப்படைத்து விட்டார். ஆப்த நண்பர்கள் அன்பு மிகுதியால் அளித்த அதிக விலை மதிப்பில்லாத சில உடைகளை மட்டுமே அவர் பெற்றுக் கொண்டிருக்கிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்னதாகத் தம்முடைய சம்பளத்திலிருந்து சிறிது மிச்சம் பிடித்துச் சேமிப்பு செய்ததன் மூலம் சுமார் 8000 கியாட் சேர்ந்திருந்ததாம். அரசியல் தொண்டர்களும் தேசிய ஊழியர்களும் வறுமையில் உழலுவதைக் கண்டு அவர்களுடைய நலனுக்காக ஆரம்பித்த நிதிக்கு இந்த 8000 கியாட்டும் தானமாக அளிக்கப்பட்டு விட்டது.

தம்முடைய புத்தகங்கள் விற்பனையிலிருந்து ஆசிரியர் உரிமைக்காகக் கிடைத்த தொகைகளையெல்லாம் அப்படியே கல்வி ஸ்தாபனங்களுக்கோ, மத ஸ்தாபனங்களுக்கோ வழங்கி வந்திருக்கிறார். அதுவும் தாம் சம்பந்தப்படாமல் ஒரு கமிட்டியின் மூலம் சிப்பணம் விநியோகிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

தம் சொந்த நடத்தை சம்பந்தப்பட்ட வரையில், பதவிக் காலத்தில் முற்றிலும் தவறு இல்லாமல் நடந்து கொண்டதில்லை. எனினும் எந்தக் கண்ணியமுள்ள மனிதரும் அருவருப்புடன் சுட்டிக் காட்டித் தம்மைப் பழிக்கும்படியான எந்தக் காரியமும் தாம் செய்ததில்லை என்று சொன்னார்.

"1938-ம் ஆண்டில் ஷ்வேடகான் ஆலயத்தில் (இதுதான் பர்மாவிலுள்ள பெரிய பௌத்த ஆலயம்) நான் எந்தவித மதுபான வகைகளும் அருந்துவதில்லை என்று பிரதிக்ஞை செய்து கொண்டேன். இந்தப் பிரதிக்ஞையிலிருந்து நான் தவறவில்லை."

"அதே ஆண்டில் அந்த ஷ்வேடகான் ஆலயத்தில் என் மனைவிக்குத் துரோகம் செய்வதில்லை என்று ஒரு சமயம் பிரதிக்ஞை செய்து கொண்டேன். அந்தப் பிரதிக்ஞையையும் காப்பாற்றி வந்திருக்கிறேன்."

"1948-ம் ஆண்டு ஜூலை 20-ந் தேதி கலகக்காரர்களின் தொல்லை அதிகரித்துக் கவலை தந்தபோது என்னுடைய பூஜை அறைக்குச் சென்று புனிதமான புத்த விக்கிரஹத்துக்கு முன்பாக 'எல்லா வகையிலும் பரிசுத்தனாக இருக்கிறேன்' என்று பிரதிக்ஞை செய்து கொண்டேன். இந்தப் பிரதிக்ஞையைக் காப்பாற்றினால் கலகக்காரர்கள் மனம் மாறி ஒடுங்கிவிடுவார்கள். அப்படி ஒடுங்கிவிட வேண்டும் என்றும் மனதார விரும்பினேன். அந்தப் பிரதிக்ஞையையும் இன்று வரையில் காப்பாற்றி வந்திருக்கிறேன்."

"என்னுடைய ஆஸ்திகளைப் பற்றியாவது என்னுடைய நெறிமுறையைப் பற்றியாவது நான் மேலே சொல்லியது பொய், பித்தலாட்டம் என்று யாராவது எண்ணினால், அவர்கள் தங்களுக்குத் தெரிந்தவற்றை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கமிஷனுக்குத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய செய்கைகளை அம்பலப்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்."

இவ்வாறு ஊ நூவின் வாழ்க்கையும் பதவிக் காலத்தில் கடைப்பிடித்த நேர்மையும் உலகத் தலைவர்கள் எல்லோருக்குமே ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளன. இம்மாதிரி விஷயத்தில் ஒரு சம்பிரதாயத்தை உருவாக்குவது நல்லது. அதற்கு ஏற்றவாறு மாஜி பிரதமர் ஊ நூவின் நடவடிக்கை இருக்கிறது. நம் நாட்டுத் தலைவர்கள் ஊ நூவின் இந்தச் சீரிய ஒழுக்க முறையைக் கண்டு பயன் அடைவார்களா!

புத்த பிக்ஷுவாகிய ஊ நூ, ரங்கூன் மக்களிடம் யாசகம் பெறுகிறார்.




டிசம்பர் 12 முதல்
சென்னை
பாரகன்·பிரபாத்
சரஸ்வதி மற்றும்
தென்னாடெங்கும்
ஸாஹினியின்
அதிசயதிருடன்
டைரக்ஷன் ... P. புல்லையா B.A
ஸ்டுடியோ
விஜயா & வாஹினி
தயாரிப்பு... S. பவநாராயண • D.B. நாராயண

அருள் வாக்கு

ஸ்ரீ சங்கராச்சாரியார் - காஞ்சிகாமகோடிபீடம்

நாம் செய்யும் குற்றங்களை நாமே ஆலோசித்துப் பார்த்துக் கொண்டால் நம் எல்லோருக்கும் உணவளிக்கும் கடவுளே கருணை நிறைந்த பரோபகாரி என்பது புலனாவது திண்ணம்.

நமது குறைகளை ஆலோசித்துப் பார்ப்பது ஒன்றும் கஷ்டமில்லை. எல்லாரும் பரீட்சை பண்ணிப் பார்த்துக் கொள்ளலாம். பரீட்சை செய்து கொள்ளுவதற்காகத்தான் பகவான் ஸ்வப்பனத்தை உண்டாக்கி யிருக்கிறார். விழித்துக் கொண்டிருக்கும்போது உடம்பு வேலை செய்கிறது. தூங்கும்போது உடம்பு வேலை செய்வதில்லை. "நன்றாகத் தூங்கினேன்" என்று ஒவ்வொருவனும் சொல்கிறான். அப்போது மனமும் லயப்பட்டுப் போகிறது. அதாவது செயலற்று ஒடுங்கி விடுகிறது. பகவானின் கடாக்ஷம் இருக்கிறதா என்பதைப் பார்க்க ஒரு வழி உண்டு. தூக்கத்தில் ஸ்வப்பனம் வரும்போது, தான் பக்தி செய்யும் இஷ்ட தேவதையைப் பூஜித்துக் கொண்டிருப்பதாக வருகிறதா அல்லது, திருடனுக்குப் பயந்து அழுவதுபோலவோ, காமத்தால் இன்புறுவது போலவோ ஸ்வப்பனம் வருகிறதா என்பதைக் கவனிக்கவும். வெளிப்படையாகத் தியானம் பண்ணுவது போல ஏமாற்றுகிறவர்களுக்கு ஸ்வப்பனத்தில் திருடன்தான் வருவான். காமத்தைத்தான் ஸ்வப்பனம் காட்டும். நிஜமான பக்தியாக இருந்தால் ஸ்வப்பனத்தில் கூட பகவந்நாமாவை ஜபம் செய்வதுபோலத்தான் தோன்றும். அப்போது கொஞ்சம் திருப்தி அடையலாம். இப்படித் தினமும் நம்முடைய பக்தியைப் பரிசோதித்துக் கொள்ளலாம்.

உலகத்தில் பாவமே பண்ணாமலிருப்பவன் யாராவது உண்டா என்றால் பைத்தியக்காரன் அல்லது குழந்தை இவ்விரண்டு பேர்கள்தான். ஒருவனுக்குப் பைத்தியம் பிடிக்கிறது. அவன் பைத்தியத்தை நிவிருத்தி பண்ணினால் அவனும் நம்மைப்போலவே ஆகிவிடுகிறான். மனத்தில் தோன்றியதை மறைத்துப் பேச ஆரம்பித்து விடுகிறான். பைத்தியமாக இருக்கிறபோது ஒன்றையும் ஒளிக்கிறதில்லை. ஒருவன் நான்கு வருஷங்கள் பைத்தியமாக இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அந்த நான்கு வருஷங்களுக்கு மற்றவன் செய்யும் பாவங்கள் எதையும் அவன் செய்கிறதில்லை.

அதுபோலவேதான் குழந்தையும். "பாலோன்மத்தவத்," என்று ஞானிகளின் உயர்ந்த நிலைக்குக் குழந்தையையும், உன்மத்தன் அதாவது பைத்தியக்காரனையும் உதாரணமாகச் சொல்லுவார்கள். உன்மத்தம் என்றால் தலைக்கு மேல் ஏறிப்போகிற பித்தம். உன்மாதத்தை உடையவன் உன்மத்தன். ஈச்வரனுக்கு உன்மத்தசேகரன் என்று ஒரு பெயர். பைத்தியக்காரர்களுக்குள் தலைவன் என்று இதற்குப் பொருள். பைத்தியக்காரன் வேஷம் போடுவதில் சிவனுக்குப் பிரியம் அதிகம்.

பைத்தியக்காரப் பிராம்மண வேஷம் போட்டான் ஈச்வரன். சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் ஒரு குருக்கள். பைத்தியக்காரனாக அவரிடம் போய் "நீ என் ஆள்; இதோ பார் ஓலை," என்று கத்தினார் என்ற வரலாறு எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

நாம் ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டிருக்கிறோம், மழை வந்தால் ஓடிவிடுகிறோம். இதுதான் நமது பக்தியின் நிலை. நன்றாக இருக்கும் வரையில் பக்தன் என்று நம்மை நினைத்துக் கொண்டிருப்போம். சோதனைக் காலங்களில் நமது பக்தி தளர்ந்து விடும். நமக்குக் கெட்ட எண்ணமே வரவில்லை யென்று எண்ணிக் கொண்டிருப்போம். இடையென்று ஸ்வப்பனம் கண்டால், அதில் கெட்ட காரியங்கள் பண்ணுவதாகத் தோன்றும். ஸ்வப்பனம் என்பதே வாழ்க்கையில் நிறைவேறாத அபிலாஷைகளின் ஸ்வரூபம். ஸ்வப்பனத்தில் கெட்டகாரியங்கள் பண்ணுவது போலக் கண்டால் நாம் அப்படி எண்ணிக் கொண்டிருக்கிறோமே என்று மனம் துக்கப்பட வேண்டும். கெட்ட காரியமோ, கெட்ட காமமோ ஒரு நாளும் ஸ்வப்பனத்தில் வராமலிருந்தால் அப்போது நல்லவர்களாக இருக்கிறோம் என்று சந்தோஷப்படலாம். நம்மை நாமே சோதித்துப் பார்த்துக் கொள்ளத்தான் ஈஸ்வரன் ஸ்வப்பனத்தை வைத்திருக்கிறார்.

இப்படிச் சோதித்துப் பார்த்தால் எல்லாக் காலத்திலும் நமக்குப் பந்துவாக, சகாயமாக இருப்பவன் அம்மையப்பன் ஒருவன்தான்; அவனைக் காட்டிலும் உலகில் வேறு பந்து இல்லை என்பது நன்றாகத் தெரியும்.

டி.வி.எஸ். ஸ்தாபகருக்கு அஞ்சலி

ஏறக்குறைய இருபத்தைந்து அல்லது முப்பது வருஷங்களுக்கு முன்னால் நடந்தது. கொடைக்கானலிலிருந்து மதுரை மார்க்கமாக அம்பாசமுத்திரத்துக்கு மோட்டாரில் போய்க் கொண்டிருந்தார் ஒரு பிரமுகர். அதே சாலையில் டி. வி. எஸ். பஸ் ஒன்றும் சென்று கொண்டிருந்தது. ஒரு மைலுக்கொருதரம் அந்த பஸ் நின்று நின்று சென்றது. பஸ் நின்ற இடங்களிலெல்லாம் சாலையோரத்தில் காத்துக் கொண்டிருந்த சிறுவர்கள் கூட்டம் கை நிறைய எதையோ வைத்துக்கொண்டு பஸ் டிரைவரிடம் கொடுத்தனர். அவற்றைப் பெற்றுக் கொண்டு டிரைவர் அந்தப் பிள்ளைகளிடம் ஏதோ பதிலுக்குக் கொடுத்தார். பிறகு பஸ் தனது பிரயாணத்தைத் தொடங்கியது. இப்படி ஒவ்வொரு மைலுக்கப்பாலும் நிகழ்ந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்த மோட்டாரில்சென்ற அந்தப் பிரமுகர் அந்தப் பிள்ளைகள் பஸ் டிரைவரிடம் என்ன கொடுக்கிறார்கள் என்று ஆவல் மிகுதியால் கேட்டார்.

"தேய்ந்து போன லாடங்கள் சாலையில் சிதறிக் கிடப்பதினால் பஸ் டயர்களுக்குச் சேதமுண்டாவதைத் தவிர்க்க, அவற்றைப் பொறுக்கித் தந்து ஓரணா பெற்றுக் கொள்ளுகிறார்கள்" என்று பதிலளித்தான் டிரைவர்.

ஆம். அந்தக் காலத்தில் இப்படித்தான் நடந்தது. பெட்ரோல் விலை காலன் ஒன்பதணாதான். யார் வேண்டுமானாலும் பஸ் சர்வீஸ் நடத்தலாம். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை மட்டுமே இருந்தது. பஸ் சர்வீஸ் நடத்துபவர்கள் தங்கள் பஸ் செல்லும் ரஸ்தாக்களையெல்லாம் தாங்களாகவே போட்டுக்கொண்டு சீரான நிலைமையில் அவற்றைப் பழுது பார்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த நிபந்தனைக்குட்பட்டுத்தான் அந்தக் காலத்து பஸ் சர்வீஸ் நடத்தப்பட்டது. பஸ் என்றால் சாதாரண பஸ் அல்ல; பொருட்காட்சிச் சாலையில் சேகரித்து வைக்கப்பட வேண்டிய அற்புத வஸ்து! டயர்களுக்குள்ளே காற்றடித்த 'ட்யூப்'புகள் கிடையாது. எல்லாம் கெட்டி டயர்கள். சக்கரங்கள் சங்கிலி கொண்டு பிணைக்கப்பட்டுச் சைக்கிள் சக்கரங்கள் போல் சுழன்றன. டயர்கள் தளர்ந்து விட்டாலோ, சங்கிலிகள் துண்டித்து விட்டாலோ, பஸ் மேற்கொண்டு செல்லுவதற்குள் எது வேண்டுமானாலும் நிகழலாம்! பஸ்ஸில் ஏறிப் பிரயாணம் செய்வதற்கே மிகுந்த மனோ தைரியம் வேண்டியிருந்தது.

இப்படிப்பட்டகாலத்தில் ஒரு பஸ்ஸர்வீஸை ஆரம்பித்து, பிரயாணிகளும், சாமான்களும் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்துக்குக் கட்டாயம் சேர்ந்து விடுவார்கள் என்ற நம்பிக்கையையும் மக்களிடையே பரப்பி, ஒருவர் நமதுதென்னிந்தியாவில், பஸ் சர்வீஸ் வெற்றிகரமாக நடத்தினார் என்றால் அவரை வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது.

அத்தகைய சாமர்த்தியம் படைத்த மனிதர்தான் டி. வி. சுந்தரம் அய்யங்கார். காலச் சுழல்படி பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்; ஆனால் மனோபாவத்திலும், தொழில் பண்பிலும், நிர்வாகத் திறனிலும், முன்னேற்ற வேகத்திலும் இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர், இல்லை, இருபத்து ஒன்றாவது நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று சொல்ல வேண்டும். இதற்கு இரண்டு விஷயங்களை மட்டும் சான்றாகக் காட்டலாம்.

அரையணா சம்பளமானாலும் அரண்மனைச் சேவகத்துக்கு மவுசு அதிகமிருந்த காலத்தில், சட்டத் தொழிலுக்குப் படித்து இங்கிலீஷ் அட்வகேட்டாக மலர வேண்டும் என்று நாட்டு வக்கீலான தமது தந்தையின் விருப்பத்துக்கும் மாறாக, அக் காலத்துப் பிரபல ஆங்கிலேய வக்கீல் நார்ட்டன் பிரசங்கத்தைக் கேட்டு, தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டார் டி. வி. சுந்தரம் அய்யங்கார். ஆம்! நாட்டின் நலனுக்கு பஸ் சர்வீஸ் கூட ஒரு முக்கியமான தொழில்தான். கஷ்டமான இந்தத் தொழிலை எவ்வளவு சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடத்தி நிலைபெறச் செய்தார் என்பதற்கு இப்போது ஆலமரம்போல் கிளையும், விழுதும் படர்ந்து பணியாற்றும் டி. வி. எஸ். ஸ்தாபனங்கள் சாட்சி சொல்கின்றன.

பஸ் சர்வீஸ் ஆரம்பித்தது மட்டுமின்றிக் 'காலந்தவறாமை' என்பதை ஒரு ஒழுக்கமாக அந்தக் காலத்திலிருந்தே கடைப்பிடித்து, அதைத் தன்னுடனும் தனக்குக் கீழும் வேலை செய்த கணக்கற்ற சிப்பந்திகளின் உள்ளத்திலும் புகுத்தி நிலைபெறச் செய்திருப்பது ஒரு மகத்தான காரியம். "இண்டியன் பங்க்சுவாலிடி" என்று கேலியாக வழங்கும் நமது பண்பில் "டி. வி. எஸ். பங்க்சுவாலிடி" என்று ஒரு புதுப் பண்பை உண்டுபண்ணியிருக்கிறது. இந்த ஸ்தாபனம். இதற்கு மூல காரணம் டி. வி. சுந்தரம் அய்யங்கார்.


அன்னாருடைய நினைவுச் சின்னமாக அவருடைய உருவச்சிலையொன்றைச் சென்ற நவம்பர் 22-ந் தேதி டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார் சுந்தரம் மோட்டார் நிலையத்தில் திறந்து வைத்தார். அலங்காரமாக வேயப்பட்ட பந்தலில் இந்த வைபவம் ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டது. வரவேற்புரை நிகழ்த்திய திரு பி. டி. ராதாகிருஷ்ணனும், தலைவர் டாக்டர் லக்ஷ்மணஸ்வாமி முதலியாரும், இந்த ஸ்தாபனத்தில் முப்பத்தி மூன்று வருஷங்கள் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு பி. விஜயேந்திரராவும் மற்றும் பலரும் டி. வி. சுந்தரம் அய்யங்காரின் தொழில் நுட்ப அறிவைப் பற்றியும் பண்பைக் குறித்தும் உணர்ச்சியுடன் பேசினார்கள். தந்தை விட்டுச் சென்ற தொழிற் பண்பு என்னும் செல்வத்தைப் பேணிப் பாதுகாத்து வரும் டி. வி. எஸ். புதல்வர்களின் சேவை மகத்தானது. இதைப்பற்றிச் சொல்லும்போது திரு டி. எஸ். கிருஷ்ணாவின் குரல்கூட உணர்ச்சியால் தழுதழுத்தது.

கடைசியில், இசை நடன விருந்துடனும் விரிவான ஒரு விருந்துடனும் அதற்கும் மேல் ஒரு ஹாஸ்ய நாடகத்துடனும் இவ்விழா இனிது முடிந்தது.













1. காலஞ்சென்ற டி. வி. சுந்தரம் அய்யங்காரின் வெண்கல உருவச்சிலை. 2. இந்தச் சிலையைத் திறந்து வைத்து டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார் பேசுகிறார். 3. திரு. பி. டி. ராதா கிருஷ்ணன் ஞாபகார்த்தக் கமிட்டியின் சார்பில் வரவேற்புரையைப் படிக்கிறார். 4. 33-வருஷங்கள் வேலை பார்த்து ஓய்விலிருக்கும் திரு. விஜயேந்திரராவ் பேசுகிறார். 5. ஞாபகார்த்தக் கமிட்டி அளித்த டி. வி. எஸ். ஸின் உருவச் சிலையைத் திரு டி. எஸ். கிருஷ்ணா, கம்பெனியின் சார்பாக ஏற்றுக் கொண்டு நன்றி செலுத்துகிறார். 6. விழாவுக்கு வந்து சிறப்பித்த கூட்டத்தின் ஒரு பகுதி.

இருதயக் கோளாறு

★

கடிகாரம் 'டிக் - டிக்' என்று சதா ஒலிப்பதுபோல் இருதயமும் இடைவிடாமல் இரவு, பகல் எந்நேரமும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

கடிகாரம் நின்று போய்விட்டால், உடனே அதைப் பழுது பார்ப்பவரிடம் எடுத்துச் செல்லுகிறீர்கள்.

அதேபோல், இருதயத்தின் துடிப்பு மெதுவாக ஒலித்தாலும், ரொம்ப வேகமாக ஒலித்தாலும், அதன் ஒலி ஒழுங்காக இல்லாமற் போனாலும் அல்லது இருதயத் துடிப்பில் வலி கண்டாலும்—நீங்கள் உடனே டாக்டரைத் தேடி ஒடுகிறீர்கள்.

உங்களுடைய இருதய அமைப்பிலும் அதன் இயக்கத்தில் ஏற்படும் எல்லாவித கோளாறுகளுக்கும்

புகழ்பெற்ற
இருதய வைத்திய நிபுணர்
கவிராஜ்
பண்டிட்
துர்க்கா தத் சர்மா
வைத்திய வாசஸ்பதி



அவர்களிடம் நேரிடையாகவோ, தபால் மூலமாகவோ ஆலோசனை பெறலாம்

●

NAVRATNA KALPA PHARMACY
JULLUNDUR CITY (India)

— லிப்கோ —
மலிவுப் பதிப்பு மலர்கள்

ஸ்ரீமஹா
பக்த விஜயம்
- சுகப்ரியை -
496 பக்கங்கள்
விலை ரூ. 2.25



விநோத ரச மஞ்சரி
484 பக்கங்கள் : விலை ரூ. 2.25

★

பத்மாவதி சரித்திரம்
- அ. மாதவையரின் நாவல் -
320 பக்கங்கள் விலை ரூ 1.80


தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை-17; எம். தாமோதரம் & கம்பெனி, அப்பர் பில்டிங்ஸ், சென்னை-1; ஹிக்கின்பாதம்ஸ், சென்னை-2 & ரெயில்வே ஸ்டால்கள்; மற்றும் அநேக புத்தகக் கடைகள்.



படை சிரங்கு
(ECZEMA)
முதலிய சர்ம வியாதிகளுக்கு
லிச்சென்ஸா
உபயோகியுங்கள்

எங்கும் கிடைக்கும்

சிலோன் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
மகாராஜா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் லிமிடெட்
54, பேங்க்ஷல் தெரு, கொழும்பு



60

“இது என்ன இன்பம் தரும்? எவ்வளவு காலம் நிற்கும்? அதற்கு நான் கொடுக்கும் விலை என்ன?” என்பதைக் கொஞ்சம் யோசிக்கச் சொல்லுகிறார் முனிவர். “நான் காமப் பற்றுகளை முற்றிலும் கழித்து விட்டேன்” என்று உலகத்துக்குச் சொல்லுகிறாய். சொல்லி விட்டு மறைவாகக் காம இன்பத்துக்கு ஆசைப்பட்டு ஒழுக்கம் தவறி நடக்கிறாய். அது உன்னை எவ்வளவு தொந்தரவுகளுக்குள் சிக்க விட்டு அலையச் செய்யும் என்பதை ஆராய்ந்தாயா? ‘ஐயோ! என்ன செய்தேன்! என்ன செய்தேன்!’ என்று துக்கப்படுவாய். கணத்தில் அழிந்து போகும் இன்பத்தின் பொருட்டு நெடுங்காலம் துன்பம் தரும் காரியத்தைச் செய்ய வேண்டாம் என்கிறார்.

பற்றுஅற்றேம் என்பார்
படிற்றொழுக்கம் எற்றுஎற்றுஎன்று
ஏதம் பலவும்
தரும்.

ஏதம் - குற்றம், குற்றத்தினால் உண்டாகும் துன்பம், இரண்டையும் குறிக்கிறது.

மறைந்த கூடாவொழுக்கத்தின் பயனாகப் பொய் சொல்லவும், ‘எவன் கண்டானோ, இவன் என்னைப் பற்றிப் பிறரிடம் பேசுவானோ, அதற்கு என்ன செய்வேன்’ என்றெல்லாம் பயந்து துன்பப்படவும் நேரிடும். இவ்வளவு துன்பத்துக்கு நான் அடையும் கணநேரத்து இன்பம் ஈடாகுமா என்று யோசித்துப் பார்க்கச் சொல்லுகிறார் முனிவர்.

பற்று இவ்விடம் ஆசை என்று பொருள். மகளிர் அனுபவம் இல்லை என்பது மட்டுமல்ல, அந்த எண்ணமே என்னிடம் இல்லை என்றல்லவா துறவி சொல்லுகிறான்? அதனால் ‘பற்று அற்றேம் என்பார்’ என்றார். துறவிகள் அல்லாதவர்கள் செய்யும் குற்றம் ஒருவிதம். அந்தக் குற்றத்தில் துறவி ஒருவன் வீழ்ந்தால் பெருந்துன்பம் விளையும்.

* * *

மழித்தலும் நீட்டலும்
வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து
விடின்.

மழித்தல் - தலையை முண்டனம் செய்தல், மொட்டை யடித்தல். நீட்டல் - மயிரை வளர்த்துச் சடையாக்குதல்.

இரண்டும் துறவு வேஷம். கூடாது என்று உலகம் பழித்துத் தள்ளிய காரியங்களைச் செய்யாமல் ஒழித்தால், தலைமயிரை மழிப்பதும் சடையாக்குவதும் வேண்டியதில்லை. அதாவது துறவு பூண வேண்டியதேயில்லை.

வேஷத்தால் பயன் இல்லை, நல்லொழுக்கமே வேண்டும் என்று முனிவர் இந்த அதிகாரத்துப் பத்தாவது குறளில் முடிக்கிறார்.



சமஷ்டி ஆட்சிக்கு ஆதரவு

• ஜனி

கொழும்பு டிசம்பர் 4உ

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சமஷ்டி ஆட்சி முறைக் கோரிக்கைக்குச் செல்வாக்கு மிக்க கண்டியத் தலைவர்களிடமிருந்து ஆதரவு கிடைத்திருப்பது இவ்வாரத்திய முக்கியமான அரசியல் சம்பவமாகும். தெளிவான இரு சமுதாயத்தினர் வாழும் இலங்கையைப் போலுள்ள நாட்டுக்குச் சமஷ்டி ஆட்சிமுறை தான் பொருத்தமானதென்றும் ஒற்றையாட்சிமுறை ஒரு வகுப்பு சர்வாதிகாரத்துக்கே இடமளிப்பதாயிருக்கும் என்றும் இன்று நாட்டில் சிங்களச் சர்வாதிகாரம் நடக்க ஒற்றையாட்சி முறையே காரணமென்றும் தமிழரசுக் கட்சி வாதிக்கும் போதெல்லாம் அவர்களுக்குக் கிடைப்பது வகுப்பு வாதிகளென்ற பட்டம்தான். இலங்கையைத் துண்டு போட்டுத் தனித் தமிழ் ராஜ்யத்தை ஏற்படுத்தவும், பிறகு அந்தத் தனித் தமிழ் ராஜ்யத்தைத் தென்னிந்தியத் தமிழ்நாட்டுடன் இணைக்கவும் அவர்கள் சதி செய்வதாக அபாண்டமாகப் பழி சுமத்தப் படுகிறது. சமஷ்டியென்றால் நாட்டைத் துண்டு போடுவது என்று சிங்களப் பொது ஜனங்கள் நினைத்து வெறுத்து ஒதுக்குமளவுக்கு அவர்கள் மனத்தில் துவேஷ விதை விதைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தப்பு எண்ணங்களைப் போக்கி உண்மையை மக்கள் அறியும் வண்ணம் எடுத்துரைக்க ஒரு சிங்களத் தலைவர் முன்வந்திருப்பது குறிப்பிடத் தகுந்தது.

நாவலப்பிட்டியின் பார்லிமெண்ட் அங்கத்தினரான திரு ஆர். இ. ஜயதிலகா என்பவர் இவ்வாரம் வெளியிட்டுள்ள ஒரு முக்கியமான அறிக்கையில் தமிழ் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒரு யூனிட்டாகவும், கண்டியப் பகுதிகளை இரண்டாவது யூனிட்டாகவும், தென்னிலங்கையை மூன்றாவது யூனிட்டாகவும் கொண்ட ஒரு சமஷ்டியாட்சி முறையை ஏற்படுத்த வேண்டுமெனக் கோருவது பற்றி அரசியல் பற்றற்ற கண்டியத் தலைவர்கள் ஆராய்ந்து வருவதாயும் இதற்காக உலகிலுள்ள சமஷ்டியாட்சி முறை நாடுகளைப் பரிசீலனை செய்து வருவதாயும் சமஷ்டியாட்சி முறை நல்லதெனத் தீர்மானிக்கும் பட்சத்தில் அது சம்பந்தமாகத் தீவிரமாகப் பிரசாரம் செய்ய உத்தேசித்திருப்பதாயும் அறிவித்திருக்கிறார். சமஷ்டியென்றால் அது சிங்களவருக்கு விரோதமானதென்ற ஒரு தவறான அபிப்பிராயம் மக்களிடையே நிலவி வருவதாயும், நாட்டின் பல்வேறு பகுதிகளும் ஓரளவு சுயாட்சி பெற்றிருந்து முன்னேறவும் அதே சமயம் நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்கவும் ஏற்பட்ட சிறந்த ஆட்சி முறையே சமஷ்டியாட்சி முறை யென்றும் பிரபல சிங்களத் தலைவரான திரு ஜயதிலகா அறிவித்திருப்பது சிங்களவருக்கு உண்மையை உணர்த்துவதாகவும், தமிழரசுக் கட்சியின்மீது சுமத்தப்படும் துண்டாடும் பழி எவ்வளவு அபாண்டமென்பதை ருசுப்படுத்துவதாயும் இருக்கவேண்டும்.

தமிழரசுக் கட்சியின் சமஷ்டியாட்சிக் கோரிக்கை சிங்களவருக்கு விரோதமானதோ, அல்லது வகுப்புவாத நோக்குடையதோ அல்லவென்று கண்டியச் சிங்களவர்களே பகிரங்கமாக அறிவித்திருப்பது விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததென்பதைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரான திரு செல்வநாயகமும் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

நாடற்றவர்களுக்கு யார் ஜவாப்தாரி?

இலங்கை இந்திய வம்சாவளியினர்களில் சுமார் ஏழு லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் நாடற்றவர்களாகியதற்கு இலங்கை அரசாங்கம் ஜவாப்தாரியல்லவென்றும் அவர்களை நாடற்றவர்களாக்க இலங்கைப் பார்லிமெண்ட் எவ்விதச் சட்டமும் இயற்றவில்லையென்றும் நாடற்றவர்களென்ற பட்டத்தை இந்த மக்கள் தாங்களாகவே வலுவில் சூட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் பொருள்படுமாறு இலங்கை வர்த்தக மந்திரி திரு ஆர். ஜி. சேனநாயகா சென்னையில் அளித்த பேட்டியொன்றில் அறிவித்திருப்பது இங்கு ஆச்சரியத்தை விளைவித்திருக்கிறது. இலங்கை மந்திரிக்கு ஒரு சிங்களத் தோட்ட முதலாளியே சுடச்சுடப் பதிலளித்திருப்பது இங்கு குறிப்பிடத் தகுந்தது. குருணாக்கலை தோட்ட முதலாளிமார் சங்கத் தலைவரான திரு குணவர்த்தனா என்ற ஒரு சிங்களவர் இவ்வாரம் தமது சங்கக் கூட்டத்தில் பேசியபோது, பல்லாண்டுகளாக இலங்கையில் பாடுபட்டு உழைத்து இந்நாட்டைப் பொன் கொழிக்கும் பூமியாக்கிய இந்தியர்களுக்குப் பிரஜாவுரிமை

ஈன்றாள்

தொட்டிலை ஆட்டும் கையே உண்மையில் உலகை ஆளும் கை!

— டபிள்யூ எஸ். ராஸ்.

கடவுள் எல்லா இடத்திலும் இருக்க முடியவில்லை. அதனால் தாயைச் சிருஷ்டித்தார் — யூதப் பழமொழி


சின்னஞ் சிறு குழந்தைகளின் இதழ்களிலும், உள்ளங்களிலும் தவழும் "அம்மா!" என்னும் சொல் கடவுளின் மற்றொரு பெயர்.

— தாக்கரே.

ஈன்றாளோடு எண்ணக் கடவுளும் இல்! — நான்மணிக்கடிகை.

யளிக்க மறுத்து நாடற்றவர்களாக்கியது அநீதியென்று கண்டித்தார்.

இலங்கை இந்திய மக்களின் லட்சக்கணக்கான பிரஜாவுரிமை மனுக்கள் நீதி நியாயமின்றி நிராகரிக்கப்பட்டிருப்பதாயும், இந்த அநீதியை அடிக்கடி சுப்ரீம் கோர்ட் இடித்துக் காட்டி அப்பீல் செய்யும் இந்தியர்களுக்கெல்லாம் பிரஜாவுரிமை வழங்குமாறு தீர்ப்பளித்து வருவது பெரிய வெட்கக்கேடாக இருக்கிறதென்றும், பிரஜாவுரிமைச் சட்டம் நேர்மையற்ற முறையில் அமுல் நடத்தப்படுவதே நாடற்றவர்களின் தொகை பெருகக் காரணமென்றும் அரசாங்கப் போக்கை அழுத்தமாகக் கண்டித்திருக்கிறார். பிரஜாவுரிமை வழங்குவதற்காக ஏற்பட்ட சட்டத்தைப் பிரஜாவுரிமையை மறுக்க எப்படியெல்லாம் அமுல் நடத்த முடியுமோ அப்படியெல்லாம் அமுல் நடத்தியதுதான் ஏழரை லட்சம் இந்தியர்கள் நாடற்றவர்களாக்கப் பட்டதற்குக் காரணமாயிருக்கையில் இந்தியர்களை நாடற்றவர்களாக்குவதற்காக நாங்கள் பிரத்தியேகமான சட்டம் இயற்றவில்லையென்று வர்த்தக மந்திரி சொல்லியிருப்பது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயற்சி செய்வதைப் போலவே யிருக்கிறது.



கோ சம்ரக்ஷணம்

கஞ்சியையும், கழுநீரையும் வீணாக்காமல் ஒரு பாத்திரத்தில் சேகரித்து, பசு மாடுகளுக்குக் கொடுத்து ரக்ஷிக்கவும்.

காய்கறிகளை நறுக்கும் பொழுது மிஞ்சும் காய்கறிப் பாகங்களைப் பசுவுக்குத் தந்து ரக்ஷிக்கவும்.

கால்நடைகள் நமக்கு உழைக்கின்றன. அவற்றைக் காப்பாற்றுவது நமது கடமை.

—ஸ்ரீ சங்கராச்சாரியார் காஞ்சீ காமகோடிபீடம்

புரட்சி பற்றிப் பரபரப்பு

இலங்கையில் பல பிரபல தலைவர்களைப் படுகொலை செய்து ஆட்சியைக் கைப்பற்றப் புரட்சி நடத்துவதற்கு முயற்சி நடந்ததாக ஏற்கனவே பார்லிமெண்டில் புகார் செய்யப் பட்டது. கவர்னர்ஜெனரல், முன்னாள் பிரதம மந்திரி டட்லி சேனநாயகா, எதிர்க்கட்சித் தலைவர்கள் டாக்டர் என். எம். பெரேரா, உணவு மந்திரி பிலிப் குணவர்த்தனா ஆகியவர்களைக் கொலை செய்வதற்குத் திட்டம் தீட்டப் பட்டதாக உள்ளூர்ப் பத்திரிகைகள் ஒரு பரபரப்பான செய்தியை வெளியிட்டிருந்ததால் நிலைமை இவ்வாரம் நெருக்கடியடைந்து, சர்க்கார் கட்சிக் கூட்டத்தில் காரசாரமான விவாதம் நடைபெற்றது. இவ்விஷயத்தை ஆதியோடந்தமாக விசாரணை செய்யவேண்டுமென்றும் சதியில் சம்பந்தப் பட்டிருப்பதாகக் கூறப்படும் போலீஸ் அதிகாரியை ஸஸ்பெண்ட் செய்து வைக்க வேண்டுமென்றும் உணவு மந்திரி வற்புறுத்தினார். இதைப் பற்றி யோசனை செய்வதாகப் பிரதமர் கூறிய போது உணவு மந்திரி இலேசில் விடுவதாயில்லை. "எங்கள் உயிர் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்திலிருக்கும்போது யோசனை செய்வதாகக் கூறினால் போதாது" என்றார். உடனே ஒரு விசாரணைக் கமிஷனை நியமிப்பதற்குப் பிரதமர் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரியை ஸஸ்பெண்ட் செய்ய வேண்டிய அவசியமேயில்லாமல் அவரே விசாரணை நடந்து முடியும் வரையில் லீவில் இருக்க மனுச் செய்து கொண்டு விட்டார்.

புரட்சி நடத்தச் சதி நடந்ததா இல்லையா என்பது எப்படி யிருந்தபோதிலும் இதைப் பற்றி மட்டும் விசாரிப்பது போதிய பலன் அளிக்க மாட்டாது. சென்ற மே, ஜூன் மாத வகுப்புக் கலகத்தின்போது பல நூற்றுக் கணக்கானவர்கள் நாட்டின் பல பாகங்களிலும் படுகொலை செய்யப்பட்டபோது, அந்தக் கலகம் திட்டமிட்டு நடத்தப்பட்டதைப்போலவே யிருக்கிறதென்று பிரதம மந்திரியே ஒப்புக் கொண்டார். அந்த அக்கிரமத்தைத் தூண்டிவிட்ட படுபாவிகள் யார் என்பதைப் பற்றி விசாரணை நடத்தவேண்டுமெனக் கோரப்பட்டபோது, அதிக உயிர்ச் சேதம் தமிழர் தரப்பில்தான் என்றுதானோ என்னவோ விசாரணைக் கமிஷனை நியமிக்கப் பிரதம மந்திரி அப்போது மறுத்து விட்டார். அப்போதே விசாரணை நடந்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்கப்பட்டிருப் பின் மீண்டும் புரட்சி நடத்தும் பேச்சே ஏற்பட்டிருக்காது. புரட்சி நடத்தும் யோசனை தலைகாட்டியதற்கே நாட்டில் அமைதியற்ற நிலைமை நிலவுவதுதானே? இந்த நிலைமையைப் போக்கி வகுப்பு சௌஜன்யத்தைத் திரும்பவும் நிலைநிறுத்தாத பட்சத்தில் எவ்வளவு கமிஷன்களை நியமித்து விசாரணை நடத்தினால்தான் என்ன பயன்? தமிழ் மக்களது நியாயமான மொழி உரிமை பிரஜாவுரிமை முதலியவற்றை அங்கீகரிக்காத வரையில் பழைய அமைதியும் நல்லுறவும் திரும்ப ஏற்படுமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

இலங்கை இந்திய நண்பர்கள் சங்கம்


இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நெருங்கிய நேச உறவை ஏற்படுத்துவதற்காக ஸர் ஆல்பர்ட் பீரிஸ் என்ற ஒரு பிரபல பிரமுகர் தலைமையில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுச் சிறப்பாகச் சேவை செய்து வருகிறது. அந்தச் சங்கத்தின் நான்காவது ஆண்டு விழா சென்ற வாரம் கொழும்பில் விமரிசையாக நடைபெற்றது.



be Bright - Call_Madras 55965




சென்னை அரசாங்கக் காதி இலாக்கா வைச் சேர்ந்த திரு முத்தையா கணபதியின் புதல்வி சௌ. நிர்மலக்கும் திரு இனிய பெருமாளுக்கும் திருமணம் நடந்தது.



திண்டிவனம் வக்கீல் திரு ராமச்சந்திர அய்யரின் புதல்வர் திரு சீனிவாசனுக்கும் சௌ. காமாக்ஷிக்கும் விவாகம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்




சென்னை அரசாங்கக் காதி இலாகா திரு முத்தையா கணபதியின் புதல்வி சௌ. கல்யாணிக்கும் திரு முருகனுக்கும் திருமணம் நடந்தேறியது.



திரு கிருஷ்ணமாச்சாரிக்கும் சௌ. சரோஜாவுக்கும் திருவிழந்தூரில் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது.



தர்மபுரி கல்வி ஏஜண்ட் திரு டி. பி. நடேச செட்டியார் சகோதரர் குமாரர் திரு டி. ஜீ. ஜெயராமனுக்கும் சௌ. கமலா சனுவுக்கும் திருமணம் நடந்தது.



கல்வி காரியாலயத்தைச் சேர்ந்த திரு எம். ஏ. கிருஷ்ணமூர்த்தியின் சகோதரர் திரு எம். ஏ. சுப்பிரமணியனுக்கும் சௌ. பார்வதிக்கும் விவாகம் நடைபெற்றது.

பெஷிப் பாதிரியார்

க. நா. சுப்பிரமணியம்

ஆறு தூங்கிக் கொண்டிருக்கிறதா, விழித்துக் கொண்டிருக்கிறதா என்று பார்ப்பதற்காக எரிகிற கொள்ளிக் கட்டையை வைத்துப் பார்த்து, "அடடா! ஆறு விழித்துக் கொண்டிருக்கிறது. இப்போது ஆற்றைக் கடப்பது ஆபத்தான விஷயம்" என்று முடிவு கட்டிய அபூர்வ புத்திமானான சிஷ்யனையும் அவனுடைய பரமார்த்த அவிவேக பரிபூர்ண குருவையும் நமக்கு எல்லோருக்கும் தெரியும் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு இருநூறு வருஷங்களில் தமிழ் நாட்டில் எல்லோருடைய வீடுகளிலும் புகுந்து புறப்பட்ட கதைதான் இது. தமிழ் நாட்டில் மட்டுமல்ல; தெலுங்கர்களிடையிலும், கன்னட மொழிக்காரரிடையேயும் வழக்கில் வந்துவிட்ட கதைகள்தான் இவை.


இந்தக் கதைகள் அநாதியாகத் தோன்றியவை அல்ல. முதன்முதலாக இவை 1725-ம் ஆண்டு வாக்கிலே வீரமாமுனிவர் என்கிற தமிழ்ப் பெயர் பூண்ட ஒரு கிறிஸ்தவப் பாதிரியாரால் எழுதப்பட்டவை. ஏசு கிறிஸ்துவின் மதத்தை இந்தியர்களிடையே பரப்புவதற்காக அவர் இத்தாலியிலிருந்து வந்தவர். 1680-ல் பிறந்தவர். இருபது வயதிலேயே மத போதகராக இந்தியாவுக்கு வருவது என்று தீர்மானித்துக் கோவாவுக்கு வந்து சேர்ந்தவர். பத்து, பதினைந்து ஆண்டுகள் கோவாவிலே தங்கித் தென்னிந்தியாவுக்கு வருவதற்குத் தயார் செய்து கொண்டார். இத்தாலிய மொழியுடன், லத்தீன், கிரீக்கு முதலிய ஐரோப்பிய மொழிகளையும், இந்தியா வந்தபின் தெலுங்கு, சம்ஸ்கிருதம், தமிழ் முதலிய இந்திய மொழிகளையும் திருத்தமாகக் கற்றுக்கொண்டார். 1715 அல்லது 1720 வாக்கிலே மதுரை வந்து சேர்ந்தார். மதுரையைச் சேர்ந்த சுப்ரதீபக் கவிராயருக்கு மேக நோய் கண்டிருந்த போது, தம் ஊர் மருந்தைப் பிரயோகித்து அவரைக் குணப்படுத்தினார். அதற்குப் பிரதியாக அவரிடம் தமிழை முறையாகக் கற்றுக்கொண்டு, செய்யுள் இயற்றவும், பேசவும் அறிந்தார். தமிழ்நாட்டின் பழக்க வழக்கங்களையும் தெளிவாகக் கற்றுக்கொண்டார்.

இந்தியர்களிடையே இந்தியச் சாமியாராகித் துணிந்து செயலாற்றினால் ஒழிய உயர்ந்த சாதியினர் என்று கருதப்பட்டவர்கள் கிறிஸ்தவ மதத்துக்கு மாற மாட்டார்கள் என்கிற சித்தாந்தத்துடன் ஜொர்பிலி என்று ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் ஒரு நூற்றாண்டுக்கு முன் தத்துவபோதக சாமியார் என்று பெயர் வைத்துக் கொண்டு தமிழர்களிடையே நடமாடினார். அவர் தம் கிறிஸ்தவப் பிரசாரத் துறையிலே ஓரளவு வெற்றியும் பெற்றார். ஆனால் ஐரோப்பிய கிறிஸ்தவ அதிகாரிகளே அவர் செய்தது தவறு என்றார்கள். சில சிரமங்களையும் அவருக்கு விளைவித்தார்கள். அதே வழியிலே செல்வது என்று பெஷி தீர்மானித்தார்.

இத்தாலியப் பெயர் கான்ஸ்டான்ஷியஸ் பெஷ்கி. சாதாரணமாக அவரைப் பெஷி என்றும் சொல்வார்கள். தமிழில் வீரமாமுனிவர் என்றும், சம்ஸ்கிருதத்தில் தைரியநாத ஸ்வாமி என்றும் பெயர்சூட்டிக் கொண்டு, பெஷி சமய பிரசங்கங்கள் செய்து கொண்டும், எதிர்ப்பட்ட பண்டிதர்களுடன் விவாதம் செய்து கிறிஸ்து மதஸ்தாபனமும், நிரூபணமும் செய்து கொண்டும் சற்றேறக்குறைய முப்பது வருஷங்கள் தமிழர்களிடையே ஒரு தமிழராக, முப்புரிநூலும் பாதக் குறடும், பல்லக்கும், சைவ உணவுமாக, நடமாடியிருக்கிறார் என்று தெரிகிறது. திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் தான் விசேஷமாக நடமாடினார். அன்னியர் என்று பிறர் அறிந்து



வீரமா முனிவர்



ஐ. நா. தினம்

சமீபத்தில் அமெரிக்காவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் தினக் கொண்டாட்டத்தின் ஒரு அம்சமாக இன்னிசை விழாவும் நடைபெற்றது. பல தேசத்து இன்னிசைகள் அமெரிக்காவிலும் இதர கண்டங்களிலும் டெலிவிஷன் மூலம் ஒலிபரப்பப்பட்டன. அதில் பங்கெடுத்துக் கொண்டவர்களில் பிரபல இந்திய ஸித்தார் வித்வான் பண்டித ரவி சங்கரும் ஒருவர். ' ஸால் பீட்டெல்'' என்னும் நிலையத்தில் நடைபெற்ற இந்த இன்னிசை ஒலிபரப்புக்காக ரவிசங்கர் ஒத்திகை பார்த்துக்கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

கொண்டு விடா வண்ணம் தமிழ் பேசி, இந்திய சாஸ்திர புராண மத சம்பந்தமான விவாதங்கள் நடத்தி, கிறிஸ்தவப் பிரசாரம் செய்த மனிதரைத் தைரிய நாதஸ்வாமி, வீரமாமுனிவர் என்று சொல்வது முற்றிலும் பொருந்தும்தான்.

பிரெஞ்சுக்காரர் வசமிருந்த திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றிய சந்தாசாஹிபைப் போய்ப் பார்ப்பதற்காக பெஷி பர்ஸிய மொழியும், ஹிந்துஸ்தானியும் கற்றுக் கொண்டார் என்று சொல்லுவார்கள். சந்தாசாஹிப் அவரைக் கண்டு, அவர் அறிவையும் வியந்து பாராட்டி, இஸ்மத்தி சாமி என்று புதுப் பெயர் தந்து, அவரைத் தம்முடைய மந்திரியாக ஏற்றுக் கொண்டான் என்றும் சொல்லுவார்கள். அது உண்மையோ அல்லவோ—மந்திரிப் பதவிக்கு உரியபடி பணியாட்களும் பல்லக்கும் வைத்துக் கொள்ள அவரை அனுமதித்தான். வருஷத்தில் பன்னிரண்டாயிரம் ரூபாய் வரவுள்ள நாலு கிராமங்களை அவருக்கு இனாமாகவும் தந்தான். சந்தாசாஹிப் திருச்சிராப்பள்ளியிலிருந்து விரட்டப் பட்ட பிறகும் கூட, அவர் பெயருக்கு அளித்த கிராமங்கள் அவரிடமே இருந்தன. 1746ல் அவர் எல்லோராலும் மதிக்கப்பட்டவராகவே இருந்தார். திருநெல்வேலியில் ஏதோ ஒரு கிராமத்தில் புதைக்கப்பட்டார் அவர். உயிருடன் இருந்து பல பெயர்களுடன் விளங்கிய பெஷியின் கல்லறையிலே ஒரு பெயரும் செதுக்கப்படவில்லை ; அவர் எங்கே புதைக்கப்பட்டிருக்கிறார் என்பதே இப்போது தெரியவில்லை.

பல்லக்கும், பணியாட்களும், சிஷ்யர்களுமாக நாடெல்லாம் திரிந்த பெஷிப் பாதிரியாருக்கு உண்மை ஞானிகளையும், போலி ஞானிகளையும் அறியச் சந்தர்ப்பம் நிறையவே இருந்தது என்று சொல்லலாம். ஒரு விதத்தில் சொல்லப் போனால் அவர் போட்டதே காரியார்த்தமாக ஒரு போலி ஞானியாரின் வேஷம்தானே! தம்காலத்துக் குருமார்களை இலேசாகக் கேலி செய்து வேடிக்கை செய்யும் உத்தேசத்துடன் அவர் பரமார்த்த குரு கதைகளை எழுதினார். தமிழ் மொழியை அன்புடன் கசடறக் கற்றதின் விளைவாக அவருக்கு நன்றாக எழுத வந்தது. பேச்சு பாஷையிலே, எளிய சந்தத்திலே, நாடோடியாக ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் காதில் விழுந்த பல கதைகளை உருட்டித் திரட்டி உருவாக்கித் தந்திருக்கிறார். அது வரையில் தமிழில் வசனம் இந்த மாதிரி ஒரு தனி நூலுக்கு உபயோகப்பட்டதில்லை, வரப்போகிற தமிழ் வசனம் இப்படித்தான் அமைய வேண்டும் என்று நிதானித்து உணர்ந்தவர் போல் இந்தக் கதைகளை எழுதியிருக்கிறார். பல விதங்களில் கொச்சையாகவும், ஓரளவுக்குச் சுற்றிவளைப்பதாகவும் இருந்தாலும் கூடச் சுமார் நூற்றி ஐம்பது வருஷங்களுக்குப் பிறகு வர இருந்த பாரதியார் கையாளப் போகிற வசனத்தின் பல அம்சங்கள் பெஷிப் பாதிரியாரின் வசனத்திலே இருக்கின்றன என்று சொல்வது மிகையாகாது.

இன்னொரு விதத்தில் பார்த்தாலும் கூட, பெஷிப் பாதிரியார் பிற்காலத்துப் புதுத் தமிழ் வளத்தை உண்டாக்கித் தருகிற வழியிலே தம் வசனத்தைக் கையாண்டிருக்கிறார் என்று சொல்ல வேண்டும். ஐரோப்பிய இலக்கியங்களில் ஓரளவு பயிற்சியுள்ள பெஷிப் பாதிரி

யாருக்கு இஸ்பானிய வீரசரித்திரக் கதைகள் நன்கு தெரிந்திருக்கத்தான் வேண்டும். டான் க்விஜோட் என்கிற நாவலில் வருகிற கதாநாயகனின் சாயல் இந்தப் பரமார்த்த குருவினிடம் வீசுகிறது என்று சொல்வது தவறே யாகாது. அசடர்தான்; அஞ்ஞான குருதான்; அவிவேகம் நிறைந்தவர்தான்; கிண்டலுக்கும், கேலிக்கும் பாத்திரமானவர்தான். ஆனாலும் நமது அநுதாபத்துக்கு உரியவராகச் சிருஷ்டித்திருக்கிறார் அவரை தமிழ் நாட்டுக்கு ரஸிக்கும் இந்த டான் க்விஜோட் பாத்திரம் என்று பெஷி நிர்மாவித்தது 1725—ல். சற்றேறக் குறைய நூற்றி ஐம்பது வருஷங்களுக்குப் பிறகு தமிழில் முதல் நாவலை எழுத வந்த தமிழ்க் கிறிஸ்தவர் வேதநாயகம் பிள்ளையும், இதே டான் க்விஜோட்டை ஞாபகத்தில் வைத்துக் கொண்டுதான் நமக்குப் பிரதாப முதலியாரைச் சிருஷ்டித்துத் தந்திருக்கிறார் என்று சொல்ல வேண்டும்.

புதுத் தமிழ் இலக்கிய வளத்துக்கு அடிகோலி, அஸ்திவாரம் போட்டுத் தந்தவர் என்று பெஷியைக் கொண்டாடுவது தகும். அவருக்குத் தமிழில் இருந்த ஆர்வம் அவருடைய மற்ற நூல்களிலும் தெரிகிறது என்றே சொல்லலாம். சாதாரணமாக, இன்றுவரை எழுதப்பட்டுள்ள தமிழ் இலக்கிய சரித்திரங்கள் எல்லாம் அவருடைய கிறிஸ்தவக் காவியமான தேம்பாவணியைச் சொல்லாமல் விடுவதில்லை. அதே போல் தமிழ் அகராதியைப் பற்றி எழுதுபவர்கள் எல்லோரும் பெஷியின் சதுரகராதிதான் தமிழில் முதன் முதலாக ஏற்பட்ட அகர வரிசை அகராதி என்று குறிப்பார்கள். தமிழ் எழுத்திலும் ஒரு சீர்திருத்தம் செய்ததாக அவருக்குப் புகழுண்டு. இது தவிர அவர் கிறிஸ்தவ சமயப் பழக்கங்கள், பிரார்த்தனைகளை விவரித்துப் பல வசன நூல்கள் எழுதினார். பல பிற பாஷைத் தமிழ் அகராதிகள் எழுதினார். லத்தீனிலும் ஆங்கிலத்திலுமாக அவர் பல செந்தமிழ், கொடுந் தமிழ் இலக்கணங்கள் செய்திருக்கிறார். பல செய்யுள் பிரபந்தங்கள் செய்திருக்கிறார். திருக்குறளை அந்த நாட்களில் லத்தீன் பாஷையில் விரும்பி மொழிபெயர்த்தார். பண்டைத் தமிழ்க் கவிகளில் சிறந்த பலவற்றைத் தேர்ந்தெடுத்து, சொந்தக் குறிப்புகளுடன் அவர் லத்தீனில் மொழிபெயர்த்து வைத்திருந்ததாகத் தெரிகிறது.

சமீப காலத்தில்தான் பெஷிப்பாதிரியாரைத் தமிழ்வசனத்தின் தந்தை என்று சொல்லுகிற பழக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும். அந்தப் பதவிக்கு அவர் எவ்வளவு லாயக்கானவர் என்பது பரமார்த்த குரு கதை என்னும் அவிவேக பரிபூரண குரு கதையைப் படிப்பவர்களுக்குச் சுலபமாகவே தெரியும். காலத்தால் முதலில் தமிழ் வசனத்தை இப்படித் தனித்துணுக்காகக் கையாண்டார் என்பதனால் மட்டுமன்றி, தமிழர்களின் ரஸனையையும் போக்கையும் உணர்ந்து தமிழுக்கு ஒப்புகிற முறையிலே எழுதினார் என்பது அவருடைய தனிப் பெருமை. பகுதி பகுதிகளாகவும், அங்கும் இங்குமாகவும், உருமாறியும் தாம் இப்போது சாதாரணமாக இந்நூல் நமக்குக் கிடைக்கிறது என்பது நாம் பெருமைப்படக் கூடிய விஷயம் அல்ல; பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே இந்த நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்றும் வெளியானதாகத் தெரிகிறது. அதுவும் இப்போது நமக்குக் கிடைப்பதில்லை.

நாலு சிஷ்யர்கள் கூடிக்கொண்டு குதிரை முட்டை வாங்கிய கதையும், ஊசி வாங்கிக் கொண்டு வந்த மட்டி மடையன் முதலானோர் ஊசியை ஒரு பனங் கட்டையில் செருகிவிட்டுத் தேடிக் கிடைக்காததையும், நுனிக் கிளையில் நின்றுகொண்டு அடிமரம் வெட்டிய கதையும், சோறு கொதிக்கும்போது தாளம் போட்டுத் தப்பாக வருகிறது என்று சோற்றுப் பானையைக் கவிழ்த்த கதையும் தமிழர்கள் என்றும் மறக்க முடியாத பொக்கிஷங்கள். இவற்றையெல்லாம் திரட்டி, பேசும் தமிழிலே இலக்கியமாக்கித் தந்த பெஷிப் பாதிரியாரை நாம் இன்னும் நன்றாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். இன்றையப் புதுத் தமிழ் வளத்தைச் சாத்தியமாக்கியவர்களிலே பெஷியை முதல்வராகக் கொண்டாட வேண்டியது மிகவும் அவசியம்.

கல்கி அக்டோபர் 5-ந் தேதி இதழில் டினோபால் விளம்பரத்தில் தயாரிப்பாளர்களின் பெயர் ஸுஹ்ருட் கெய்கி டிரேடிங் பிரைவேட் லிமிடெட், வாடி வாடி, பரோடா என்பதை ஸுஹ்ருட் கெய்கி பிரைவேட் லிமிடெட் வாடி வாடி, பரோடா என்று திருத்தி வாசிக்கவும்

கருமையை வளர்க்கும் கூந்தல் தைலம்



வாக்குறுதியைக் காக்கிறது!

கருமையை வளர்ப்பதில் நம்பகமானதும் சிறப்பாகக் கூந்தலைச் சீவி முடிவதற்கும் உகந்த கூந்தல் தைலம் வாஸ்மால். கூந்தல் சுகாதாரத்துக்கு இன்றியமையாத எல்லா அம்சங்களும் ஒருங்கே கொண்டது.

மற்ற தைலங்களைப்போல வாஸ்மாலை உபயோகிக்கலாம். அல்லது காலை ஸ்நானத்துக்குப் பிறகும் தலையில் தடவலாம். வாஸ்மாலை நன்றாக மயிர்க்கால்கள் சென்றடையும் வரைத் தேய்த்து, தங்கள் கூந்தலில் பளபளப்பான கருமை படர்ந்து வருவதைக் காணலாம். மற்ற சிறந்த கூந்தல் தைலத்திற்காகும் செலவைவிட வாஸ்மாலுக்கு அதிகவிலை ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை.

வாஸ்மால் கூந்தல் தைலம் 5 அவுன்ஸ் பாட்டில் ரூ. 2.00
1 பவுண்டு பாட்டில் ரூ. 4-75
வாஸ்மால் போமேட் ரூ. 2.50, உள்ளூர் வரிகள் தனி

Vasmol HAIR DARKENER

எல்லா பிரபல ஸ்டோர்களிலும் மோசடி செய்ய முடியாத மூடியுடன் கிடைக்கும்

ஹைஜினிக் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்
பி. ஓ. பாக்ஸ் 1192, பம்பாய்-1

விநியோகஸ்தர்கள் : ஆர். எல். கௌடர் & கோ., 59, பந்தர் தெரு, சென்னை

மகத்தான ஆரம்பம்!

காங்கிரஸ் பொருட்காட்சி 1958-59

மத்திய அரசாங்க உள்நாட்டு இலாக்கா மந்திரி

கனம் ஸ்ரீ கோவிந்த் வல்லப பந்த் அவர்களால்

21-12-58 மாலை 4-15 மணிக்கு

துவக்கி வைக்கப்படும்

இவ்வாண்டின் மகோன்னதமான சண்காட்சி

காங்கிரஸ் மைதானம்
சென்னை-6

வி. ஆர். ராமஸ்வாமி, M. L. A.,
காரியதரிசி
பொருட்காட்சிக் குழு



பாகவதமாதிய

பக்தி வயல்

15. ரிஷபாவதாரம்

பரீக்ஷித்து சுகரிடம், "பிரியவ்ரதன் பக்தன் ஆயிற்றே, இல்லறத்தில் எவ்வாறு இச்சையுற்ருன்? பற்றுள்ளவனுக்குக் கண்ணனிடம் பக்தி எப்படி அசையாது நின்றது?" என்று வினவினர்.

சுகர் அதற்குப் பதில் உரைத்தார்: கண்ணனுடைய பாதம் என்ற தேனைப் பருகுவோர், இடையூறு வந்தாலும் தம் வழியை விட்டு விலகுவதில்லை. நாரதரிடமிருந்து பரமார்த்த தத்துவத்தைத் தெரிந்துகொண்ட பிரியவ்ரதன் ஆன்ம சிந்தனையிலேயே காலம் கழிக்க எண்ணினன். ஆனல் தன் தந்தை மனுவின் வேண்டுகோளுக்கு இணங்கிப் பூமியை ஆளவேண்டி வந்தது.

ஒரு சமயம் பிரமதேவன் தன் பரிவாரங்களுடன் பூமியை அடைந்தான். கந்தமாதன பர்வதத்தின் ஒரு சாரியில் நாரதரும், பிரியவ்ரதனும், அவனுடைய தந்தை மனுவும் வீற்றிருந்தார்கள். தூரத்திலேயே தன் தந்தையின் வாகனமாகிய அன்னத்தை நாரதர் கண்ணுற்ருர். மூவரும் பிரமனை வணங்கினர்கள். பிரமன் பிரியவ்ரதனிடம் பின்வருமாறு மொழிந்தார். "நான் உரைக்கும் உண்மையைக் கேளாய். புலனுக்குப் புலப்படாத கடவுள்மீது குறை கூறிப் பயனில்லை. தன் முயற்சியாலும் பிறர் உதவியாலும் அவன் வகுத்த விதியை மீற முடியாது. உயிருள்ளவருக்கு உடம்புடன் தொடர்பு இருந்தே தீரும். குருடனுக்குக் கண் படைத்தவன் வழி காட்டுவது போல் கடவுள் நம்மை நன்மையிலும் தீமையிலும் அழைத்துச் செல்லுகிருர். விதியின் பயனை அனுபவித்து ஒழிப்பதற்காக முக்தி நிலையை அடைந்தவரும் அவ்விதிப் பயன் தீரும் வரை தேகத்தைச் சுமந்து வருகின்றனர்.

பௌராணிகர்

அவர் வாழ்க்கை, சொப்பனம் கண்டவன் அதைப் பின் நினைப்பதுபோல், உடம்புடன் பற்று இல்லாதது. புலனை அடக்காதவன் கானகத்தில் திரிந்தாலும், மறுபடியும் பிறக்கிருன். ஐம்புலனும் மனமும் கூடின ஆறு பகைவர்கள் அவனுடன் உறவாடுகிருர்கள். ஆறையும் வென்ற மேலோருக்குத் தீங்கென்பது நிண்டாது. இல்லறத்தில் இருந்து கொண்டு இவ்வாறு எதிரிகளையும் அடக்க வேண்டும். நீயோ, அனந்தனுடைய தாள்களைப் பற்றிக் கொண்டு இந்த விரோதிகளை வென்று விட்டாய். ஆகையால் புவிமீது வாழ்ந்து கொண்டு கடவுள் கொடுத்த இன்பங்களை அனுபவிப்பாய்."

பிரமனின் கட்டளையைப் பிரியவ்ரதன் ஏற்றுக்கொண்டான். விச்வகர்மாவின் மகளான பர்ஹிஷ்மதி என்பவளை மணம் புரிந்து, பத்துப் புதல்வரையும், ஊர்ஜஸ்வதி என்ற பெண்ணையும் பெற்ருன். மற்ருெரு மனைவியிடம் மூன்று பிள்ளைகளைப் பெற்ருன். பிரியவ்ரதன் பல கோடி நாருண்டு புவிமீது ஆட்சி செலுத்தினன்.


மேருவை வலம் வரும் கதிரவன், ஒரு பகுதியைப் பகலாக்கி, மற்ருெரு பகுதியை இருளிலே நிறுத்தியிருப்பதைப் பிரியவ்ரதன் ஒரு தருணம் கண்டு கோபம் கொண்டான். ஏழு முறை சூரியனுடன் பூமியைச் சுற்றி வந்து இரவை அடியோடு அகற்ற முயன்ருன். பிரியவ்ரதனுடைய தேர்ப்பாதைகள் ஏழு சமுத்திரங்கள் ஆகி, இப் பூமியை ஏழு தீவுகளாக வகுத்தன. இவ்வேழு பிரிவுகள் ஒவ்வொன்றிலும் தன் மைந்தன் ஒருவனை அரசனக நியமித்தான். தன் மகளை அசுர குருவான சுக்ராச்சாரியாருக்கு மணம் செய்து வைத்தான். ஆண்டவனை அண்டினவருக்கு எதுதான் இயலாது?

இவ்வாறு நாட்கள் கடந்தன. நாளடைவில் பிரியவ்ரதனுக்கு இச் சிற்றின்ப வாழ்க்கை பெருவெறுப்பை அளித்தது. "புலன்களால் ஏவப்பட்டு இந்த இன்பமென்ற பாழும் கிணற்றில் விழுந்தேனே போதும், போதும். மாதருக்கு நேரம் போக்க வந்த குரங்கானேன்!" என்று தன்னை நொந்து கொண்டான். செல்வத்தையும் மனையாளையும் பிணமெனத் தள்ளிவிட்டு, நாரதர் தனக்கு முன்னமே சொன்ன வைராக்கிய வழியில் வாழ் நாளைக் கழித்தான்.

பிரியவ்ரதனைக் குறித்துப் புராணத்தில் பின்வருமாறு பாடியிருக்கிருர்கள்:

"சசவின்றி யார்தான் செய்வார்
பிரியவ்ரதன் செய்த பெருஞ்செயலை?
இருளை அகற்ற முன்வந்து,
ஏழுகடலைத் தான் தந்து
புவிதனை ஏழுதீவாய்ப் பிரித்து
மாந்தர் சுகித்திருக்க நிதம்
மலையும் காடும் வகுத்துத் தந்தனன்"
"பரமனின் அன்பருக் கன்பனும்
மூவுலகில் மலிந்திருக்கும்
செல்வமும்; தன்வினையால்
தேங்கி நிற்கும் நன்மையும்
சித்தியினால் சித்திக்கும் பயன்களும்
நரகமெனத் தீண்டாத தீரனிவன்"

பிரியவ்ரதன் மகன் ஆக்னீதரன் ஜம்பூத்வீபத்தை ஆளலானான். தனக்குமகன் வேண்டுமென்ற ஆசை மேலிட்டு பூஜா திரவியங்களைச் சேகரித்துக் கொண்டு, மந்தர மலைச்சாரலில் பிரமனைப் பூஜை செய்தான். இதை அறிந்த பிரமன், தன் அரங்கில் கானம் செய்யும் பூர்வசித்தி என்ற



பெயர் பூண்ட அப்ஸரமங்கையை அவ்விடத்துக்கு அனுப்பினான். அரசனுடைய ஆசிரமத்தைச் சூழ்ந்து மனத்தைக் கவரும் பூங்கா இருந்தது. பூர்வசித்தி அங்குமிங்குமாய் அவ்விடத்தில் உலாவினாள். கண்களை மூடிக்கொண்டு சமாதியில் ஆழ்ந்திருந்த அரசகுமாரன், ஒலிக்கும் கால் சலங்கையின் ஓசை கேட்டுக் கண் மலர்ந்து நோக்கினான். பூர்வ சித்தியின் நடை அழகைக் கண்டு வியந்தான். பெண் வண்டெனப் பூவை நுகரும் மங்கையின் மாய விழியும், லலித நடையும், இனிய மொழியும் பூ அம்பு பொருந்திய காமனை மாந்தர் மனத்திடம் அழைத்துச் செல்லும் வழியென விளங்கின. அவளுடைய அழகொத்த சுவாசத்தின் நறுமணத்தை ஆசையுடன் அண்டி நிற்கும் வண்டினத்தின் துயர் பொறாமல் விரைந்தோடும் ஆரணங்கின் ஸ்தனங்கள் குலுங்கின. தலையும் அசைந்தது. மேகலையும் எழிலுடன் நழுவி நின்றது. மன்னவன் மைந்தனும் மீன்கொடியான் வசமாகிப் பாமரப் பித்தனைப்போல் பேசினான்: "முனிவரே! நீங்கள் யார்? எதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள்? புருவமென்ற வில்லாலேது வேடிக்கைக்கா, இல்லை காட்டிலிருக்கும் ஏமாந்த விலங்குகளைப் பிடிப்பதற்கா? கடைக்கண் பார்வை என்ற பாணங்கள் கண் என்ற தாமரைச் சிறகுடன் குளிர்ந்திருப்பினும் கூராகவே உள்ளன. வண்டுகள் சீடரென உங்கள் அருகில் வேதம் ஓதுகின்றன. கால் சலங்கை, காணாத கூட்டிலிருக்கும் கிளியைப் போல் சலசலக்கின்றது. கதம்ப மலரைப் போல் இடையில் துலங்கும் மஞ்சள் ஜோதிதான் என்ன! அதைச் சுற்றித் தீபினால் செய்ததோர் வளையம் என்ன! என் கண்ணைப் பறிக்கும் இரு கொம்புகளில் என்ன செல்வத்தைச் சேர்த்து வைத்திருக்கிறீர்? தாம்பூலத்தின் நறுமணம், ஓமத்திலிட்ட ஆஹுதியைப் போல் ஆசிரமமெங்கும் பரவி நிற்கிறது. மகர குண்டலமணிந்த நீங்கள் விஷ்ணுவின் கலையா? உங்கள் வதனம் என்ற தடாகத்தில் கண்களே பாயும் மீன், பற்களே அன்னவரிசை, சுருண்ட கூந்தலே சுரும்பு. இந்தக் காமம் எறிய காற்று உங்கள் ஆடையை அசைக்கிறது. எத்தவம் செய்து மற்றவர் தவத்தைத் தொலைக்கும் இவ்வழகைப் பெற்றீர்? வாரும், நாம் இருவரும் சேர்ந்து தவம் புரிவோம். பிரமன்தான் உங்களை இவ்விடத்துக்கு ஏவினானோ? என் மனமும் கண்ணும் உம்மை விட்டு அசையாதிருக்கின்றன. ஆகவே, அழகிய மங்கையே! என்னை எங்கு வேண்டுமானாலும் அழைத்துச் செல்வாய்" என்றான்.

இவ்வாறு பெண்ணிடம் பேசுவதில் பண்டிதனான ஆக்னீதரன் சொல் கேட்டு அவளும் மயங்கினாள். இருவரும் கூடிப் பல்லாயிரத்தாண்டு போகங்களை அனுபவித்தனர். அவர்களுக்குப் பிறந்த மைந்தர் நாபி முதல் ஒன்பது பேர்கள். நாளடைவில் பூர்வசித்தி புவியை விட்டுத் தன் உலகேகினாள். இன்பம் திகட்டாத ஆக்னீதரன் தவப்பயனால் தானும் அவ்வுலகை எய்தினான். அதன்பின் நாபி என்ற ஆக்னீதர

னுடைய முதல் மகன் ஜம்பூத்வீபத்தை ஆண்டு வந்தான். அவ்வரசன் சந்ததியின்றித் தன் மனையாள் மேரு தேவியுடன் விஷ்ணுவைக் குறித்து யாகம் செய்தான். பக்தரிடம் பிரியமுள்ள பகவான் நாபியின் எண்ணத்தை நிறைவேற்ற நிச்சயித்துத் தானாகவே வேள்வியில் தோன்றினார். பொக்கிஷம் பார்த்த பரதேசியைப் போல் அனைவரும் களித்துத் தலைவணங்கி நின்றார்கள். வேள்வியை நடத்தும் அந்தணர்கள் விஷ்ணுவைப் பின்வருமாறு புகழ்ந்தனர்.

"'வணக்கம்' என்ற வார்த்தையைத் தவிர எல்லாம் நிறைந்த உங்களுக்கு நாங்கள் வேறு எதைக் கொடுப்போம்? நாங்களோ விருப்பமுடையவர்கள். இதை அறிந்தே தேவரீர் தானாகத் தோன்றியிருக்கிறீர். இது பெரிய வரம். ஆகவே தடுமாறியும், விழுந்தும், தும்மியும், தூங்கியும், வியாதியால் வருந்தியும், பலவாறு துன்புறும் வேளையிலும் தன் நினைவு குன்றிப் போய் உயிர் நீங்கும் நிலையிலும், உன்னுடைய திருநாமம் நாவிலே நிற்க வேண்டும்.



"மேலும், இவ்வரசன் விண்ணுலக வாழ்வையும் பிறப்பில் நின்றகலும் பேற்றையும் அளிக்கவல்ல தேவரீரிடம், உங்களைப் போல் ஒரு புதல்வன் வேண்டுமென்று கோருகிறான். குபேரனிடம் உமி கேட்ட கதையாக இருக்கிறது இவன் செயல். எங்கள் மதியின்மையை மன்னித்தருள வேண்டும்" என்றனர். அதற்குப் பகவான் "என்னைப் போன்ற மகன், மன்னனுக்குப் பிறக்க வேண்டுமென்று கேட்டு என்னையே சிக்கலில் மாட்டி விட்டீர்கள். எனக்கு நிகர் யாருமில்லை. ஆயினும் உங்கள் மொழி பொய்யாகக் கூடாது. ஆகவே என்னுடைய ஓர் அம்சமாக நானே நாபிக்குப் புதல்வனாகப் பிறக்கிறேன்" என்றார்.

இவ்விதம் வாக்கருளிவிட்டு பகவான் மறைந்தார். பிறகு மாசில்லா உருவுடன் மன்னவனை மகிழ்விக்கவும், துறவியருக்குத் தர்மத்தைத் தானாகச் செயலில் காட்ட வேண்டியும் மேருதேவிக்கு மைந்தனாகப் பிறந்தார்.

அக்குழந்தைக்கு நாராயணனுடைய அடையாளங்கள் இருந்தன. எல்லா வகையிலும் மேன்மை பொருந்திய அவ்வரச குமாரனுக்கு "ரிஷபன்" என்று பெயர் வைத்தார்கள். ரிஷபதேவனுடைய பெருமையைக் கண்டு பொறாமை கொண்ட இந்திரன் அஜநாபம் என்ற அவன் நாட்டில் மழை பொழியாது நிறுத்திவிட்டான். இதைப் பார்த்து ரிஷபர் நகைத்து, நாடெங்கும் மழை பெய்யும்படி செய்தார்.

புவியெங்கும் புகழ் எய்தின மகனுக்கு முடிசூட்டி விட்டு நாபி பத்ரிகாச்ரமம் சென்றார். நாபியைப் புராணம் பின்வருமாறு கொண்டாடுகிறது :—

"ஈசனையே மகனாகப் பெற்ற நாபிக்கு நிகரில்லை; அந்தணருக்கு அன்பனாய் வேள்வியிலே பரமனை உருவோடு கண்ணுற்ற வள்ளல்."

ரிஷபர் ஜயந்தி என்பவளை மணந்து நூறு புதல்வர்களைப் பெற்றார். அவர்களுள் முதல்வன் பரதன் என்பவன். நற்குணங்களுக்கு இருப்பிடமான அவன் பெயர்தான் இந்நாட்டுக்குத் தொன்று தொட்டு இந் நாள்வரையில் வழங்கி வருகிறது.

தன்னுள்ளே தான் ரமித்து, வினைமீறி வீற்றிருக்கும் பகவான் ரிஷபர், மானிடரைப் போல் பல நாள் இல்லறம் நடத்தி மற்றவருக்கு நல்வழியைக் காட்டி வந்தார். ஆனால் ஈசன் ரிஷபாவதாரம் செய்தது துறவி யோகத்தைக் காண்பிக்கவே. ஆகையால் ரிஷபர் செய்த உபதேசமும், அவருடைய நடத்தையும் உள்ளிருக்கும் ஆன்மாவைத்தானென்று தெரிந்து கொண்டு, மற்றவருடன் பற்றைப் புறக்கணித்து, உடலைத் தானல்லவெனத் தெளிந்து, தனித்துத் திரிந்து

முக்தி அடையும் வழிக்கு வழிகாட்டி யென அறிய வேண்டும். நாட்டைத் தம் மகன் பரதனிடம் ஒப்படைத்துத் தான் துறவறம் பூணும் தருவாயில் ரிஷபர் இவ் வழியைத் தம் மைந்தருக்கு எடுத்துக் காட்டினார்.

"கடவுளோடு கலந்து களிப்பதற்குக் கருவியான இவ் வுடலை, நாயும் பன்றியும் பயின்று வரும் இன்பத்துக்கு இரையாக்குவது ஈனச் செயல். முன் செய்த செயல்களுக்கு உடலோடு பிறப்பது மாறாப் பயன்; உடலையே தானென்று திண்ணம் கொண்டு, புலனுக்குச் சேவகனாய் மனைவியென்றும் மக்களென்றும் தன்னுடைய வீடென்றும் வருந்துகிறான் மானிடன்; வினைப்பயனால் வந்திருக்கும் மனதென்ற கட்டவிழ்ந்தால் ஜீவனுக்கு 'எனதெ'ன்ற ஆசையும் 'நான்' என்ற பெருமையும் விலகிப் பரமனைச் சேரும் சமயம் வரும். பெரியோரையும், மறையையும் நம்பி; பிரம்மசரியத்தில் நிலைத்து நின்று; தன்னையே எச்சரித்து, நாக்கை அடக்கி, எங்கும் நிறைந்திருக்கும் அனந்தனை அறிவதே மெய்ஞானமென்று உறுதியாய் தியானத்தில் ஆழ்ந்து; நிச்சயமும் முயற்சியும் பகுத்தறிவும் கருவிகளாய்க் கைக்கொண்டு, எவன் பிறவியென்ற சிறையினின்று தன்னை விடுவித்துக் கொள்ளுகிறானோ, அவன் நழுவாத நல் வீட்டை அடைகிறான். வளர்ந்து வரும் ஜங்கமங்களும் வளராத தாவரங்களும் கடவுள் இருக்கும் கோயில் என்று கருதுவதே மேலான பூஜையாகும். ஆகையால் எல்லாப் பிராணிகளையும் ஒருமனத்தோடு எண்ண வேண்டும்."


இவ்விதம் நன்மொழி கூறிவிட்டு, ரிஷபர், தம் நடத்தையால் துறவறம் பூண்டு வாழும் வழியைப் பிறருக்குக் காண்பிக்க வேண்டி, அனைத்தையும் உதறி உடலைத் தவிரத் தமதென்று வேறொன்றுமில்லாது வெளியே சென்றார். பித்தனைப்போல் பேசாமல், பிசாசைப் போல் தலை விரித்து, அடித்தாலும் வைதாலும் ஏனென்று கேளாமல், தன்னுள்ளே தான் களிக்கும் அழியாத ஜோதியாய், நாட்டிலும், காட்டிலும் திரிந்து வந்தார். பின்னர், தான் பயிலும் யோகத்தை மாந்தர்கள் அறியவில்லை என வருந்தி, ஒன்றுமே செய்யாமல் ஓரிடத்தே இருந்து கொண்டு, அங்கேயே உண்பதும் கழிவதுமாய் மலைப் பாம்பின் வழியையே பின்பற்றி நின்றார். மேலும், மாடும் மானும் போல் சென்று கொண்டே தின்பதும் நடந்துகொண்டே மற்றக் காரியங்கள் செய்வதுமாய் வாழ்ந்தார்.

முடிவில், சடலத்தை யோகிகள் விடும் வழியைக் காண்பிப்பதற்காக, சூட்சும சரீரத்துடன் உள்ளத் தொடர்பையும் விட்டு உள்ளிருக்கும் பரம்பொருளே தான் என்று திகழ்ந்தார். ஆனால் அவருடைய ஸ்தூலமான வெளி தேகம் மட்டும் பூமியில் திரிந்து கொண்டு வந்தது. ஒருநாள் இவர் குடகு மலையில் போய்க் கொண்டிருக்கும் பொழுது, காட்டுத் தீக்கிரையாகி, இவர் உடலும் சாம்பலாகிப் போயிற்று.

துறவிகளுக்கு வழிதிறந்த ரிஷபரைப் பற்றிப் புராணம் புகழ்ந்தது:

"எழுகடல் சூழ்ந்த இப் புவிமீது பாரதமாம் இந் நாடே மேலானது. நாராயணன் செய்த செயல்களைக் கொண்டாடும் மாந்தர்கள் இங்கிருப்பர். பிரியவ்ரதன் பரம்பரையில் பரமனே தோன்றித் தம் வாழ்க்கையால் வழி காட்டினார். சித்திகளில் இச்சைகொண்ட யோகிகளில் யார்தான் இம் மேல் வழியைப் பின்பற்றுவார்?"

ரிஷபரின் கதையைப் பாடுவோருக்கும் கேட்போருக்கும் வாசுதேவனிடம் பக்தி பெருகி வரும்.



பிறந்து 6 மாதங்கள்கூட ஆகவில்லை—

அவன் உட்கார ஆரம்பித்துவிட்டான்!

அவன் தாயார் அவனுக்கு

டூமெக்ஸ் பேபி புட் புகட்டுகிறாள்

என்பதைச் சொல்லவும் வேண்டுமா!

DX. 6258

டுமெக்ஸ் பிரைவேட் லிமிடெட், பம்பாய்-1



பாண்டிமா தேவி

எட்டாம் அத்தியாயம்

மதிவதனியின் மனக்கவலை

மதிவதனியின் சிந்தனைகள் இளவரசன் இராசசிம்மனைச் சுற்றியே வட்டமிட்டன. "இந்த நேரத்துக்கு அவருடைய கப்பல் எவ்வளவு தூரம் போய் இருக்கும்? எத்தனை தடவை? அவர் என்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பார்! எத்தனை தடவையாவது? மறந்தால்தானே பல தடவைகள் நினைக்க முடியும்? அவர்தான் என்னை மறந்திருக்கவே மாட்டாரே! அவராக நினைக்கா விட்டாலும் அந்தச் சங்கு அவர் கையிலிருந்து நினைப்பூட்டிக் கொண்டே இருக்கும்." தும்மல் வரும் போதெல்லாம் அவர் தன்னை நினைப்பதாகக் கற்பனை செய்து கொண்டாள் அவள். அத்தையும், தந்தையும் அன்று காலை சொல்லியது போல் அவர் தன்னை உடனே மறந்து விடுவாரென்பதை அவளால் நம்பவே முடியவில்லை. கடலுக்கு அப்பாலிருக்கும் உலகத்தை அறியாத அந்த அப்பாவிப் பெண்ணின் மனத்தில் அசைக்க முடியாததொரு நம்பிக்கையை, சிதைக்க முடியாததொரு கனவை, வேரூன்றச் செய்து விட்டுப் போய் விட்டான், முதல் நாள் சங்கு வாங்க வந்த அந்த இளைஞன். அவன் ஒருவனுக்காகவே தன் உள்ளமும், உணர்வும் தோற்றுத் தொண்டுபட வேண்டுமென்று தன்னைக் காக்க வைத்துக் கொண்டிருந்தது போல் அவளுக்குத் தோன்றியது. கால ஓட்டத்தின் இறுதிப் பேரூழி வரை கழிந்தாலும் அவனை மறுபடியும் அங்கே காணாமல் தன் கன்னிமை கழியாது போல் நினைவு குமுறிற்று அவளுக்கு. "நீ அவனைக் காணலாம்! பன்முறை காணலாம்...பிறவி, பிறவியாகத் தொடர்ந்து விலாசம் தவறாமல் வந்து கொண்டிருக்கும் உயிர்களின் வினைப் பிணிப்புப் போல் விளக்கிச் சொல்ல முடியாததோர் பிணைப்பு உங்களுக்கிடையே இருக்கலாம். இருக்க முடியும்!" என்பது போலத் தற்செயலான ஒரு தெம்பு அவள் நெஞ்சில் நிறைந்து கொண்டிருந்தது. அவநம்பிக்கையின் தளர்ச்சியை மறைக்க அவளாக உண்டாக்கிக் கொண்ட நினைவன்று அது. புனல் ஓடும் வழியில் புல் சாய்ந்தாற் போலவும், நீர்வழி மிதவை போலவும், தூண்டிலிட்ட காசுகன் கயிற்றில் கோவை பெறல் போலவும், தற்செயலான ஓர் தவிர்க்கமுடியாத நினைவு என்று அதைக் கூறவேண்டும்.

வடகடலில் இட்ட நுகத்தடி ஒன்று பல்லாண்டுக் காலமாகத் தள்ளுண்டு மிதந்து மிதந்து தென்கடலில் இட்ட துளையுள்ள கழி ஒன்றில் வந்து பொருந்திக் கொள்வது மாதிரிப் பொருந்திய நினைவு அது.

ஒவ்வொரு நாளும் செம்பவழத்தீவின் கடைவீதியில் கலகலப்புக்குக் குறைவே இருக்காது. அன்றும் அவளுடைய கடைக்கு யார் யாரோ வந்தார்கள். சங்கு வாங்கினார்கள். முத்து வாங்கினார்கள். பவழம் வாங்கினார்கள். வருபவர்களுக்கு விற்பதற்காகச் சங்கை எடுத்துக் கொடுக்கும் போதெல்லாம் சங்கோடு சேர்த்துப் பிடித்துக் கொண்ட அந்த ஆண்மகனின் கைகள் நினைவுக்கு

நா. பார்த்தசாரதி

வரும். உச்சி மரக்கிளையில் நின்று கொண்டு தன் உயிரைக் காப்பாற்றியதற்காக நன்றி கூறி அவளுடைய வளைக்கரங்களைப்பற்றிக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் சிந்திய காட்சி நினைவுக்கு வரும். அந்த நினைவுகளெல்லாம் வரும்போது மதிவதனி தன்னை மறந்து, தான் இருக்கும் கடையையும், கடையிலுள்ள பொருள்களையும், மறந்து எங்கோ போய் மீள்வாள்.



நேற்றுக் காலைவரை தன்னையும், தன்னுடையவர்களையும், தன் சூழ்நிலையையும் பற்றித்தான் அவளுக்கு நினைக்கத் தெரிந்திருந்தது. இப்போதோ, நினைப்பதற்கும் நினைவுகளை ஆளுவதற்கும் வேறு ஒரு புதியவன் கிடைத்து விட்டான். செம்மண் நிலத்தில் பெய்த பின் மழை நீருக்குத் தன் நிறம் ஏது? தன் சுவை ஏது? தன் மணம் ஏது?

மாலையில் அவளுடைய தந்தை கடைக்கு வந்து விட்டார். "பெண்ணே! கடையை நான் பார்த்துக் கொள்கிறேன். உன்னுடைய அத்தை உன்னை வீட்டுக்கு வரச் சொன்னாள். நீ போ" என்று அவளை வீட்டுக்கு அனுப்பினார்.

வீட்டுக்குச் செல்வதற்காக அவள் வீதியில் இறங்கி நடந்து கொண்டிருந்த போது அவளுக்குச் சிறிது தொலைவு முன்னால் நடந்து கொண்டிருந்த யாரோ இரண்டு மூன்று பேருடைய பேச்சு அவளுடைய கவனத்தைக் கவர்ந்தது. வேகமாக நடந்து அவர்களைக் கடந்து முன்னே சென்று விடாமல் அவர்களது பேச்சைக் கேட்டுக் கொண்டே பின்பற்றினாள் அவள்.

"அடே! உன்னைப்போல் பெரிய முட்டாள் உலகத்திலேயே இருக்க முடியாதடா. ஆள் தானாக வலுவில் தேடிக் கொண்டு வந்து நிற்பதுபோல் நின்றான். நீ வம்பு பேசி நேரத்தைக் கடத்தியிருக்காவிட்டால் உடனே அங்கேயே ஆளைத் தீர்த்திருக்கலாம்."

"போடா மடையா! நாம் தீர்ப்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கும்போது அவன்தான் உயிர் தப்பினால் போதுமென்று ஓட்டமெடுத்து விட்டானே?"

"நாமும் துரத்திக் கொண்டுதானே போனோம்! ஓடிக் கொண்டிருந்தவன் திடீரென்று மாயமாக மறைந்து விட்டானே? நாம் என்ன செய்யலாம்? பக்கத்துப் புதர்களிலெல்லாம் துருவிப் பார்த்தும் அகப்படவில்லையே?"

"கடலில் குதித்திருப்பானென்று எனக்குத் தோன்றுகிறதடா."

"எப்படியோ தப்பி விட்டானே? வேறொருவர் காணாமல் உலாவும் சித்து வித்தை — மாய மந்திர வசியம் ஏதாவது அவன் கையிலிருந்த அந்தச் சங்கில் இருந்திருக்குமோ, என்னவோ?"

"மாயமாவது, வசியமாவது! அதெல்லாம் ஒன்றுமில்லை. கடலில்தான் குதித்திருப்பான். அப்படியில்லையானால் இன்று காலையில் விடிந்ததிலிருந்து இவ்வளவு நேரமாக இந்தத் தீவு முழுதும் சுற்றி அலைந்தும் எங்கேயாவது ஓரிடத்தில் நம் கண்ணில் அகப்படாமல் போவானா?"

"நாகைப்பட்டினத்தில் போய் இறங்கியதும் நம்மை அனுப்பியவர்களுக்கு நாம் பதில் சொல்லியாக வேண்டுமே! இல்லையானால் நாம் செய்யாது போன செயலை நமக்கே செய்து விடுவார்களே?"

கடைசியாகப் பேசியவனுடைய குரலில் பயம் மிதந்தது. தெருக்கோடி வரை வீதியில் போய்க் கொண்டும், வந்து கொண்டும் இருக்கும் மற்றவர்களைப் பற்றிக் கவலையில்லாமல் இரைந்து பேசிக் கொண்டு நடந்தார்கள் அந்த மூவரும். மதிவதனி தற்செயலாகத் தெருவில் நடந்து செல்பவள்போல் கேட்டுக்கொண்டே சென்றாள். அந்த மூன்று பேரும் ஒரேமாதிரிச் சிவப்பு நிறத்தில் தலைப்பாகை அணிந்திருந்தனர். பார்ப்பதற்கு முரடர்களாகத் தோன்றினர். அவர்கள் பேச்சைக் கேட்டு எந்தச் சந்தேகத்தோடு அவள் பின்தொடர்ந்தாளோ அது சரியாக இருந்தது. நேற்றிரவு கடற்கரையில் அந்த இளைஞனை அவர்கள் துரத்தும் போதும், அவன் ஏணி மூலம் தன்னால் மரக்கிளைக்குத் தூக்கப்பட்டபின் தானும் புதரில் தேடியபோதும், அந்த முரடர்களுடைய உருவத்தைச் சரியாகக் கண்டு

நினைவு வைத்துக் கொள்ள அவகாசமில்லை அவனுக்கு. இப்போது அவர்களைக் காணும்போது அவனுக்கே அச்சமாக இருந்தது. அவர்கள் பேச்சிலிருந்து அனுமானித்துக் கொண்ட உண்மையால் கொலை செய்ய வேண்டுமென்றே அவர்களை யாரோ தூண்டி விட்டு அனுப்பி யிருக்கும் விவரமும் அவனுக்குப் புரிந்தது. வீட்டுக்குப் போவதை மறந்து மேலும் பின்தொடர்ந்தான் அவன். அவர்கள் உரையாடல் மேலும் வளர்ந்தது.

''ஈழத்தில் போய்ச் செய்ய வேண்டிய கொலையை இடை வழியிலேயே செய்வதற்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. தவற விட்டு விட்டோம்.''

''கொல்லாவிட்டால் என்ன? அவன் மட்டும் நமக்குப் பயந்து ஓடிக் கடலில் குதித்திருந்தால் கொன்றது மாதிரித் தான்! இந்தப் பக்கத்துக் கடல் ஓரங்களில் முதலைகளின் பழக்கம் அதிகம். அதனால்தான் எங்கு பார்த்தாலும் கரையோரங்களில் இரும்பு வலைகள் விரித்திருக்கிறார்கள். அவன் கடலில் குதித்தது மெய்யானால் நாம் செய்ய வேண்டிய காரியத்தை முதலைகள் செய்திருக்கும்.''

மதிவதனி இதைக் கேட்டுத் தனக்குள் சிரித்துக் கொண்டாள். அவர்கள் பேச்சு தொடர்ந்தது:



''நம் கதைதான் இப்படி ஆயிற்றென்றால் நாம் ''விழிஞத்தி'ல் இறக்கி விட்டு வந்த அந்த மூன்று 'தோழர்களும் என்ன செய்திருக்கிறார்களோ?''

''என்ன செய்தால் நமக்கென்ன? நாம் திரும்பிவிட வேண்டியதுதான். நமக்கு இனி வேலை இல்லை.''

வீதியின் ஆரவாரம் குறைந்து கடற்கரை தொடங்கும் திருப்பத்தில் அவர்கள் திரும்பி

விட்டனர். மதிவதனி சிறிது பின்தங்கினாள். அதுவரை தெருவில் ஆள் நடமாட்டமுள்ள கலகலப்பான பகுதியில் அவர்கள் சென்றதால் ஒட்டுக் கேட்டுக் கொண்டே பக்கத்தில் ஒட்டி நடக்க வசதியாக இருந்தது. இனி அப்படி முடியாது. ஆகவே மேலும் அவர்கள் பேசிக் கொண்டு சென்றதை அவள் பின்பற்றிக் கேட்க முடியவில்லை. அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்து, வீட்டுக்குப் போய் விட்டாள் அவள்.

பொழுது மறையும் நேரத்துக்குத் தான் வலை விரிக்கும் பகுதியை ஒட்டியிருந்த கடற்கரைக்கு அவள் சென்ற போது கடல் திருப்பத்தில் புலிச் சின்னமும், பனைமரச் சின்னமுமுள்ள கொடி உச்சியில் அசைய அந்தக் கப்பல் புறப்பட்டுக் கொண்டிருந்தது. அதன் மேல் தளத்தில் அவர்களுடைய சிவப்புத் தலைப்பாகைகள் தெரிந்தன.

"ஐயோ! கடலில் எங்கேயாவது அவருடைய கப்பலும் இதுவும் சந்தித்துக் கொண்டால்.......?" பேதைமையான இந்தக் கற்பனை மதிவதனிக்குத் தோன்றியபோது அவள் உடல் நடுங்கியது. அவளுடைய கற்பனைகளோ கையில் சங்கோடு நிற்கும் அவனைச் சுற்றி அவனுடைய கப்பல் போகும் கடலில் மிதந்தன.

ஒன்பதாம் அத்தியாயம்

முடியாக் கனவின் முடிவினிலே...

நாற்புறமும் திக்குத் திகாந்தங்களெல்லாம் ஒரே நீல நெடு நீர்ப் பரப்பு. யாரோ சொல்லித் தூண்டி அனுப்புவது போல் அடுக்கடுக்காய் ஒன்றன் பின் ஒன்றாய் நிரவி மேலெழுந்து நிமிர்ந்து வரும் அலைகளின் ஆனந்தக் காட்சி. சுழித்து ஓலமிடும் காற்றுக்கும், அலைகளின் ஆர்ப்புக்கும் அஞ்சாமல் அந்தக் கப்பல் சென்று கொண்டே இருந்தது. அலைகள் அதிகமாக இருந்ததனால் கப்பலின் தளம் ஆடியது.

"இளவரசே! சோர்ந்து போய்க் காணப்படுகிறீர்களே? மிகவும் களைப்பாக இருந்தால் படுத்துக் கொள்ளலாமே!" என்றார் சக்க சேனாபதி. இராசசிம்மன் உண்மையில் சோர்ந்துதான் போயிருந்தான். அதிக நேரக் கடற் பயணத்தின் அலுப்பு அது.


கண்கள் சிவந்திருந்தன. உடல் நெருப்பாய்க் கொதித்தது. தலை கனத்து வலிப்பது போலிருந்தது. கீழ்த்தளத்தில் ஒரு மரக் கம்பத்தின் அடியில் சாய்ந்து கொண்டு வீற்றிருந்தான் இராசசிம்மன். அந்த நிலையில் ஒற்றைநாடியான அவன் உடலையும் முகத்தையும் பார்த்தால் குளத்திலிருந்து தண்டோடு வெய்யிலில் பறித்து எறிந்த தாமரைபோலத் தோன்றியது. அந்த வாட்டத்தைக் கண்டு சக்க சேனாபதி மனத்தில் வேறு விதமாக நினைத்துப் பயந்தார். "கடற்காய்ச்சல் மாதிரி ஏதாவது வருவதற்கு முன்னறிவிப்புத்தான் அந்தச் சோர்வோ?" என்று தோன்றியது அவருக்கு.

கப்பலுக்குள் பொருள்கள் வைத்திருந்த பகுதிக்குப் போய் மெத்தென்றிருக்கும் கனமான விரிப்பு ஒன்றையும், சாய்ந்துகொள்வதற்கு வசதியான தலையணைகளையும் எடுத்துக் கொண்டு வந்தார். தளத்தில் ஒரு நல்ல இடமாகப் பார்த்து விரிப்பை விரித்தார். இராசசிம்மனை எழுந்திருக்கச் செய்து கைத்தாங்கலாக நடத்தி அழைத்துக்கொண்டு போய்ப் படுக்க வைத்தார். கையிலிருந்த வலம்புரிச் சங்கையும் படுக்கையிலேயே பக்கத்தில் வைத்துக் கொண்டான் அவன். அந்தச் செயலைப் பார்த்தபோது, சக்கசேனாபதி மனத்துக்குள் சிரித்துக் கொண்டார். "வீரமும், சூழ்ச்சியும் துணைக் கொண்டு ஒரு நாட்டின் அரியணையில் வீற்றிருக்க வேண்டிய அரச குமாரனுக்கு இவ்வளவு குழந்தை மனமா? தனது விளையாட்டுப் பொருளைத் தான் தூங்கும்போதும் பக்கத்தில் வைத்துக் கொண்டு தூங்கும் சிறுபிள்ளையைப் போன்றல்லவா இருக்கிறது இது?"—அவர் நினைத்தார்.

"இந்தச் சங்கு எப்போதும் உங்கள் பக்கத்திலேயே இருக்க வேண்டுமா? கப்பல் ஆடும்போது உருண்டு எங்கேயாவது போய்விடுமே! நான் இதை உள்ளே கொண்டு போய் வைத்து விடுகிறேன்" என்று சிரித்துக் கொண்டே குனிந்து அதைக் கையில் எடுக்க முயன்றார் அவர்.

"வேண்டாம்! அது இங்கேயே இருக்கட்டும்!" படுத்திருந்தபடியே அவருடைய கைகளை மறித்துத் தடுத்து விட்டான் அவன்.

"சரி! தூங்குங்கள்" - இப்படிச் சொல்லி விட்டு நடந்தவர் எதையோ நினைத்துக் கொண்டவர் போல் மறுபடியும் அவனருகே வந்து முழங்கால்களை மடித்து மண்டியிட்டு அமர்ந்தார்.



ஊன்றிய
நம்பிக்கையோடு
நீங்கள் லோமா
உபயோகிக்க எவ்வயதும்
ஏற்ற வயதே
லோமா உபயோகிப்பதற்கு வயது காரணமான வரம்பே கிடையாது. விரும்பிய பயனை எய்திடுவோம் என்ற முழு நம்பிக்கையுடன் எல்லா வயதினரும் அதனை உபயோகிக்கலாம். ஏனெனில், கேசத்திற்குக் கருமையூட்டுவதில் தன்னிகரற்ற தைலம் என்பதோடு, தரத்திலுயர்ந்த கேச எண்ணெய்களில் பொதுவாக இடம் பெறும் பொருள்கள் அனைத்தும் லோமாவில் அடங்கியுள்ளன.
லோமா
அகில உலகும் வியந்து போற்றிட
கேசத்திற்கு இயற்கைக் கருமை
யூட்டும் தைலம்
ஏகபோக ஏஜெண்டுகள்: எம். எம். கம்பாட்வாலா, அஹமதாபாத்-1.
ஏஜெண்டுகள்; வி. நரோத்தம் அண்ட் கோ., பம்பாய்-2
MPS-TAM
சென்னை ஏஜண்டுகள்: ஜே பாலபாய் & கம்பெனி, 260, எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜண்டுகள்: செருக் கதிர் & கோ., 41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11



டெக் டூத்பிரஷ் வாங்க
3 தகுந்த காரணங்கள்
1 மிருதுவான கீட்டன் முடிகள்
ஈறுகளை புண்ணாக்காமல் பற்களை சுத்தம் செய்கின்றன
2 தேர்ந்தெடுக்க 2 வித தலைப்பாகம்
'ஓவல்' மற்றும் 'ஷார்ட் ஓவல்' வடிவங்களில் கிடைக்கும்
3 கைக்கு அடக்கமான பிடி
விஞ்ஞான முறைப்படி பிரத்தியேக வடிவம் கொண்டது
நினைவிலிருக்கட்டும்:
இந்த மூன்று விசேஷ அம்சங்கள் பொருந்தியது புது மாதிரி டெக் ஒன்றே!
Tek
Johnson & Johnson OF INDIA PRIVATE LTD.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் ஆப் இந்தியா
பிரைவேட் லிமிடெட்

இளவரசனின் மார்பை மூடியிருந்த பட்டு அங்கியை விலக்கி வலது கையால் தொட்டுப் பார்த்தார். பின்பு நெற்றியிலும் கையை வைத்துப் பார்த்தார். அவருடைய முகத்தில் கவலை வந்து குடிபுகுந்தது.

"கண்கள் எரிச்சலாக இருக்கின்றதா, உங்களுக்கு?"

'ஆம்' என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தான் இராசசிம்மன்.

"நீங்கள் கவனமாயிருக்க வேண்டும்! கடற் காய்ச்சலை இழுத்து விட்டுக் கொண்டு தொல்லைப் படக் கூடாது." அவர் எச்சரிக்கை செய்து விட்டுப் போனார். நினைத்துப் பார்க்கும்போது அவருக்கு வேடிக்கையாக இருந்தது. "தலைமுறை தலைமுறையாக உரிமை கொண்டாட வேண்டிய முடியையும், வாளையும், சிம்மாசனத்தையும் கூட இப்படிப் பக்கத்தில் வைத்துக் கொண்டு பாதுகாக்கத் தெரியவில்லை. கப்பலின் ஒரு மூலையிலுள்ள அறையில் அடைபட்டுக் கிடக்கின்றன அவை. ஏதோ ஒரு தீவில் எவளோ ஒரு பெண்ணிடம் விலைக்கு வாங்கிய இந்தச் சங்குக்கு இவ்வளவு யோகம். புதுப்பொருள் மோகம்.

"ஊம்! யாரை நொந்து கொள்வது? உலகத்தில் பெண் சம்பந்தப்பட்ட எந்தப் பொருளுக்கும் மதிப்பு உயர்ந்து கொண்டே போகிறது" என்று தளத்தில் நடந்து கொண்டே முணுமுணுத்தது அவருடைய வாய்.

உடல் தளர்ந்து படுத்துக் கொண்டிருந்த இராசசிம்மனுக்கு, கண் இமைகள் சொருகி விழிகள் மேற் கவிந்தன. உடலின் அனுபவங்களுக்கும், உள்ளத்துக்கும் ஏதோ நெருங்கிய தொடர்பு இருக்கும் போலும். காலையில் செம்பவழத் தீவிலிருந்து புறப்படுகிற வரை உற்சாகமாக இருந்த அவன் மனமும் இப்போது தளர்ந்திருந்தது. தன் செயல்களால் ஏற்பட்டிருக்கும் விளைவுகளைப் பற்றி யெல்லாம் கற்பனை செய்து பார்த்தது அவன் உள்ளம். கடுங்குளிர் காலத்தில் வெந்நீருக்குள் உடலை முக்கிக் கொண்டால் இதமாக இருக்குமே; அது போல் படுக்கையில் படுத்துக்கொண்டே கண்களை மூடிக் கொண்டு நினைவுகளை எங்கெங்கோ படர விடுவது சுகமாக இருந்தது அவனுக்கு.

ஒவ்வொருவர் முகமாக, ஒவ்வோர் இடமாக, அவன் முன் தோன்றியது. நினைவு நழுவித் துயில் தழுவும் ஓய்ந்த நிலை. காற்று மண்டலத்தின் எட்ட முடியாத உயரத்துக்கு உடலின் கனம் குறைந்து நுண்ணிய உணர்வுகளே உடலாகி மெல்லப் பறப்பது போன்று தன் வசமற்றதோர் அவசத்தில் ஆழ்ந்திருந்தது மனம்.

மலையுச்சியும், வான்முகடும், கடல் ஆழமும், நிலப் பரப்பும் - இவையத்தனையின் பெருமையும், கம்பீரமும், ஒன்றாய்ச் சமைந்து ஒருமுகமாக மாறி அவன் கண்களுக்கு அருகில் நெருங்கி வருகிறது. பயந்து போய் அவன் கண்களை இறுக்கி மூடிக் கொள்கிறான்.

"இராசசிம்மா! நீ அசட்டுத்தனமாக நடந்து கொண்டு விட்டாய். என்னென்னவோ பெரிய எண்ணங்களை எண்ணிக் கொண்டு உன்னை வரவழைத்து இடையாற்றுமங்கலத்தில் இரகசியமாகத் தங்கவைத்தேன். நான் எதை எதையோ திட்டமிட்டுக் கொண்டு செய்தேன். நீயும் எதை எதையோ திட்டமிட்டுக் கொண்டுதான் என்னிடம் வந்து தங்கினாய் என்பது இப்போது புரிகிறது. என்ன செய்யலாம்? எப்படி நடக்குமோ, அப்படி நினைத்து வைப்பதற்கு மனிதர்களுக்குத் தெரிவதில்லை.



எப்படி நினைக்கிறோமோ அப்படி நடத்திக் கொடுப்பதற்கு விதிக்குச் சிறிதும் சம்மதமில்லை."

பெரிய கண்டாமணியின் நாக்கைக் கையின் வலிமை கொண்ட மட்டும் இழுத்து விட்டு விட்டு அடிப்பதுபோல் ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு அறையாக அவன் கன்னத்தில் மோதி விட்டுச் செவிக்குள் புகுந்தது. பயந்து கொண்டே மெல்லக் கண்ணைத் திறக்க முயல்கிறான் அவன். ஆனால் கண்ணைத் திறப்பதற்கு முன்பே மகாமண்டலேசுவரரின் முகம் கண்ணுக்குள்ளேயே புகுந்து வந்து தெரிந்ததுபோல் அவனுக்குப் புலனாகியது.

மறுபடியும் சில கணங்கள் காற்று மண்டலத்தில் பறப்பது போல் ஒரு பரவசம் ஏற்பட்டது.

அந்தப் பரவசத்தைக் கலைத்துக் கொண்டு, "குழந்தாய்!" என்று ஒரு குரல் உலகத்துக் கருணையை யெல்லாம்

உள்ளடக்கிக் கொண்டு ஒலித்தது. இராசசிம்மன் தன்னைப் பெற்றெடுத்த அன்னையின் முகத்தைக் கண்டான். அவன் நெஞ்சை நெகிழ்த்தது, 'குழந்தாய்' என்ற அந்தக் குரல். உலகில் தாயின் குரலைத் தவிர வேறு எந்தக் குரலும் ஏற்படுத்த முடியாத நெகிழ்ச்சி அது.

"செல்வா! இத்தனை வயதும் பொறுப்பும் ஏற்பட்ட பின்பும் உனக்கு இன்னும் விளையாட்டுப் புத்தி போகவில்லையே, அப்பா? யாரிடம் விளையாடலாம், யாரை ஏமாற்றலாம் என்றுகூடவா உனக்குத் தெரியாமற் போய்விட்டது? மகாமண்டலேசுவரர் எவ்வளவு பெரியவர்? நம் நலனிலும் நாட்டு நலனிலும் எவ்வளவு அக்கறையுள்ளவர்? அவர் உனக்குக் கெடுதல் செய்ய முற்படுவாரா? அவரைக் கூட நம்பாமல் இப்படி நடந்து கொண்டு விட்டாயே நீ? இடையாற்றுமங்கலத்தில் வந்து மறைந்துகொண்டிருந்த போது உன் தாயைப் பார்க்க வேண்டுமென்ற துடிப்பு உன் மனத்தில் ஒரு தரம்கூட ஏற்படவேயில்லையா குழந்தாய்? நீ வந்து பார்க்க வேண்டுமென்று உன் மனத்தில் ஒரு முறையாவது நினைத்திருந்தாலே போதும். அதுவே என் தாய்மைக்கு வெற்றிதான். அரியணை ஏறி அரசாண்டு வீரச் செயல்கள் புரிந்து தென்பாண்டி நாட்டு மக்கள் மனங்களையெல்லாம் கவர வேண்டிய நீ அந்த அரியணையையும் அரசுரிமைப் பொருள்களையுமே கவர்ந்து கொண்டு போய்விட்டாயே? யாருக்கும் தெரியாமல் இப்படிக் கவர்ந்து கொண்டு கள்வனைப் போல் போவதற்கு உனக்கு வெட்கமாக இல்லையா, அப்பா? ஆற்றங்கரை மரம் போல் செழித்துக் கொழித்துப் பெருவாழ்வு வாழ்ந்த உன் தந்தையைப் போல் தென்பாண்டி நாட்டை ஆளும் வீரம், கடகம் செறிந்த உன் கைகளில் இருக்குமென்றுதான் நான் நம்பிக் கொண்டிருக்கிறேன். நீ என்ன செய்யப் போகிறாயோ?" — அந்தக் குரல் ஒலி நின்று போயிற்று.

"ஐயோ, அம்மா!" என்று அலறி விடவேண்டும் போலிருந்தது குமார பாண்டியனுக்கு. ஆனால் அப்படி அலற முடியாமலும், அழ முடியாமலும் ஏதோ ஒரு உணர்ச்சி அவரை வாயைக் கட்டி விட்டது போலிருந்தது. வாயிருந்தும், நாவிருந்தும், பேசத் தெரிந்தும், அவன் ஊமையானான்.

"நீங்கள் மிகவும் பொல்லாதவர்! உங்களுக்கு இரக்கமே கிடையாது. கல்நெஞ்சு உடையவர்". — முகத்திலும்

கண்களிலும் பொய்க் கோபம் துடிக்கக் குழல்மொழி அவன் முன் தோன்றினள்.

"குழல்மொழி! நீ என்னை மன்னித்து விடு. நான் உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டேன்" என்று எதையோ சொல்வதற்காக அவன் வாயைத் திறந்தான்.

ஆனால் அந்தப் பெண்ணின் பேச்சு அவனை வாயைத் திறக்கவே விடவில்லை. ஆத்திரமடைந்து கூப்பாடு போட்டாள் அவள். "நீங்கள் பேசாதீர்கள்! போதும், உங்கள் பேச்சு. பேசிப் பேசி என்னை ஏமாற்றினீர்கள். அத்தனையும் வெளி வேடம். உடலுக்கு வேடம் போட்டுக் கொள்ளத்தான் உங்களுக்குத் தெரியுமென்று நினைத்திருந்தேன். நீங்களோ மனத்தில், நினைவில், அன்பில், பேச்சில் எல்லாவற்றிலும் வெளிவேடம் போடுகிறீர்கள். நீங்கள் பெரிய கள்வர். மிகப் பெரிய கள்வர். உலகத்துக் கள்வர்களுக்கெல்லாம் பொன்னையும், பொருளையும்தான் திருடத் தெரிந்திருக்கிறது. உங்களுக்கு அதோடு மனத்தையும் திருடி ஏமாற்றி விட்டுப் போகத் தெரிகிறது. ஐயா, இளவரசரே! நீங்கள் கெட்டிக்காரர் என்று உங்கள் மனத்தில் எண்ணமோ?"

படபடப்பாகப் பேச்சைக் கொட்டி விட்டு மறைந்து விட்டது, இடையாற்று மங்கலத்து இளங்குமரியின் மதிமுகம். அப்புறம் சமீபத்தில் அவன் சந்தித்த, சந்திக்காத, யார் யாருடைய முகமோ, எந்த எந்த இடங்களோ அவன் கண் முன் தெரிந்து மறைந்தன. நாராயணன் சேந்தன், தளபதி வல்லாளதேவன், பகவதி, விலாசினி, ஆசிரியர்பிரான், பவழக்கனிவாயர், இடையாற்றுமங்கலத்துப் படகோட்டி, பாண்டி நாட்டுக் கூற்றத் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள்; ஒவ்வொருவர் முகமும் அவன் பார்வைக்கு முன்னால் தோன்றிமறைந்து ஏசி, இரைந்து, சினந்து பேசுவதுபோல் தோன்றியது. கோட்டை, அரண்மனை, இடையாற்றுமங்கலம், பறளியாறு, வசந்த மண்டபம், குமரி கோயில், விழிஞம், சுசீந்திரம்,—மின்னல் மின்னலாக, ஒளிவட்டம், ஒளிவட்டமாக இந்த இடங்கள் அவன் உணர்வுக்குப் புலனாகி மறைந்தன.

எல்லாவற்றுக்கும் இறுதியில் கடல்! முடிவற்றுத் தெரிந்த நீர்ப் பிரளயத்தின் மேல் சக்க சேனாபதி அருகில் துணை நின்று ஒரு கப்பலில் அவனை எங்கோ அழைத்துக் கொண்டு போகிறார். செம்பவழத் தீவு, கடைவீதி, மதிவதனி, வலம்புரிச்சங்கு, உயிருக்கு நேர்ந்த ஆபத்து, முதலை வலையில் சுருண்டு தப்

பியது — நினைவுகள் — முறை பிறழாமல் ஒவ்வொன்றாகத் தொடருகின்றன.

சிரித்துக்கொண்டே மதிவதனி அவனுக்கு முன் தோன்றுகிறாள். அவன் ஆவலோடு எழுந்து ஓடிப் போய் அவள் கொடி உடலைத் தழுவிக் கொள்கிறான். அடடா! அந்த இன்ப அரவணைப்பில் தான் என்ன சுகம்? எலும்பும், தோலும், நரம்பும் இணைந்த மனிதப் பெண்ணின் உடல் போலவா இருக்கிறது அது? மலர்களின் மென்மையும், அமுதத்தின் இனிமையும், மின்னலின் ஒளியும், கலந்து கவின் பெற்று இளமை ரசம் பூசிய ஒரு சுந்தர வச் சிலை அவள் உடல். அவன் தழுவலில் கண்ணொடு கண்ணினை கலப்புற்று நிற்கும் அவள் நாணிக் கண் புதைத்துச் சிரிக்கிறாள். வலது இதழ் மூடியுமிடத்தில் சிரிப்பு சுழித்துக் குழியும் சமயத்தில் தன் கையால் குறும்புத்தனமாகக் கிள்ளுகிறான் அவன்.

பொய்க்காக வலிப்பது போல் நடிக்கிறாள் அவள். அந்த இனிய நிலை முடிவற்றுத் தடையற்று வளர்ந்து தொடர்பாய் நீண்டு கொண்டே போகிறது.



அப்போது இடையாற்று மங்கலம் நம்பி ஓடிவந்து, 'நீ ஒரு அசடன்' என்று கூச்சலிடுகிறார். அவனுடைய அன்னை ஓடி வந்து, "உனக்கு இன்னும் விளையாட்டுப் புத்தி போகவில்லை" என்கிறாள். குழல்மொழி ஓடிவந்து, "நீங்கள் பொல்லாதவர்" என்று பொறாமையோடு கத்துகிறாள். சக்க சேனாபதி சிரித்துக் கொண்டே, "நீங்கள் இன்னும் குழந்தையாகவே இருக்கிறீர்களே?" என்று குற்றம் சுமத்துகிறார். அத்தனை குரல்களும் மண்டையைப் பிளப்பது போல் ஒன்றாகச் சேர்ந்து ஒலிக்கின்றன. அவன் பயந்து போய் மதிவதனியை இன்னும் இறுக்கித் தழுவிக்கொள்கிறான்.

"ஐயோ! இதென்ன உங்கள் உடல் இப்படி அனலாய்ச் சுடுகிறதே?" என்று பதறிப் போய்ச் சொல்லுகிறாள் அவள். இராசசிம்மனின் உடல் வெட வெடவென்று நடுங்குகிறது. "பெண்ணே! இந்தக் கனலைத் தீர்க்கும் மருந்து நீ தான்" என்று அவளைத் தழுவிய கைகளை எடுக்காமலே சொல்லுகிறான் அவன். திடீரென்று யாரோ கைகொட்டிச் சிரிக்கும் ஒலி, கடல் ஒலியோடு கலந்து கேட்கிறது. காற்று மண்டலத்தில் நுண்ணுணர்வே உடலாகி மேலே மேலே எட்டாத உயரத்தில் பறந்துகொண்டிருந்த இராசசிம்மனின் உடல் 'பொத்தென்று' தரையில் வந்து விழுந்ததைப் போல ஒரு பெரிய அதிர்ச்சி. அந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டு அவன் மெல்லக் கண்களைத் திறக்கிறான். எதிரே கப்பல் தளத்தில் சக்க சேனாபதி அவன் அருகே சிரித்துக் கொண்டு நின்றார். தன் கைகளினால் படுக்கையின் பக்கத்தில் கிடந்த வலம்புரிச் சங்கை நெரித்து விடுவதுபோல் தழுவிக் கொண்டிருப்பதை அப்போதுதான் உணர்ந்தான் அவன். அவர் சிரிப்பதன் காரணம் புரிந்தது.

அத்தனையும் கனவு! முடியாக் கனவு! என்று தான் அதற்கு முடிவோ? இராசசிம்மன் வெட்கமடைந்து சங்கைப் பற்றித் தழுவிக் கொண்டிருந்த தன் கைகளை எடுத்தான்.

"தூக்கத்தில் இப்படியா அழுகையும் சிரிப்புமாக மாறி மாறி உளறிப் பிதற்றுவீர்கள்? நான் பயந்தே போனேன். நீங்கள் இந்தச் சங்கை அழுத்திய விதத்தைப் பார்த்தால் உங்கள் பிடியின் இறுக்கம் தாங்காமல் இது உடைந்து விடுமோ என்று அஞ்சி விட்டேன்."

சக்க சேனாதிபதி கூறினார். அவன் அருகில் குனிந்து உட்கார்ந்து மீண்டும் மார்பையும், நெற்றியையும் தொட்டு நீவிப் பார்த்தார். அவர் முகம் சுருங்கிச் சிறுத்தது.

"உங்களுக்குக் காய்ச்சல்தான் வந்திருக்கிறது! நான் நினைத்தது சரியாகப் போயிற்று" என்று பதற்றத்தோடு கூறிவிட்டுப் போர்வையை எடுத்து நன்றாக இழுத்துப் போர்த்தி விட்டார். இராசசிம்மன் அவரைப் பார்த்து மிரள மிரள விழித்தான். கப்பல் அறைக்குப் போய் ஏதோ ஒரு தைலத்தை எடுத்துக் கொண்டு வந்து அவன் மார்பிலும் நெற்றியிலும் சூடு பறக்கத் தேய்த்துத் தடவிக் கொடுத்தார். (தொடரும்)

குமார பாண்டியனின் கனவுக் காட்சிகளில் ஒன்றைத்தான் இவ்விதழ் அட்டைச் சித்திரமாக நமது ஓவியர் விஜு சித்திரித்திருக்கிறார்.

அதன் மதிப்பே அலாதி *


நியூ ஷொராக்கின்
பாப்லின்
வெண்மையான, கலருள்ள மற்றும் கோடிட்ட துணிகள்
பிளாட்டினம் டச்
*
ஸில்வர் டச்
*
டெலைட்
*
மதுகுஞ்ச்
SANFORIZED
தி நியூ ஷொராக் ஸ்பின்னிங் அண்ட் மானுபாக்சரிங்
கம்பெனி லிமிடெட், நடியாட்.

டாக்டர் ஷிவாகோ

க. சந்தானம்

சென்ற இரண்டு மாதங்களாக இலக்கிய உலகில் ஓர் பத்திரிகைப் போர் நடைபெற்று வருகிறது. போரிஸ் பாஸ்டர்நாக் என்ற ருஷிய ஆசிரியருக்கு இவ் வருஷத்திய நோபல் இலக்கியப் பரிசு அளிக்கப்பட்டது. அவரது கவிதைகளுக்கென்று பரிசு கொடுக்கப்பட்ட போதிலும், 'டாக்டர் ஷிவாகோ' என்ற அவரது தொடர்கதைக்காகவே கொடுக்கப் பட்டிருக்கிறதென்று இரு கட்சிகளும் தம்பி வாத வாதம் செய்து வருகின்றனர்.

'டாக்டர் ஷிவாகோ' என்ற நூலைப் பெரிதும் புகழ்ந்து, பல நாடுகளில் விமர்சனங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இதைக் கண்டு ருஷியப் பத்திரிகைகளுக்கு அடங்காக் கோபம் உண்டாயிற்று. ஆசிரியர் பாஸ்டர்நாக்கை ருஷியாவுக்கும் பொதுவுடைமை சமுதாயத்துக்கும் துரோகி என்றும், அவை மீது அநியாயமாகப் பழி சுமத்துவதற்காக இப் புத்தகத்தில் பொய்யான கூற்றுகளும் வாணைகளும் இருக்கின்றன என்றும் கண்டித்தன. ருஷிய ஆசிரியர் சங்கத்திலிருந்து பாஸ்டர்நாக் விலக்கப்பட்டார்.

எதிர்பாராத இந்த எதிர்ப்பைக் கண்டு நடுங்கிய பாஸ்டர்நாக் தமக்கு நோபல் பரிசு வேண்டாமென்று நிராகரித்தார். உடனே ருஷியப் பிரதமர் குருஷேவ், பாஸ்டர்நாக் பரிசு ஏற்பதில் தமக்கு எந்த ஆட்சேபணையுமில்லை என்றும், அவர் விரும்பினால் ருஷியாவை விட்டு வெளியேறுவதற்குக் கூட அனுமதி அளிக்கப்படும் என்றும் அறிக்கை வெளியிட்டார். இதைக் கண்டு பாஸ்டர்நாக்கின் நடுக்கம் அதிகரித்தது. தமது தாய் நாட்டை விட்டு எங்கும் போக விரும்பவில்லை என்றும், ருஷியாவுக்குத் துரோகம் செய்ய எப்பொழுதும் நினைக்கவில்லை என்றும், தமது சம்மதமின்றியே 'டாக்டர் ஷிவாகோ'வின் கையெழுத்துப் பிரதியை வைத்திருந்த வெளிநாட்டு நண்பர்கள் பிரசுரித்து விட்டனர் என்றும், தம்மை மன்னித்து விட வேண்டிக் கொள்ளுவதாகவும் பாஸ்டர்நாக் ருஷ்யப் பிரதமர் குருஷேவுக்குக் கடிதம் எழுதினார்.

இந்த அதிசய சம்பவங்களால் பாஸ்டர்நாக்குக்கும் அவர் புத்தகத்துக்கும் உலகப் பிரசித்தி கிடைத்து விட்டது. அது எல்லாப் பாஷைகளிலும் மொழி பெயர்த்துப் பிரசுரிக்கப்பட்டு வருகிறது.

பத்திரிகைப் போரிலிருந்து 'டாக்டர் ஷிவாகோ' ருஷியப் புரட்சியைப் பற்றிக் கேவலமாக எழுதியிருக்கவேண்டுமென்று எதிர்பார்த்தேன். இல்லாவிடில் ஏன் ருஷிய ஆசிரியர்களும் பத்திரிகைகளும் ஆத்திரப்பட வேண்டும்? அமெரிக்க, பிரிட்டிஷ் பத்திரிகைகள் போற்றுவதற்கும் அதே காரணமாக இருக்கலாமென்றும் எண்ணினேன். ஆதலால் அதை ஆவலுடன் படித்து முடித்தேன்.

'டாக்டர் ஷிவாகோ'வைப் பற்றி என் அபிப்பிராயங்களைக் கூறுவதற்கு முன் நோபல் பரிசுகளைப் பற்றிச் சுருக்கமாக உரைப்பது வாசகர்களுக்கு உதவும். 1896ம் வருஷத்தில் வெடி மருந்துகள் செய்து கொடீசுவரரான ஸ்வீடன் தேசத்து நோபல் என்பவர் 90 லக்ஷம் டாலர் நிதி மூலதனம் வைத்து அதன் வட்டியில் ஆண்டுதோறும் ஐந்து பரிசுகள் வழங்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தார். பௌதிகம், ரசாயனம், வைத்தியம் மூன்று துறைகளிலும் சிறந்த ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகளுக்கும், இலக்கியத்தில் சிறந்த நூலைப் பிரசுரித்த ஆசிரியருக்கும், உலக சமாதானத்துக்கு உத்தம முயற்சி செய்தவருக்கும் பரிசுகள் 1901ம் வருஷத்திலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன. சாதி, மதம், பிறப்பு, தேசம் எதையும் பொருட்படுத்தாமல் யோக்யதை ஒன்றையே கருதிப் பரிசுகள் கொடுக்கப்பட வேண்டுமென்பது நோபலின் நிபந்தனை. விஞ்ஞானப் பரிசுகளை ஸ்வீடன் தேசத்து விஞ்ஞான சங்கமும், இலக்கியப் பரிசை இந்நாட்டின் இலக்கியச் சங்கமும், உலக சமாதானப் பரிசை ஸ்வீடன் தேசத்துப் பார்லிமெண்டால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் கமிட்டியும் அளித்து வருகின்றன. நோபலின் கட்டளைப்படியே இது வரையில் பட்சபாதமின்றி எல்லா நாட்டினருக்கும் இப் பரிசுகள் அளிக்கப்பட்டு வந்திருக்கின்றன; பாரதத்தைச் சேர்ந்த ரவீந்திரநாத டாகூருக்கு இலக்கியப் பரிசும், டாக்டர் சி. வி. ராமனுக்குப் பௌதிகப் பரிசும் கிடைத்தன. ருஷ்ய விஞ்ஞானிகளுக்குப் பல பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.



போரிஸ் பாஸ்டர்நாக்

'டாக்டர் ஷிவாகோ' ஓர் தொடர்கதை. டால்ஸ்டாய் எழுதிய 'யுத்தமும் சமாதானமும்' என்ற மாபெரும் நூலைப் போன்றது. ஆனால் இப் புத்தகத்தில் யுத்தமோ, புரட்சியோ நேரடியாக வர்ணிக்கப்படவில்லை. கதையில் முதல் பாதி, முதல் உலக யுத்தத்துக்கு முன் ருஷிய மக்களை, முக்கியமாக மாஸ்கோவாசிகளின் வாழ்க்கை இரண்டு நடுத்தரக் குடும்பங்களின் சரித்திரங்கள் வாயிலாக, அழகிய சொற் சித்திரங்க



புது தில்லியில் நடைபெற்று வரும் 1958-ம் வருஷ எக்ஸிபிஷனில் அபாரமாக நடன மாடிப் பாராட்டுதலைப் பெற்ற குமாரி இந்திரா.

னால் விளக்கப்பட்டிருக்கிறது. கதாநாயகனை டாக்டர் ஷிவாகோ தொழிலில் டாக்டர், ஆனால் உள்ளத்திலும், உணர்ச்சியிலும் ஓர் கவி. அவன் யுத்த காலத்தில் சைனியத்தில் பணி செய்கிறான். ருஷியா தோற்று அதன் சைனியங்கள் கலைந்து போனவுடன் மாஸ்கோவுக்குத் திரும்பி வந்து தனது மனைவி, குழந்தை, மாமனாருடன் எளிய வாழ்க்கை நடத்த முயற்சி செய்கிறான். புரட்சி பெருகி இது சாத்தியமில்லாமல் போய் விடுகிறது. குடும்பத்துடன் வெகு தூரம் சென்று கிராம வாழ்க்கை செய்யப் பிரயத்தனம் செய்கிறான். புரட்சிக் கட்சிக்கும் அதை எதிர்த்த சைனியக் கூட்டங்களுக்கும் ஓயாமல் சண்டை ஏற்பட்டுக் கிராமங்களெல்லாம் நாசமாகின்றன. டாக்டர் ஷிவாகோ புரட்சிக் கூட்டத்தார் கையில் சிக்கிப் பலாத்காரமாக அவர்களிடம் வைத்தியப் பணி புரிகிறான். அவனுடைய குடும்பத்தார் கிராமத்தில் வாழ முடியாமல் மாஸ்கோ திரும்பி, அங்கும் வசிக்கச் சாத்தியப்படாமல் வெளிநாட்டுக்குச் செல்கின்றனர்.

புரட்சிக்கூட்டத்தாரிடமிருந்து முடிவில் தப்பி, தம் குடும்பங்களைக் காணாமல் வேறோர் பெண்ணிடம் காதல் கொண்டு பலவித கஷ்டங்களுக்காளாகி, முடிவில் மாஸ்கோவுக்குத் திரும்பிச் சென்று சில வருஷங்கள் பரிதாபகரமாக வசித்து முடிவில் இருதய நோயால் டாக்டர் ஷிவாகோ இறக்கிறான். சாதாரணக் கதை. ஆனால் இயற்கையையும் மன உணர்ச்சிகளையும் வர்ணிப்பதில் ஆசிரியர் மிகவும் திறமை பெற்றவர். நோபல் பரிசு பெறத் தகுந்த இலக்கியம்.

ஆனால், முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் இதில் ருஷ்யப் புரட்சியை ஆசிரியர் கண்டிக்கவில்லை. அது அவசியமென்றும், அதனால் பல பழம் தீமைகள் தீர்ந்து விட்டனவென்றும் விளக்குகிறார்.

புரட்சியினாலும் அதனை எதிர்த்த கோஷ்டிகளாலும் நாட்டின் நிலைமை மிகவும் கெட்டு, மிருக வாழ்க்கைக்குக் கூட வழியின்றி மனிதத் தன்மை அடியோடு குன்றி விட்டதென்று காண்பிக்கிறார். ஆனால் அதற்குப் புரட்சித் தலைவர்கள் பொறுப்பாளிகள் என்றோ, அதனால் புரட்சி செய்திருக்கக்கூடாதென்றோ கூறவில்லை. பலாத்காரப் புரட்சியின் தவிர்க்க முடியாத பலன்களைச் சொந்த அனுபவத்தைக் கொண்டு சித்திரித்திருக்கிறார். அதொன்றே ஆசிரியர் செய்திருக்கும் குற்றம்.

ருஷிய ஆசிரியர்களும், பத்திரிகைகளும் பாஸ்டர்நாக் மீது ஆத்திரப்படுவதற்குக் காரணம் என்னவென்று ஆலோசித்ததில் பின் வரும் எண்ணம் என் மனத்தில் உதித்தது.

பாஸ்டர்நாக் செய்த குற்றத்துக்காக அவர் கண்டிக்கப்படவில்லை. புரட்சியைப் பற்றிப் போற்றாமலும், அதன் தலைவர்களைப் புகழாமலும், ருஷியாவின் பொது உடைமை சமுதாயத்தைப் பொருட்படுத்தாமல் சாதாரண மனிதரின் உணர்ச்சிகளும், எண்ணங்களுமே முக்கியமானவை, அவற்றைக் கொண்டே நன்மை தீமைகளை நிர்ணயிக்க வேண்டுமென்று வற்புறுத்துவதே பாஸ்டர்நாக்கின் துரோகமென்று கருதப்பட வேண்டும். எவ்விதக் கொடுமைக்கும் அஞ்சாமல் சத்தியத்தைக் கடைப்பிடித்து வாழ்வதே மனிதனின் முக்கியக் கடமை என்று போதிப்பதும் அவ்விதக் குற்றமாக வேண்டும்.

இரண்டாவது யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னிருந்த ருஷிய வாழ்க்கையைப் பற்றிப் பின்வருமாறு ஆசிரியர் சித்திரம் வரைகிறார்.

''என்ன ஆச்சரியம்! கைதியான உன் வாழ்க்கை மட்டுமன்று 1930-40 வருஷங்களில், எவ்வித வாழ்க்கையையும், சர்வகலாசாலையில் சுகமாகக் கழித்த என் வாழ்க்கை கூட இந்த யுத்தத்தை வரவேற்கிறது. காற்றில்லாத அழுக்கு அறையில் புழுங்கும் மனிதன் வெளிக் காற்றில் விடுபட்டு வந்தது போலிருக்கிறது. தூய புயல் காற்றின் புனிதத் தன்மை பெற்றிருக்கிறது.

''கட்டாயக் கூட்டுப்பண்ணை ஓர் பெருந் தவறு. அது வெற்றி பெறவில்லை. அதை ஒப்புக் கொள்ள விரும்பாமல், மக்களை அதிகாரிகளின் விருப்பத்தின்படி எண்ணவும், பேசவும், இல்லாததை இருப்பதாகப் பாசாங்கு செய்யவும் சகலவித பலாத்காரமும் பிரயோகம் செய்யப்பட்டது. இதன் பலன் 'யேழாவ்' கொடுமை, அர்த்தமற்ற ஓர் அரசியல் திட்டத்தை அமுல் செய்தல், இஷ்டப்படி வாக்களிக்க உரிமையில்லாத தேர்தல்கள்.

''ஆதலால் யுத்தம் ஆரம்பித்ததும், அதன் அபாயங்களும் கொடுமைகளும் பொய் வாழ்க்கையின் அரக்கத்தன்மைக்கு மேலானதாகத் தோன்றியது. மனுஷ்யனின் மரண நிலையைப் போக்கி உயிரளித்தது.''


இரண்டாவது யுத்த முடிவில் ஆசிரியரின் உணர்ச்சி பின்வருமாறு:

'யுத்தத்துக்குப் பின் மனமலர்ச்சியும், விடுதலையும் வருமென்று எதிர்பார்த்தோம். அது இன்னும் வரவில்லை. ஆயினும் விடுதலையின் மணம் யுத்தத்தின் பிற்கால வாழ்வில் வீசுகிறது. சரித்திரத்தின் உட்கருத்து அவையே.'

சோவியத் ருஷியாவைப் பழிப்பதற்குப் பொருள் தேடுவோருக்கு இப் புத்தகம் அதிகமாகப் பயன்படாது. ஆனால், பலாத்காரப் புரட்சியால் ஓர் புதிய சொர்க்கம் இப் புவியில் ஸ்தாபிக்கலாம் என்று கனவு காண்போருக்கு மயக்கத்தைத் தீர்க்கும் அருமருந்தாகும்.

காலகேட் குளோரோபில் ஈறுகளை பலப்படுத்துகிறது

வைத்திய சோதனை நிரூபிக்கிறது!



ஈறுகளைப் பலப்படுத்து கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை வழக்கமாகத் தேய்ப்பதால், குளோரோபில் மூலம் அது ஈறுகளைப்பலப்படுத்துகிறது.


வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது!

வேறு சாதாரண பற்பசையை விட மிக மிகத்தீவிரமாக வாய்நாற்றத்தை கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஒழிக்கிறது என்பது ருசுவான உண்மை.

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது!


கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால் பல் எனுமலை அரிக்கும் நாச அமிலங்களும், அவற்றை விளைவிக்கும் கிருமிகளும் குறைகின்றன!

வேறு எந்த பற் பசையிலும் இதை விட அதிக <u>வீர்ய</u> குளோரோபில் இல்லை!



* நீரில் கரையும் குளோரோ-பிலின்ஸ் சேர்ந்தது.

இதோ! பெரிய எக்கானமி அளவில் கிடைக்கிறது


IS:395
ISI
இந்தியன் ஸ்டாண்டர்ட்ஸ் இன்ஸ்டிட்யூஷனால் அங்கீகரிக்கப்பட்ட ஐ. எஸ். ஐ. (I. S. I.) அத்தாட்சி
AMCOS
for ENDURANCE
ஐ. எஸ். ஐ. (I. S. I.) அத்தாட்சி பெற்ற சாமான்கள் மிகவும் நம்பகமானவை
விநியோகஸ்தர்கள்:
அடிஸன் & கோ. பிரைவேட் லிட்.
மதராஸ் - - பெங்களூர்
டிப்போ: கோயமுத்தூர்


நீளமான
செழிப்பான
கூந்தல்
ரோமா
கூந்தல் வளர்க்கும் டானிக்


EPHRILIME
எப்ரிலைம்
UD
அவன் கொடுக்கும் இந்த மாத்திரை உட்கொண்ட ஒரு சில நிமிஷங்களிலேயே அவனது ஆஸ்த்மா உபாதைகள் மாயமாக மறையும்.
நீண்ட நாள்பட்டதும், மிக்க உபாதை தரக் கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த ஊறுவிளைவற்ற மருந்து.
யூனியன் டிரக் கம்பெனி லிட்.
மதராஸ் டிப்போ:
2, ஜோன்ஸ் லேன் :: மதராஸ்-1

முடிவும் விடிவும்

ரங்கமணி

பாலாற்றுப் பாலத்திலே ஆறு மணி வண்டி வரும் சத்தத்தைப் பரமசிவத்தின் பாம்புச் செவிகள் உணராமல் இல்லை. வேகதடை போட்டுக் கொண்டிருந்த அவன் கால்கள் இப்பொழுது ஓட்ட வேகத்தில் இருந்தன.

பரமசிவத்தின் உள்ளம் பதைபதைத்தது. உள்ளத்தில் ஏற்பட்ட கலக்கத்தை அந்தக் குளிர் காலத்திலும் அவன் உடல் வியர்வை மூலம் எடுத்துக் காட்டியது. இவ்வளவு நேரம் வீட்டினுள் இருந்தபொழுது அங்கு ஏற்பட்ட தாங்கமுடியாத மனச்சோர்வு கூட அவனை விட்டு அந்தச் சமயம் மறைந்து போயிருந்தது.

பகலும் இரவும் உறவாடும் இந்த நேரத்திலே அவன் படாளம் ஸ்டேஷனை நோக்கிப் பரபரப்போடு சென்று கொண்டிருந்தான். காலையில் வேலைக்குச் சென்ற அனைவரும் திரும்பி வரும் இந்த வேளையிலே அவன் தன் வேலையை ஏற்கப் போய்க்கொண்டிருந்தான்.

பரமசிவம் ஒரு 'ரயில்வே காங்கிக் கூலி'. ஆனால் தற்சமயம் அவன் 'இரவு காவல்காரன்'. வருடாவருடம் அக்டோபர் மாதத்திலிருந்து ஜனவரி மாதம் முடிய நான்கு மாதங்களுக்குப் படாளத்துக்கும், பழையனூருக்கும் இடையிலுள்ள இருப்புப் பாதையை இரவு வேளைகளில் கண்காணிக்கும் பொறுப்பு பரமசிவத்தைச் சேர்ந்தது.

படாளம் ஸ்டேஷனை விட்டுப் புகை வண்டி புறப்படவும், பரமசிவம் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

ரயில்வே நிர்வாகம் மழையைக் காத்துக் கொள்ள அளித்திருக்கும் 'ரெயின் கோட்டை' நம்பாமல் தனது சொந்த ஆஸ்தியான பனை ஓலையால் வேய்ந்த 'ஜம்மக்குடையை' வராந்தாவில் வைத்து விட்டு, பாக்கெட்டில் உறங்கிக் கொண்டிருந்த நோட் புத்தகத்தைக் கையெழுத்திட ஸ்டேஷன்மாஸ்டர் முன் நீட்டினான் பரமசிவம்.

"ஐந்து மணி ட்யூட்டிக்கு வர வேண்டிய நீ ஆறரை மணிக்கு வந்து நிற்கிறாயே! எப்படி ஐந்து மணின்னு கையெழுத்திட முடியும்? மற்றவர்கள் காற்று உனக்கும் வீசியதோ?"

ஸ்டேஷன் மாஸ்டர் வாயினின்று உஷ்ணம் கலந்த சொற்கள் வராவிட்டாலும், பரமசிவத்தின் உள்ளத்தில் அவை உறைக்காமல் போகவில்லை.

"வீட்டிலே காயலாங்க! அதனாலே........." சொற்களை முடிக்கவில்லை பரமசிவம்.

"இதுவரையிலும் ஒரு நாள் கூட நீ இப்படி வந்தது கிடையாது. இனி இப்படிச் செய்யாதே! 'நோட்புக்கை' எடு. கையெழுத்திடறேன்! ட்யூட்டியைப் போய்ப் பாரு" என்று ஸ்டேஷன்மாஸ்டர் கூறிவிட்டார்.

அறையின் ஒரு புறம் தன் கடமையை ஆற்றுவதற்கென்றே அளிக்கப்பட்டிருந்த பொருள்களை, தன் முதுகின் மேல் ஏற்றினான். அதற்கு மேல் 'ரெயின்கோட்' போட்டுத் தன் உடலையும், உடைமையையும் மூடினான். இடது கரத்தில் பச்சை, சிவப்பு காட்டும் விளக்கு மின்னலிட, வலது கையில் சில முக்கிய ஆயுதங்கள், டார்ச் விளக்கு முதலியவை அடங்கியிருந்தன. அரியலூர் விபத்துக்குப் பின்னர் 'இரவு காவல் வேலை புரிபவர்களுக்கு' நிர்வாகம் அதிகப்படியாக அளித்துள்ள பொருள் அந்த பாட்டரி விளக்கு.

எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, கண்கள் தண்டவாளங்களை நோக்கியே வட்டமிட, பழையனூரை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

அவன் விழிகளும், கரங்களும், கால்களும் முடுக்கி விடப்பட்ட இயந்திரத்தைப் போல் அதனதன் வேலையில் ஈடுபட்டிருந்தன. ஆனால் பரமசிவத்தின் உள்ளம் மட்டும் அவனது கிராமத்தில், ஒரு குடிசையினுள் வேதனையுடன் வாடி வதங்கிப் படுக்கையில் கிடக்கும் ஒரு ஆத்மாவையே சுற்றிச் சுற்றி வட்டமிட்டது. அதோடு மட்டுமா! வாழ்க்கையில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளெல்லாம் அவன் உள்ளத்தில் புகுந்து அவனது நெஞ்சை அரிக்க ஆரம்பித்தன.

கடந்த வருடம் இதே மாதத்தில்தான் அவன் நாகம்மாவைக் கரம் பிடித்தது. எதை மறந்தாலும் அவன் அதை மறந்துவிட முடியுமா? ஆனால் அவர்களது முதல் சந்திப்பும், மூன்று முடிச்சுகள் போட்ட அந்த நாளும் எப்படி அவன் நெஞ்சத்தை விட்டு நீங்கும்.

சித்திரை மாதத்துக் கோடை வெய்யில் ஊரையே எரித்துக் கொண்டிருந்தது. காலையிலிருந்து இரும்புடனும், கருங்கல் சல்லியுடனும் உறவாடிய உடலின் களைப்பைப் போக்க அந்த நடுப்பகலில் ஒரு மரத்தின் அடியில் படுத்துக் கொண்டிருந்தான் பரமசிவம்.

தன் அருகில் 'தொப்' என்று சத்தம் கேட்கவே திடுக்கிட்டு எழுந்தான். தன் பக்கத்தில் அழகே உருவான ஒரு பெண் நிற்பதைக் கண்டு அவன் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. வீசிய அனல் காற்று அகன்று, குளுமையான தென்றல் வந்தது போல் இருந்தது அவனுக்கு.

பரமசிவம் இதுவரையில் எத்தனையோ பெண்களைப் பார்த்துமிருக்கிறான்; பேசியுமிருக்கிறான். ஆனால் இந்த மாதிரி அழகிய பிம்பத்தை இதுவரை அவன் கண்டதில்லை.

வட்ட முகம்; அதற்கென்றே செதுக்கப்பட்ட எடுப்பான நாசி. கருவண்டுகள் போல் சுற்றிச் சுழலும் விழிகள்.

"என்னம்மா! எங்கே போயிட்டு வரே?" என்று நிதானமாகக் கேட்டான் பரமசிவம்.

"பேட்டையிலே போய் நெல் குத்திக்கிட்டு வரேன்." சிறிது கூடப் பதற்றமில்லாமல் கூறிக் கொண்டே தன் முகத்தில் அரும்பியிருந்த வியர்வை நீரைப் புடவைத் துணியால் துடைத்துக் கொண்டாள் அவள்.

அருகிலிருந்த அரிசி மூட்டையைப் பார்த்ததும் விஷயம் விளங்கிவிட்டது பரமசிவத்துக்கு.

அவள் தங்கிய அடுத்த அரை மணியில் முழு விவரங்களையும் விவரமாக அறிந்து கொண்டான் பரமசிவம்.

அவளும் பரமசிவத்தின் பக்கத்து ஊராகிய பலாப்பூரைச் சேர்ந்தவள். மளிகைக் கடை வைத்திருந்த அவள் தகப்பனார் திடீரென்று காலமாகிவிடவே, தன்னையும் தன் விதவை அன்னையையும் காப்பாற்ற அரிசி வியாபாரம் நடத்தி வருகிறாள் அவள்.

பரமசிவம் நாகம்மாவைத் தன் வீட்டுக்கும் அரிசி கொடுக்குமாறு கேட்டுக் கொண்டான்.

பேட்டைக்குச் செல்ல அவள் இருப்புப் பாதையைக் கடந்து செல்லும் பொழுதெல்லாம், பரமசிவத்தைப் பார்க்காமல் போவதில்லை. நாகம்மாள் வராத நாட்களெல்லாம் பரமசிவம் பலாப்பூரிலே காட்சி அளிப்பான்.

அதிகம் வளர்த்துவானேன்? அரிசி வியாபாரத்தில் ஆரம்பித்த அவர்களது நட்பு, காதலாக மாறி, ஒரு நல்ல நாளில் மேளதாளத்துடன் மணந்து அவளைத் தன் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டான் பரமசிவம்.

ஊரிலுள்ளவர்கள் எல்லோரும் பரமசிவம்-நாகம்மா ஜோடியைப் போல் எங்கும் கண்டதில்லை என்று கூறிக் கொண்டார்கள். அவர்கள் நடத்தும் இன்ப வாழ்க்கையைக் கண்டு ஊரே அதிசயித்தது.

சிறு வேலையானாலும் ரயில் உத்தியோகம். அன்பும், பண்பும், அழகும் அமைந்தவள் நாகம்மா. பரமசிவத்தின் பரவசத்துக்குக் கேட்க வேண்டுமா!

காலை முதல் மாலை வரை 'பிக்காக்'டனும் கடப்பாரையுடனும் வேலை செய்துவிட்டு அசதியுடன் வீடு திரும்புவான் பரமசிவம். ஆனால் நாகம்மாவின் புன்சிரிப்பு தவழும் வரவேற்பு ஒரு கணத்தில் அதைப் போக்கி விடும். இப்படி இன்பமாகச் சென்று கொண்டிருந்தது அவனது வாழ்க்கை.

நான்கு நாட்களாக நாகம்மாவுக்குக் கடும் காய்ச்சல். பரமசிவம் புழுவாய்த் துடித்துப் போனான். அதற்கேற்றாற் போல் அவனுக்கு 'இரவு காவல்காரன்' வேலை; அதை ஏற்றுக் கொண்டு ஒரு வாரம் கூட ஆகவில்லை. அதற்குள் நாகம்மாவுக்கு வேறு சுரம்வந்துவிட்டது.

ரயில்வே டாக்டரிடம் காண்பிக்க வேண்டுமென்றால் அவன் செங்கற்பட்டுக்கு அவளை அழைத்துச் செல்ல வேண்டும். டாக்டர் இங்கு வர மாட்டார். அதனால் பேட்டைக்குச் சென்று ஜட்கா வண்டி அமர்த்தி டாக்டரை அழைத்து வந்தான். டாக்டர் சொன்ன பதில் அவனைத் திடுக்கிட வைத்தது.

'விஷ சுரம். ஒரு வாரம் சென்றால்தான் சொல்ல முடியும்.'

மருந்தையும் அளித்து, மணிக்கொரு தரம் மறக்காமல் கொடுக்கவும் வேண்டும் என்பதை நினைவுறுத்திச் சென்றார்.

பகல் வேளைகளில் பரமசிவம் நாகம்மாவை விட்டு நகருவது இல்லை. இரவு வேளை வந்தால் அவன் அவளைப் பிரிந்தே ஆக வேண்டும். வயதான நாகம்மாவின் தாயாரின் பொறுப்பில் தான் அவளை விட்டுச் செல்ல வேண்டியிருந்தது.

அன்றும் டாக்டர் வந்தார். இரவு கழிந்து விட்டால் நாகம்மா பிழைத்து விடுவாள் என்ற நம்பிக்கையையும் அவர் அளித்து விட்டுச் சென்றார்.

பரமசிவம் ஒரு முடிவுக்கு வந்து விட்டான். நேராகத் தன் மேலதிகாரியிடம் சென்று விஷயத்தை விளக்கி இன்று இரவுக்கு மட்டும் ரஜா பெற்றுக் கொள்ள வேண்டும்.

அந்த வருடத்தில் அவன் நிறைய நாட்கள் ரஜா பெற்றிருந்தான். இப்பொழுது போய்க் கேட்டால் கிடைக்குமோ, கிடைக்காதோ என்று நினைத்துப் பார்க்கக் கூட அவனுக்கு நேரமில்லை.

காங்கிக்கூலியாக இருந்தால் மேஸ்திரியிடம் எழுதிக் கொடுத்து விடலாம். ஆனால் இதற்கு இன்ஸ்பெக்டரிடம் முன் அனுமதி பெற வேண்டும். அவரோ இப்பொழுதுதான் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்தவர். கடமையும், ஒழுக்கமும் நிறைந்த பரமசிவத்தைப் பற்றி அவருக்கு அதிகம் தெரியாது.

ஓட்டமும் நடையுமாக இன்ஸ்பெக்டரின் வீட்டை அடைந்து விட்டான். ரேடியோவின் அருகில் அமர்ந்து ஆனந்தமாகச் சங்கீதத்தை அனுபவித்துக் கொண்டிருந்த அவரிடம் தன் சோக கீதத்தைப் பாடினான். ஆனால்...

கலபமாக இரண்டே வாக்கியங்களில் விடை அளித்து விட்டார்.

"மனைவிக்குக் காய்ச்சலென்றும் குழந்தைக்கு வியாதி என்றும் எல்லோரும் லீவு பெற்றுக் கொண்டு சென்று விட்டால் வண்டிகளை மழைக் காலம் வரையிலும் நிறுத்திவிட வேண்டியதுதான்!"

பரமசிவம் கெஞ்சினான். கதறிக்கொண்டே தன் கதையைக் கூறினான். சம்பளமில்லாத லீவாவது அளிக்குமாறு மன்றாடினான்.

"என் மனைவிகூட ஊரில் இல்லை. அதனால் நான் அவள் இருக்கும் இடம் தேடிச் செல்லவில்லையே! என் கீழ் வேலை செய்பவர்களையும் என்னைப் போல் இருக்கத்தான் நான் விரும்புகிறேன்!" இரும்புள்ளம் படைத்த அந்த மனிதனின் மனத்தை இரும்புடன் வேலை செய்யும் பரமசிவத்தால் மாற்றுவதற்கு முடியவில்லை.

நாகம்மாவின் கடும் சுரத்தைப் பற்றி அவருக்கு என்ன தெரியும்? இல்லையில்லை. அவளிடம் அவனுக்கு இருக்கும் பாசத்தையும் நேசத்தையும் பற்றித்தான் அவர் என்ன அறிந்திருக்கப் போகிறார்?



துன்பம் கலந்த உணர்ச்சி நெஞ்சை அடைக்க, நெஞ்சு சோரக் குழம்ப, குழம்பிய உள்ளத்துடன் வீடு திரும்பினான்.

காய்ச்சலிலும் தன் நினைவாகவே வாய் பிதற்றிக் கொண்டிருக்கும் அருமை மனைவியை விட்டு அகல மனம் ஒப்பவில்லை.

இருந்தும் அவன் வேலைக்குக் கட்டாயம் போய்த்தான் தீரவேண்டும்.

எதிர் வீட்டுப் பெரியவரைத்தான் விடியற் காலம் திரும்பி வரும் வரையில் துணையாக இருக்குமாறு வேண்டிக் கொண்டான்.

வாடி வதங்கி வாழையிலைச் சருகைப் போல் படுக்கையில் விழுந்து கிடக்கும் நாகம்மா விடம் சென்றான்.

"நான் விடியற்காலையில் வந்து விடுகிறேன். தைரியமாக இரு." சொற்கள் உறுதியாக வெளி வந்தாலும் அவன் உள்ளமும் நாவும் தழுதழுத்தன.

பரமசிவம் திடீரென்று அடித்த சாரலினால் உணர்ச்சிச் சுழலிலிருந்து விடுபட்டான். காற்றும் மழையும் போட்டியிட்டுக் கொண்டு அடித்துக் கொண்டிருந்தன. அதற்கிடையில் கண்ணைப் பறிக்கும் மின்னல். பரமசிவமா இதற்கெல்லாம் அசைந்து கொடுப்பவன்! அந்த விளக்கின் வெளிச்சத்தில் அவன் கால்கள் முன்னேறிக் கொண்டிருந்தன.

குமாரவாடியும் வந்து விட்டது. பழைய ஊர் படாளம் ஸ்டேஷனுக்குள் இடையி லுள்ள ஊர் அது. ஸ்டேஷன் அந்த ஊருக்குக் கிடையாது. ஆனால் இருப்புப் பாதை மட்டும் அந்த ஊரின் பக்கமாகச் செல்லுகிறது. அவனைப் போல் பழையனூர் ஸ்டேஷனி லிருந்து வரும் 'காவல்காரனை' இங்குதான் சந்திக்க வேண்டும். சந்திப்பதோடு மட்டு மல்ல; அவரவர்களது பொருள்களை ஒருவருக் கொருவர் மாற்றிக் கொள்ளவும் வேண்டும்.

இரவு பன்னிரண்டு மணி. கையெழுத்தை வாங்கிக் கொண்டு அவன் அந்தப் பாதை வழியாக மூன்றாவது தடவையாகச் சென்று கொண்டிருந்தான். மழை இன்னும் விடாமல் பெய்து கொண்டிருந்தது. மழையிலும், புயலி லும், இடியிலும் அவன் விளக்கைக் காட்டி வண்டிகளையெல்லாம் அனுப்பி வைத்தான். இத்துடன் மூன்று மணிக்கு வரும் திருவனந்த புரம் எக்ஸ்பிரஸ்தான் அந்த வழியே செல்ல வேண்டும்.

தண்டலம் ஏரிப் பாலத்தையும் பரமசிவம் சமீபித்து விட்டான். பாலத்தைக் கடக்காமல் அவன் கால்கள் குத்திட்டு நின்றன. ஏரிக்குக் குறுக்கே அந்தச் சிறிய பாலத்துக்கு மேலே ஒரு அடிக்குத் தண்ணீர் பிரவாகமாக ஓடிக் கொண்டிருந்தது.

வெள்ள பூதம் வண்டிகளை விழுங்கக் காத் துக் கொண்டிருக்கிறது என்பதை ஒரு கணத் தில் பரமசிவம் தீர்மானித்து விட்டான். இனி புகை வண்டிகள் சென்றால், 'அரியலூ ரைப் போல்' ஆக வேண்டியதுதான் என் பதை அவன் இதயம் அடித்துச் சொல்லியது. ஒரு மணி நேரமாக விடாது பெய்த மழையின் விளைவு இது என்பதும் அவனுக்குத் தெரிந்து விட்டது. சமயத்தில் அபாயத்தைக் காட்டிக் கொடுத்த செல்லியம்மனுக்கு அஞ்சலி செய்து விட்டு இனி வண்டியை நிறுத்துவ தற்கு வேண்டிய வழிகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டான் பரமசிவம்.

கொட்டும் மழையைப் பொருட்படுத்தா மல், அவன் கால்கள் 'துரித வேகத்தில்' வேலையில் ஈடுபட்டன.

மேல் பாலத்துக்கு நூறு கெஜம் தள்ளிச் சென்று இருப்புப்பாதையின்மேல் வண்டியை நிறுத்தும் வெடிகளைப் பொருத்தினான்.

அதே மாதிரி எதிர்த் திசையிலும் வைக்க வேண்டும். அதையும் எப்படியோ செய்து விட்டான். வண்டி வர வேண்டிய திக்கை நோக்கி, சிவப்பு விளக்கைப் பிடித்துக் கொண்டு நின்றான்.

தன் ஊர்ப் பக்கமாக நாலைந்து பேர்கள் லாந்தரும் கையுமாக வேகமாக வருவதைப் பரமசிவம் பார்த்தான். அவர்களும் நெருங்கி விட்டார்கள். வந்தவர்களில் நாகம்மாவுக் குத் துணையாக வைத்து விட்டு வந்த அந்தப் பெரியவரும் ஒருவர்.

"தம்பி! நாகம்மா உடனே உன்னைப் பார்க்கவேணுமாம். ஏதோ முக்கியமாகப் பேசவேணுமாம். உயிருக்கு மன்றாடிக் கொண் டிருக்கும் அந்த ஆத்மா உன்னைக் காணத் துடிதுடிக்குது" என்றார் அவர்.

பரமசிவத்தின் உள்ளத்தில் பெரும் போராட்டம் எழுந்தது. கடமைக்காக அவன் இங்கு இருப்பானா? அல்லது கடமையை உதறித் தள்ளி விட்டுக் காதல் மனைவியைக் காணச் செல்வானா?

ஒருகணம் கண்ணீரும் கம்பலையுமாகக் கடும் காய்ச்சலில் விழுந்து கிடக்கும் நாகம் மாவின் சாந்தம் தவழும் முகம் அவன் மனக் கண்ணின் முன் காட்சி அளித்தது. அதே மனம் மறுகணம் ஆயிரக்கணக்கான உயிர் களைத் தாங்கிக் கொண்டு அசுர வேகத்தில் வரப்போகும் 'எக்ஸ்பிரஸ்' வண்டியை எண்ணிப் பார்த்தது.

"நடுவில் விட்டு விட்டு என்னால் வரமுடி யாது. 'டியூட்டி' முடிந்ததும் வந்துடறேன். நீங்கள் போய் நாகம்மாவிடம் சொல் லுங்கள்" என்ற பரமசிவத்தின் சொற்களில் உறுதியும் நயமும் கலந்திருந்தன.

"இப்போது வந்து பார்க்காவிட்டால் அப் புறம் நீ அவளை உயிரோடு காண்பதுகூடச் சந்தேகம்தான். உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கும் ஒரு பேதையின் உள்ளத் தைப் போய்த் திருப்திப்படுத்து. அப்பா! நீ போனால் ஒரு வேளை அவள் பிழைத்து எழுந் தாலும் எழுந்து விடுவாள். நாங்கள் யாரா வது நீ வரும் வரையிலும் உன் வேலையைப் பார்த்துக் கொள்கிறோம்."





சென்னை சமூகநல க்ஷேமாபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திருவொற்றியூரில் நடத்தப்படும் சிசுசம்ரக்ஷணை சாலைக்கு நவம்பர் 13-ந் தேதி சென்னை கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம்மேதி விஜயம் செய்தார். கவர்னருக்குப் பிர்க்கா சமூகநல போர்டின் அங்கத்தினர் ஸ்ரீமதி சிவகாமி சபேசன் வரவேற்புரை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

ஆனால் பரமசிவத்தின் உறுதியான உள்ளத்தை அவர்களால் மாற்ற முடியவில்லை. வந்த வழியே திரும்பிச் சென்றார்கள்.

பரமசிவத்தின் இதயத்திலிருந்து நீண்ட பெருமூச்சு ஒன்று வெளிவந்தது. உணர்ச்சி வசப்பட்ட முகத்தில் மழை நீரோடு வியர்வை நீரும் பூத்துக் கன்னங்களில் வழிந்தோடியது.

"நாகம்மா! என்னை மன்னிச்சுடு. உன் அருகில் இருக்க முடியாத பாவி நான்." அவன் உதடுகள் முணுமுணுத்தன.

வெகுதூரத்தில் தெரிந்த பிரகாசமான வெளிச்சத்தின் மூலம் எக்ஸ்பிரஸ் பழையனூரைத் தாண்டி வருகிறது என்பதை அறிந்து கொண்டான். வண்டியை நிறுத்தத் தன்னை ஆயத்தப் செய்து கொண்டான். நேரம் செல்லச் செல்ல விளக்கின் பிரகாசமும் பெரிதாகி அவன் விழிகளைக் கூசச் செய்தது. அடுத்த விநாடி நடப்பதைப் பற்றிக் கவலைப்படாமல் ஆனந்தமாக வாழ்க்கை நடத்தும் மனிதப் புழுக்களைப் போல் விரைவில் அபத்து இருக்கிறது என்பதை அறியாமல் அசுர வேகத்தில் வந்து கொண்டிருந்தது அந்தக் கரிய 'இயந்திர மிருகம்'.

வண்டி நெருங்க நெருங்கப் பரமசிவத்தின் வலது கரத்திலே ஏந்தியிருந்த சிவப்பு விளக்கு காற்றிலே பறக்கும் கொடியைப் போல் ஆடிக் கொண்டிருந்தது.

வண்டியும் நின்று விட்டது. டிரைவர் ஆபத்திலிருந்து காத்த பரமசிவத்தைப் பாராட்டினார். பிரயாணிகள் புகழ்ந்தார்கள். ஆனால் பரமசிவத்தின் செவிகள் அவர்களது பாராட்டுரைகளைக் கேட்கவில்லை. உள்ளமெல்லாம் நாகம்மாளிடமே லயித்திருந்தன.

வேதனை நிறைந்த உள்ளத்துடன் தன் கடமையை ஆற்றிவிட்டு வீடு திரும்பினான் பரமசிவம். தன் குடிசையின் அருகே நிற்கும் கூட்டத்தைக் கண்டதுமே பரமசிவத்துக்கு எல்லாம் புரிந்து விட்டது. கிளி கூட்டை விட்டுப் பறந்து விட்டது. நாகம்மா அவனை ஏமாற்றி விட்டு இந்த உலகத்தை விட்டே சென்று விட்டாள். பல உயிர்களைக் காப்பாற்றிய பெருமையோடு திரும்பிய அவனால் அவள் 'உயிரை'க் காண முடியவில்லை.

அழுதான், கதறினான். முட்டி மோதிக் கொண்டான். வெப்பத்தால் வாடிய பூங்கொடியைப் போல் அவன் வருகைக்காக ஏங்கியிருந்தவள் போல் நாகம்மா பிணக் கோலத்தில் காட்சி அளித்தாள்.

அவன் குடிசையை நோக்கி ஜீப் வரும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து அதிகாரிகளின் பூட்ஸ் ஓசை.


மேலதிகாரியே பரமசிவம் இருக்குமிடம் தேடி வந்து விட்டார். அவருடன் அவனுக்கு லீவு கொடுக்க மறுத்த அந்த இன்ஸ்பெக்டரும் இருந்தார்.

'ஆபத்திலிருந்து காப்பாற்றியதற்காக அரசாங்கம் ஆயிரம் ரூபாய் அன்பளிப்பு அளித்திருக்கிறது' என்று பெரிய அதிகாரி பாராட்டி விட்டுச் சென்றார். ஆனால் இன்ஸ்பெக்டர் அந்த இடத்தை விட்டு நகரவில்லை. அவர் விழிகளில் கண்ணீர் வெள்ளம் குளம் கட்டி நின்றது.

'பரமசிவம்! என்னை மன்னித்து விடு. மனித இதயம் இல்லாத பாவி நான்" என்றார் நாத் தழுதழுக்க. அத்துடன் அவர் நிறுத்தவில்லை.

"பரமசிவம்! உன்னைப் போல் கடமை வீரர்களை நான் எங்கும் கண்டதில்லை. அதுவும் உன்னை என்றென்றும் நான் மறக்க முடியாது. உன்னால் காப்பாற்றப்பட்ட அந்த ரயிலில் தான் என் மனைவியும் ஊரிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தாள். நூற்றுக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியதோடு நிறைமாத கர்ப்பிணியான என் மனைவிக்கு உயிர்ப் பிச்சை அளித்த உன் எதிரே நிற்கக்கூட என் உள்ளம் தயங்குகிறது."

பரமசிவத்தை இனி யார் பாராட்டினால் தான் என்ன? அவன் உள்ளத்துப் புண்ணிலிருந்து ரத்தம் மளமளவென்று கொட்டியது. காட்டுத் தீயில் சிக்கிய மான் கூட்டம் போல் அவனுடைய உள்ளம் பித்துப் பிடித்து இங்குமங்கும் அலைந்தது. இனி அவனுக்கு நிம்மதி ஏது? சாகாத சவமாகி விட்ட அவனுக்கு அமைதிதான் ஏது?



லண்டனில் ராஜாஜி

நேற்றிரவு, நமது 'ராஜாஜியை,' இங்கே இங்கிலாந்தில், லட்சக்கணக்கான மக்கள் டெலிவிஷனில் பார்த்தார்கள்; ஆங்கிலத்தின் தொடர்பினால் இந்தியா அடைந்துள்ள பயன் பற்றி, அவர் கூறிய மொழிகளைக் கேட்டு ஆமோதித்தார்கள்.

"The Inheritors" என்ற தொடர் — நிகழ்ச்சி ஒன்றை, பி. பி. ஸி. டெலிவிஷனில் நடத்துகிறார்கள். அதில், நேற்று இந்தியாவைப் பற்றிய பகுதி நடந்தது. நாற்பத்தைந்து நிமிஷங்கள் நடந்த இந்த நிகழ்ச்சியில், ராஜாஜி முதலிடம் பெற்றிருந்தார்.

இக்காலத்தில்தான் எத்தனை விந்தையான சாதனங்கள்! கென்ஸிங்டனிலுள்ள என் ஜாகையிலேயே ராஜாஜியின் உருவத்தைக் கண்டேன்; பேச்சைக் கேட்டேன்!

இந்த டெலிவிஷன் நிகழ்ச்சி, தமிழ்நாட்டுக்கே உரிய நாதஸ்வர இசையுடன் முடிவடைந்தது. அந்த இசையுடன் என் மனம் தமிழ்நாட்டில் உலவியது.

லண்டன்
26-11-58 — கந்தா

கண்டாமணி

"கல்கி"யை நான் ஒரு கதைப்பத்திரிகை என்று படிக்காமல் இருந்தேன். ஓராண்டு காலமாகக் 'கல்கி'யின் தலையங்கம் பயிரிடுவோரின் பரிதாபத்தைப் பத்தி, பத்தியாக எழுதி வந்ததைப் படித்த பிறகுதான் விவசாய இலக்கியப் பத்திரிகையாக அதை நான் போற்றி வருகிறேன்.

வோட்டுக்காக விவசாயிகளை வேட்டையாடும் ஆட்சி பீடத்துக்குக் கல்கியின் தலையங்கங்கள் கணீர் என்று ஒலிக்கும் கண்டாமணியாகும். இது மிகையல்ல.

சேலம்
1-12-58 — பெ. சீனிவாசன்

மணிமுத்தாற்றுத் தண்ணீர்

எங்கள் கிராமத்திலும் சுற்று வட்டாரக் கிராமங்களிலும் சுமார் பத்து ஆண்டுகளாக மழை யில்லாமல் விவசாயம் செய்ய முடியாமல் கஷ்டமும் நஷ்டமும் அடைந்தோம். சென்ற வருடம் செழிப்புடன் மழை பெய்து குளங்கள் எல்லாம் நிறை குளங்கள் ஆகின. நிறை குளத்தோடு மணிமுத்தாறு தண்ணீரையும் சேர்த்து விட்டார்கள். நன்றாகப் பயிர் விளைந்தது. அதேபோல் இந்த ஆண்டும் மணிமுத்தாறு தண்ணீர் கண்டிப்பாக வரும் என்று விவசாய மக்கள் நினைத்து வித்துக்களை நாற்று பாவி விட்டார்கள். தற்போது கால மழையும் பெய்யாமல் குளங்களில் தண்ணீரும் இல்லாமல் போனதால், மணிமுத்தாறு தண்ணீர் வரும் என்று நம்பியிருந்தோம். எங்கள் நம்பிக்கை பொய்த்துவிட்டது போல் தெரிகிறது. மணிமுத்தாறு தேக்கத்திலிருந்து 18 மைல்களுக்குள் உள்ள குளங்களுக்கு மட்டும் தண்ணீர் விடப்படும் என்று பத்திரிகை மூலம் அறிந்ததும் எங்களுக்கு இடி விழுந்தது போலிருக்கிறது. 18 மைல்களுக்குக் கிழக்கே நூற்றுக் கணக்கான குளங்கள் இருக்கின்றன. (இவை யெல்லாம் மானம் பார்த்த குளங்கள் தான்) இதற்குத் தண்ணீர் விடாமலிருப்பதற்கு நாங்கள் செய்த பாவந்தான் என்ன? அல்லது நாங்கள் சர்க்காருக்கு வரிப்பணம் செலுத்தவில்லையா? இது என்ன ஓர வஞ்சனை?

மணிமுத்தாற்றில் தண்ணீர் 88 அடிக்கு மேல் இருக்கிறது. மணிமுத்தாறு பாசனமே முதலில் கிழக்கே யிருந்துதான் மேற்கே பாய வேண்டும். ஆனால் இன்று தலைகீழ்ப் பாடமாகி விட்டது. கூடிய சீக்கிரம் எங்கள் குளங்களுக்கும் சுற்று வட்டாரக் குளங்களுக்கும் தண்ணீர் விடவேண்டும். தண்ணீர் விடவில்லையானால் நாற்றுக்கள் கருகிச்சாம்பலாகி விடும். பின்னர் விதை வித்துக்கூட வாங்க முடியாது. ஆகவே காருண்யம் மிகுந்த நமது அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அம்பலசேரி
1—12—58 — மு. மா. முத்தையா

முன்பணம்

சர்க்கார் உத்தரவின்படி சென்ற ஆண்டு தஞ்சை ஜில்லா போர்டின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள் பலர் கிறிஸ்துமஸ் பொங்கல் பண்டிகைகளுக்கு முன் பணம் கோரி, மனுச் செய்தோம். மேற்படி பணம் உரிய காலத்தில் கிடைக்க வேண்டும் என்பதற்காக மனுவுடன் தபால் பில்லை ஒட்டிய ரசீதும் அனுப்பினோம். அவற்றைப் பெற்றுக்கொண்ட ஜில்லா போர்டார் உண்டு அல்லது இல்லை என்ற பதிலே அளிக்காததுடன் தபால் தலை ஒட்டிய ரசீதையும் திருப்பி அனுப்பவில்லை. ஆயினும் ஜில்லா போர்டு ஆபீஸ் குமாஸ்தாக்களும் சேவகர்களும் முன் பணம் பெற்று விட்டதாக அறிந்தோம்.

இவ்வாண்டும் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்பது தினப் பத்திரிகையின் மூலம் அறிந்தோம். தற்சமயம் தஞ்சை ஜில்லா போர்டிலும் பணம் உபரியாக உள்ளதாகப் பத்திரிகை வாயிலாக அறிகிறோம்.

ஆகவே இந்த ஆண்டேனும் ஜில்லா போர்டார் ஏழை ஆசிரியர்கள்மீது கருணைகொண்டு கிறிஸ்துமஸ் பொங்கல் போன்ற பண்டிகைகளுக்கு முன் பணம் கொடுத்து உதவி புரிந்து ஆதரிக்க முன் வருவார்களா? அரசினரும் இதற்கு உடனடியாக ஆவன செய்வார்களா?

வேளாங்கண்ணி
1—12—58 — ஆ. பி. இரத்தினம்

மேஜை

மத்ய அரசினர் கவனிப்பார்களா?

இன்றைய நிலையில் நமது நாட்டில் நிலவி வரும் விவசாய நிலச்சுவான்தார் உறவு அற்ற தன்மை, விலைவாசிகள் உயர்வு, உணவு உற்பத்தியின் தரக் குறைவு, கல்வி போதனு முறையில் ஒழுங்கீனம் இவைகளுக்குள்ள காரணங்களை அரசாங்கத்தார் சரியாகத் தெரிந்து கொள்ளாமலும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்காமலும் இருந்து வருகிறார்கள். நமது மதிப்புக்குரிய ராஜாஜி அவர்கள் மேலே கண்டவைகளுக்கு உதாரணங்களுடன், நல்ல முறையில் நம் நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற ஒரே எண்ணத்தில் தமது உயரிய அபிப்பிராயங்களைப் பல பிரசங்கங்களில் நமக்கு எடுத்துரைத்திருக்கிறார்கள்.

மத்திய, ராஜ்ய அரசாங்கத்தார்களும் விவசாயம் பெருகவேண்டும் என்று பறைசாற்றுகிறார்கள். ஆனால் நிலத்துக்கு உச்ச வரம்பு கட்டியும், உழுபவனுக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் — இடையில் வாரம் நிர்ணயம் செய்யும் சட்டங்களின் மூலமும் எவ்வளவு மோசமான நிலை உண்டாக்க வேணுமோ, அதைச் செய்து விட்டார்கள். வோட்டுப் பெற்று, சட்டசபைக்குப் போக வேணுமென்ற ஒரே நோக்கந்தான் போலும்! அதன் பலன்தான் இன்றைய விவசாய நிலச்சுவான்தார்களின் உறவற்ற தன்மையும் உணவு உற்பத்தியில் அக்கறையில்லாத நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றன.

கல்வி முறையில் ராஜாஜி அவர்களின் கருத்துப்படி தொழிலுடன் கூடிய படிப்பு என்ற ஷிப்டு முறை ஏற்பாடு செய்திருந்தால் (எதிர்கால மன்னர்கள் என்று வர்ணனை செய்யும்) மாணவர்களுக்குக் கல்வியில் முன்னேற்றமும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்றுக் கொள்ளும் வாய்ப்பும் தொழில்களைக் கற்றுக் கொள்ளும் சக்தியும் பள்ளிகளில் இடமில்லை என்ற சொல் இல்லாத நிலைமையும் ஏற்பட்டு நல்ல முறையில் நடந்து வந்திருக்கும். ஆனால் ஆசிரியர்களுக்குச் சிறிது வேலையின் பளு அதிகமாகும். அதற்கு அரசாங்கம் அவர்களுக்குச் சில சலுகைகள் காட்டினால் அவர்களும் பூரணமாய் ஒத்துழைப்பார்கள். ஆகவே, இனியாவது நன்றாகச் சிந்தித்துப் பார்த்து, நல்ல முறையில் காரியங்களை நடத்தி வர வேண்டும்.

நாம் எப்படியாவது மக்களிடம் வோட்டுப் பெற்றுச் சட்டசபை, லோக ஜனசபைகளில் போய் உட்கார வேணுமென்று நினைத்துச் செய்திருக்கிற விவசாயி-நிலச்சுவான்தார் இவர்களின் உறவை வேறுபடுத்தியிருக்கிற சட்டங்களை ஒழித்தும், நிலப் பிரச்னைகளில் வெகு ஜாக்கிரதையாக அணுகியும், உச்ச வரம்பு கட்டும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டும், நம் தலைவர் ராஜாஜியைக் கலந்து முடிவு செய்து நடத்தும் வந்தால் நாடு நல்ல முறையில் முன்னேற்றம் அடைய முடியும்.

பண்டம்
29-11-58

லெ. சுந்தரராஜன்

ஒரு யோசனை

"சுயராஜ்யா" நவம்பர் 30-ம் தேதி இதழின் தலையங்கத்தை வரவேற்கிறேன். மேலும் பாரா 16-க்கு நான் தீர்க்கமாய் ஆலோசித்ததைத் தங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். அவை யாதெனில்: சிறு நிலங்களையெல்லாம் சேர்த்துப் பெரிய பண்ணைகள் ஆக்க முதன் முதலாக அரசாங்கம் உண்மையுடனும், முழு மூச்சுடனும் முன்வர வேண்டும். இப்பெரிய பண்ணைகளைக் கூட்டுறவு முறையில் விஞ்ஞான முறைப்படி சாகுபடி செய்ய வேண்டும். இதற்கு ஆகவேண்டிய சகல செலவுகளையும், உதவிகளையும் பொறுப்புக்களையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும். இதில் ஒருவரையும் கட்டாயப்படுத்தக் கூடாது. விவசாயிகள் தாங்களாகவே இப் பண்ணைகளில் சேர்ந்துகொள்ள முன்வரும்படி பிரசாரம் செய்ய வேண்டும். ஒவ்வொரு பண்ணையும் ஒரு குறிப்பிட்ட விஸ்தீரணமுள்ள நிலத்தை அந்த விவசாயியின் பொறுப்பில் விடவேண்டும். இந்தப் பண்ணையிடம் அரசாங்கம் தொடர்புகொள்ள வேண்டும். இக்கூட்டுப் பண்ணைகளில் சேரும் விவசாயிகளின் நிலப் பத்திரத்தைக் கொண்டு நில அளவையும் இடத்தையும் மற்றும் தேவையான குறிப்புக்களையும் பண்ணையில் பதிவு செய்து கொள்வதோடு, உடனடியாக அந்த விவசாயியுடன் சென்று நிலத்தின் அளவுகளைச் சரியானபடி அளந்து ஆங்காங்கு பண்ணையின் குறிகளைக் கொண்ட சின்னத்துடன் குத்துக்கல்களை நடவேண்டும். இவைவெல்லாம் சந்தேகத்துக்கு இடமின்றி நிலச் சொந்தக்காரரின் முன்னதாகவே நடைபெற வேண்டும்.

மேலும் பயிர்களைக் காப்பதற்கும், அறுவடைத் தானியங்களைக் காப்பதற்கும் விவசாயிகளே பொறுப்புடன் இருக்க வேண்டும். இப்படி அறுவடையான தானியத்தை அவரவர்கள் நிலத்தின் அளவுப்படி அவரவர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். இதில் கீழ்க் காணும் முறைப்படி விவசாயிகள் திருப்பியளிக்க வேண்டும். அதாவது:

நிலத்தின் அளவுப்படி

1. மறு வருட விதைக்காக ..
2. உரம் முதலிய செலவுக்காக ..
3. மற்ற காப்பு-இதர செலவுக்காக ..
4. இயந்திரச் செலவுக்காக ..
5. தண்ணீர், பாசனச் செலவுக்காக ..

இதில் மேலே காணும் 4—5 இனச் செலவுகளை மட்டும் அரசாங்கம் தன் செலவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பொன்மலை
29—11—58

த. ப. துளசிதாசன்

படித்துப் பாருங்கள்

உயிரின் யாத்திரை

நான் யார் என்பதைக் காட்டிக் கொள்ளாமல் முழு மனிதனாக வாழ்ந்த ஒருவனைச் சிருஷ்டிக்க வேண்டும் என்ற தமது ஆவலைக் கதாசிரியர் ஸ்ரீ எம். வி. வெங்கட்ராம் அவர்கள் இந்நூல் மூலம் பூர்த்தி செய்து கொள்ள முயன்றிருக்கிறார்.

' விளக்கைப் பிளந்து
விளக்கினை ஏற்றி
விளக்கினுக் குள்ளே
விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை
விளக்க வல்லார்க்கு
விளக்குடையான் கழல்
மேவலு மாமே '

திருமூலர் கூறும் இம் முறையைச் செயலாக்குவதில் உள்ள சிரமம் யாவரும் அறிந்ததே. லௌகிக வாழ்க்கையைப் பகைப்புலனாகக் கொண்டு எழுதப்பட்ட இக்கதை மூலம் வாசகர்கள் முழு மனிதனை எப்படிப் புரிந்து கொள்வார்கள், எப்படி வரவேற்பார்கள் என்பது சிந்திக்க வேண்டிய விஷயம். உயர்ந்த கருத்துக்களைக் கூறுமிடத்து உயர்ந்த பண்பு கொண்ட கதையைப் புனைவதே பயனளிக்கக் கூடியது என்று கூறத் தேவையில்லை.

பிரசுரம்: வானதி பதிப்பகம், சென்னை-17; விலை: ரூ. 1—00.

விநாயகர் வழிபாட்டு நூல்

சமய நூல்களையும் இதர தமிழ் நூல்களையும் நன்முறையில் பதிப்பித்துக் குறைந்த விலையில் மக்களுக்கு அளிக்க வேண்டுமென்ற உயர் நோக்குடன் காஞ்சிபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கச்சி ஏகம்ப நூற்பதிப்புக் கழகத்தின் முதல் வெளியீடு விநாயகர் வழிபாட்டைப் பற்றி அமைந்திருப்பது நல்ல ஆரம்பம். இடையூறின்றி இதைத் தொடர்ந்து இதர வெளியீடுகள் வரும் என்பதற்கு இது அறிகுறி.

இறைவன் வழிபாட்டை வடமொழி மூலம் செய்ய வேண்டும்; மந்திரங்கள் அம்மொழியில்தான் இருக்கின்றன என்னும் கொள்கை சமீப காலத்தில் சிற்சில இடங்களில் மிகவும் தீவிரமாக எதிர்க்கப்பட்டுத் தமிழ் மொழியிலேயே அர்ச்சனைகள் செய்து வழிபாடு செய்ய வேண்டும் என்னும் கருத்து வேகமாகப் பரவி வருகிறது. இவ்விரண்டு கருத்துக்களையும் இரண்டு எல்லைகளாக மதித்து, வழிபடும் முறைகள் இரண்டு மொழிகளிலும் விரிவாகவே கொடுக்கப்பட்டிருக்கின்றன இந்நூலில். மேலும் தமிழ் மறைகளாகிய திருமுறைகள் கேவலம், வழுத்துரைகள் மட்டுமல்ல, மந்திரங்களால் ஆனவை. எனவே தெய்வ வழிபாட்டுக்குத் தன்னிறைவு பெற்றவை என்பதை எடுத்துக் காட்டுவது போல், இதில் கொடுக்கப்பட்டுள்ள தமிழ் மந்திரங்கள் திருமுறைகளிலிருந்தே தொகுக்கப்பட்டிருக்கின்றன. இறைநிலை, இறைவன் மேற்கொள்ளும் திருவுருவின் இயல்பு, விநாயகரை வழிபட்டுத் திருவருள் பெற்ற பெருமக்கள் வரலாறு, மந்திரங்களின் இயல்பு, திருமுறைகளில் வந்துள்ள திருமந்திரங்களின் தொகுப்பு முதலியவற்றைத் தினசரி வழிபாட்டுக்கு உபயோகமாகும் முறையில் இப்புத்தகம் அளிக்கிறது. இத்தொகுப்பை முறைப்படுத்தி ஆக்கித் தந்தவர் சித்தாந்தக் கலைமணி வித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள். சமயப் பற்றும் மக்களிடம் அன்பும் நூலறிவும் ஒருங்கே பெற்ற ஒருவர் இம் முயற்சியில் ஈடுபட்டிருப்பது இந்நூலின் சிறப்பை உயர்த்துகிறது. 'வடமொழிக்கும் தென்மொழிக்கும் இடையில் கடவுள் வழிபாடே வேண்டாம்' என்று ஒதுங்கி நிற்கும் இக்காலத்து மக்களை எம்மொழியிலாவது கடவுளை வழிபடு என்று இந்நூல் தூண்டுகிறது.

கிடைக்குமிடம்: கச்சி ஏகம்பர் நூற்பதிப்புக் கழகம்; 459, காந்திரோடு, காஞ்சிபுரம். விலை ரூ. 1—25.

Export India Journal

ஏற்றுமதி வர்த்தகத்துக்காகவே தனது முழு கவனத்தையும் செலுத்தி ஒரு மாதாந்திரப் பத்திரிகை சென்னையிலே நடத்தப்படுகிறது என்பது பலருக்குத் தெரியாமலிருக்கலாம். ஏனெனில் ஏற்றுமதி, இறக்குமதி, தொழில் அபிவிருத்தி என்றதும் பம்பாய், கல்கத்தா தான் எல்லோர் நினைவிலும் வரும். இது சம்பந்தமான சஞ்சிகைகளையும் அங்கிருந்து தான் சாதாரணமாக எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். ஆனால் நமது சென்னையில் திருவல்லிக்கேணியிலிருந்து எட்டு வருஷங்களாக இம்மாதிரி ஒரு பத்திரிகை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். அன்னியச் செலாவணிப் பற்றாக்குறை நமக்கு முக்கிய பிரச்னையாக விளங்கும் இந் நாட்களில் இம்மாதிரி சஞ்சிகைகளின் சேவை மிகவும் பாராட்டத்தக்கது. ஏற்றுமதி என்றாலே இறக்குமதியும் தொக்கி நிற்கிறது. எனவே மற்ற நாடுகளில் அவ்வப்போது நிலவும் இறக்குமதி விதிகள், நடைமுறைகள், மாறுதல்கள் முதலிய விஷயங்களும் இச் சஞ்சிகையில் விஸ்தாரமாக இடம் பெற்றால் இதன் உபயோகம் இன்னும் அதிகமாகும். மேலும், தமிழ் மொழிவளர்ச்சியில் ஆர்வமே பொங்கி வரும் இந்நாட்களில் இம்மாதிரி ஒரு தமிழ்ச் சஞ்சிகை இல்லாதது தமிழகத்துக்குக் குறை.

ஆசிரியர் டி. கே. என். கேசவன், அலுவலகம், தபால் பெட்டி 401, சென்னை-5; தனிப்பிரதி ரூ. ஒன்று. ஆண்டு சந்தா ரூ. 12.


GOKUL
SANDAL
TOILET POWDER
GOKUL
B. Sarojadevi


உயர்தரத்திற்கும்
சிறப்பான த்வனிக்கும்
இணையற்ற இரு
அற்புதமான நேஷனல்-எக்கோ ரேடியோ மாடல்கள்!
மாடல் A-317: இந்த மேன்மையான ரேடியோ மூலம் ஒலிபரப்புகளை மிகவும் தெளிவாகக் கேட்கலாம். A. C. கரண்டில் இயங்குகிறது. 7 வால்வுகள், ரூ.595/-
நேஷனல்-எக்கோ
செய்யப்பட்டவை
ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்ஸெஸ் பிரைவேட் லிமிடெட்
1/18 மௌண்ட் ரோடு, மதராஸ்
பிரேசர் ரோடு, பாட்னா






பறக்கும் வாத்து

★

இதற்கு வேண்டியதெல்லாம் ஒரு மெல்லிய அட்டை, ஒரு நீண்ட குண்டூசி, பிளாஸ்கை மூடும் கார்க் இவைதான். இனி இதைச் செய்ய ஆரம்பிக்கலாம். மேலேயுள்ள படத்தை அட்டையில் ஒட்ட வேண்டும். உலர்ந்த பிறகு இந்தச் சக்கரத்தை அதன் கறுப்புக் கோட்டின் மேலாக (எட்டு வெட்டு வாய்கள் இருக்கும்படி) கத்தரித்து எடுத்துக் கொள்ளுங்கள். குண்டூசியைச் சக்கரத்தின் மத்தியில் குத்திப் பின்னால் வரும் முனையைக் கார்க்கில் பொருத்தி விடுங்கள். இப்போது சக்கரத்தைச் சுற்றிவிட்டால் அது சுழலும். கண்ணாடியின் முன்னால் போய் நின்றுகொண்டு கார்க்கோடு பொருத்தப்பட்ட சக்கரத்தை இடது கையில் இடது கன்னத்தின் அருகே பிடித்துக் கொண்டு வலது கண்ணை மூடிக் கொள்ளுங்கள். இனி வலது கையால் சக்கரத்தைச் சுற்றுங்கள். சக்கரம் சுழலும்போது திறந்துள்ள இடது கண்ணினால் சக்கரத்தின் வெட்டு வாய்களின் வழியே கண்ணாடியில் தெரியும் பிரதிபிம்பத்தையே பார்த்துக் கொண்டிருங்கள். வாத்து தனது இறக்கைகளை அசைத்து அழகாகப் பறந்து செல்லும் அதிசயத்தைக் காண்பீர்கள்.



மூன்று நண்பர்கள்

வாண்டு மாமா

18. ஜமீன்தார் நரசிம்மபூபதி

சேகர் எப்போது தூங்கினாரோ, அது அவருக்கே தெரியாது. நெற்றியில் இதமான குளிர்ந்த கையின் ஸ்பரிசம்படவே திடுக்கிட்டுக் கண் விழித்தார். தம் அருகே குனிந்தபடி ஒரு பெண் நிற்பதைக் கண்டார். திகைப்புடன் தன்னைப் பார்க்கும் சேகரின் மன நிலையை உணர்ந்துகொண்டவள்போல், "உங்களைக் கவனித்துக் கொள்வதற்காக நான் அமர்த்தப்பட்டிருக்கிறேன். எனக்கு நர்ஸ் தொழில் நன்றாகத் தெரியும்" என்றாள் அந்தப் பெண். சேகர் எழுந்திருந்து படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

"அது சரி! இப்போது நான் எங்கே இருக்கிறேன்? என்னை இந்த அறைக்குள் இப்படி அடைத்து வைத்திருப்பவர்கள் யார் என்று உன்னால் சொல்ல முடியுமா?" என்று கேட்டார். அவளிடமிருந்து ஏதாவது புதிய தகவல் கிடைக்குமோ என்றுதான் அவர் இப்படிக் கேட்டார். ஆனால் லலிதா என்ற அந்தப் பெண்ணிடமிருந்து சேகருக்குச் சாதகமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் அந்தப் பெண்ணும் தம்மைப் போலவே சதிகாரர்களிடம் சிக்கிச் சிறையில் இருப்பவள்தான் என்பதை அறிந்தார். கண்களில் நீர் துளிக்க லலிதா தன் சோகக் கதையை உருக்கமாகக் கூறினாள்.

வைத்தியக் கல்லூரி மாணவி அவள். அவள் தகப்பனாருக்கு ஒரே பெண். தாயார் கிடையாது. அவள் தன் விருப்பத்துக்கு விரோதமாக இந்தச் சதிகாரர்களின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருந்து வந்தாள். எப்படியாவது இவர்களிடமிருந்து தப்பிவிட வேண்டும் என்று தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் லலிதா.

சேகரிடம் மனம் விட்டுப் பேசிய அவளிடமிருந்து அவர் ஒரு ரகசியத்தை அறிந்து கொண்டார். முதல் நாள் இரவு யாரோ ஒரு மனிதனை அவர்கள் கொண்டு வந்ததாகவும், அவனுக்கு மயக்கம் தெளிவித்துக் காயங்களுக்குக் கட்டுகள் போட்டுப் படுக்க வைத்ததாகவும் தெரிவித்தாள் லலிதா. அவள் சொன்ன அடையாளங்களிலிருந்து அந்த மனிதன், தான் தேடி அலையும் - அவர்கள் பிடியிலிருந்து காப்பாற்ற விரும்பும் நபர்தான் என்பதை ஊகித்துக் கொண்டார் சேகர். இப்போதும் அவர் அதே கட்டடத்தில்தான் இருக்கிறாரா என்று கேட்டதற்கு, காலையிலே அவரை எங்கோ காரில் ஏற்றிக் கொண்டு போய் விட்டதாகத் தெரிவித்தாள் லலிதா.

இதன் பிறகு லலிதா மிகவும் கேட்டுக் கொண்டதன் பேரில் சேகர் தம் கதையை அவளுக்குச் சொல்லலானார்.

"இந்த உலகத்துக்கு நான் இறந்தவன். அதாவது நான் கோதாவரி நதியில் படகு கவிழ்ந்து மூழ்கி விட்டதாக வதந்தி பரவி விட்டது. படகில் இருந்தவர்களில் நானும் ஒருவன். ஆதலால் இறந்தவர்களில் என்னையும் சேர்த்துவிட்டார்கள் பத்திரிகைக்காரர்கள்.

"ரத்தினபுரி ஜமீன்தாரிடம் அவருடைய அந்தரங்கக் காரியதரிசியாக நான் வேலை பார்த்து வந்தேன். ஜமீன்தாருக்குப் பகைவர்கள் உண்டு. குடும்ப வைரிகள் அதிகம். ஜமீன் பங்களாவில் விலை மதிக்க முடியாத வைரங்களும் நகைகளும் இருந்தன. பகைவர்களின் கையில் சிக்கிவிடாதபடி அவைகளை அவர் ஒரு ரகசியமான இடத்தில் பத்திரப்படுத்தி வைத்திருந்தார். அந்த இடம் ஜமீன்தார் ஒருவருக்குத்தான் தெரியும்.

"இரண்டு வருஷங்களுக்கு முன்பு நானும் ஜமீன்தார் நரசிம்மபூபதியும் ஸ்ரீ ராமநவமி உற்சவத்துக்குப் பத்திராசலம் போவதென்று தீர்மானித்தோம். அவருக்கு ராமர்தான் குலதெய்வம். வழியில் பகைவர்களால் ஆபத்து வராதிருக்க வேண்டும் என்பதற்காக நரசிம்மபூபதி மாறு வேடத்துடன் வந்தார். அவரை நான் 'ரமேஷ்' என்று கூப்பிட வேண்டும் என்று எங்களுக்குள் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம்.

"இந்த ஏற்பாடும் எப்படியோ ஜமீன்தாரின் பகைவர்களுக்குத் தெரிந்து விட்டது. பத்திராசலத்தில் ராமநவமியன்று ஒரே கூட்டம். நிழல்போல் நான் ஜமீன்தாரைத் தொடர்ந்து போயும் எப்படியோ அந்தக் கூட்டத்தில் அவர் பிரிந்து விட்டார். இல்லை, பிரிக்கப்பட்டு விட்டார். சதிகாரர்கள் அவரைப் பிரித்து எங்கோ கொண்டு போய் விட்டார்கள். அவரைத் துன்புறுத்தி இம்சித்துக் குடும்பத்துப் பொக்கிஷமான புதையல் இருக்குமிடத்தை அறிந்து கொள்ளுவதே அவர்கள் நோக்கமாக இருக்க வேண்டும். நான் பத்திராசலம் முழுவ

தும் சுற்றி யலைந்தேன். ஜமீன்தாரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

"ஜமீன்தாரின் குடும்ப வைரிகள் பிரபல கொள்ளைக்காரர்களை ஏவித் திரண்ட செல்வம் பதுக்கியுள்ள ரகசிய இடத்தை அறிவதற்காக அவரைக் கடத்திக் கொண்டுபோய் விட்டார்கள். உற்சவமெல்லாம் முடிந்து நாலைந்து தினங்களாயிற்று. நானும் தேடாத இடமில்லை. என்னையும் என் நடவடிக்கைகளையும் அந்தக் கொள்ளைக் கூட்டத்தினர் கண்காணித்து வந்திருக்கின்றனர். மிகுந்த சிரமப்பட்டுத் துப்புத் துலக்கி ஜமீன்தாரைச் சிறை வைத்திருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து அவரை மீட்கக்கோதாவரி நதியைப் படகில் கடந்து கொண்டிருந்தேன். அந்தப் படகில் என்னைப் பின்தொடரும் கொள்ளைக் கூட்டத்தின் ஆட்களும் இருந்திருக்கிறார்கள். என்னை ஒழித்தால்தான் தங்கள் காரியம் கைகூடுமென்று நிர்மானித்து நான் செல்லும் படகைக் கவிழ்த்து விட்டார்கள். நீச்சலில் நான் மிகுந்த திறமைசாலி என்பது அவர்களுக்குத் தெரியாது. நான் வெகு தூரம் நீரினுள்ளேயே சென்று கரையேறி விட்டேன். ஆனால் நான் பிழைத்து விட்டேன் என்பது அவர்களுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக நான் உயிரோடிருப்பதைப் பற்றி யாருக்குமே, என் வீட்டாருக்குக் கூட அறிவிக்காமல் என் எஜமானரான ஜமீன்தாரைக் கண்டுபிடித்து மீட்பதில் மும்முரமாக ஈடுபடலானேன். என்னைப் பற்றிய சந்தேகமோ, கவலையோ இல்லாமல், அந்தச் சதிகாரர்கள் தங்கள் நடவடிக்கைகளில் ஈடுபடலானார்கள்.

"நாட்டின் பல இடங்களிலும் தங்கள் ஆட்களை வைத்துத் துணிகரமான பல கொள்ளைகளை நடத்தும் அந்தக் கூட்டத்தாரின் பல ரகசியங்களையும் நான் கண்டறிந்து விட்டேன். ஆனால் என் ஜமீன்தாரை மட்டும் என்னால் மீட்க முடியாமல் இந்த மூன்று வருடங்களாக அலைந்து கொண்டிருந்தேன்.

"கடைசியில் அவரை அவர்கள் எங்கே ஒளித்து வைத்திருக்கிறார்கள் என்பதற்கு ஒரு துப்புக் கிடைத்தது. இந்தத் தடவை எப்படியும் ஜமீன்தாரை மீட்டு விடுவது என்று சதிகாரர்களைப் பின்பற்றி ஓடோடி வந்தேன். ஆனால் இந்தத் தடவையும் அவர்கள் தப்பி விட்டார்கள். ஆனால் நீ சொன்ன செய்தியிலிருந்து என் ஜமீன்தாரை இங்குதான் எங்கோ அருகில் சிறை வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது" என்று கூறி முடித்தார் சேகர்.

"அப்படியானால் நேற்று இரவு நான் மயக்கம் தெளிவித்துக் கட்டுகள் போட்ட மனிதர்தான் நீங்கள் தேடியலையும் ஜமீன்தார் நரசிம்ம பூபதியா?" என்று வியப்புடன் கேட்டாள் லலிதா.

"ஆமாம், அவரேதான். நான் மட்டும் இப்போது இங்கிருந்து தப்பிச் செல்ல முடியுமானால் அவரை அந்தக் கொடியவர்கள் வெகுதூரம் கொண்டு போவதற்குள் மீட்டு விடுவேன்" என்றார் சேகர். அதே சமயத்தில் யாரோ மாடிப்படி ஏறி வரும் ஓசை கேட்கவே, லலிதா சேகரைப் படுக்கையில் கிடத்தி அவருக்குப் பணிவிடை செய்பவள் போல் நடிக்கலானாள்.

* * *

சரித்திராசிரியர் சந்தானம் கிட்டுவுடன் துப்பறியும் நிபுணர் ரமேஷின் வீட்டுக்குப் போனபோது அவர் வீட்டில் இல்லை. சிறிது நேரம் அவருக்காகக் காத்திருந்தார்கள். ரமேஷ் வந்ததும் அவரிடம் சந்தானம்; கிட்டு, மணி இவர்களின் முதல் நாள் இரவு சாகஸங்கள் முழுவதையும் ஒன்று விடாமல் சொல்லி நிலவறைக்குள் எழுதப் பட்டிருந்த செய்தியைப் பற்றியும் தெரிவித்தார். எல்லாவற்றையும் கவனமாகக்



பரிசுப் பொருள் !

ஞாயிற்றுக் கிழமை உனக்குப் பிறந்த நாள். அதற்கு உன் நண்பர்களை யெல்லாம் உன் வீட்டுக்குச் சிறு விருந்து சாப்பிட அழைத்திருக்கிறாய் என்று வைத்துக் கொள். அப்போது இந்தத் தமாஷான விளையாட்டை விளையாடலாம். நண்பர்களுக்குத் தின்பண்டம் கொடுத்தது போலவும் இருக்கும். பொழுதும் மிகுந்த உல்லாசமாகப் போகும்.

நண்பர்களுக்குக் கொடுக்க வேண்டிய சிற்றுண்டியைப் பொட்டலமாகக் கட்டி அந்தப் பொட்டலங்களை வெவ்வேறு இடங்களில் ஒளிய வைத்துவிட வேண்டியது. ஒவ்வொரு பொட்டலத்துடனும் ஒரு நூல் பந்தின் ஒரு முனையை இணைத்து அதை அறையின் பல பகுதிகளிலும் நுழைத்தும் இணைத்தும் சுற்றியும் வைக்க வேண்டும். அதாவது அறைக்குள் பார்த்தால் ஒரே நூல் பின்னலாக இருக்கும். விருந்தாளிகள் வந்ததும் ஒவ்வொருவர் கையிலும் ஒரு நூல் பந்தைக் கொடுத்து அவரவர் நூல்பந்தின் முடிவில் விருந்துப் பொட்டலம் இருப்பதாகவும் நூலை அறுத்து விடாமல் பொட்டலத்தை அடைய வேண்டுமென்றும் சொல்லி விடுங்கள். ஒவ்வொருவரும் தங்கள் விருந்தைத் தேடி நூல் பந்தின் மறுமுனையைப் பிடிக்கக் கிளம்புவார்கள். இப்போதுதான் தமாஷாக இருக்கும். ஒருவர் நூலோடு மற்றவர் நூல் இணைந்திருக்கும். மேலும், கீழும் பீரோவைச் சுற்றியும், மேஜையின் மீது ஏறியும் நூல் பின்னலின் சிக்கலை எடுக்க இவர்கள் படும் அவதி ரொம்பத் தமாஷாக இருக்கும். பொறுமைசாலிக்குத்தான் முதலில் பொட்டலம் கிடைக்கும். அவனே ஜெயித்தவன் !

எத்தனை ?

மூன்று மூன்று வளையங்கள் இணைக்கப்பட்ட ஐந்து சங்கிலித் துண்டுகளைப் பொற் கொல்லனிடம் கொடுத்து ஒரே சங்கிலியாக இணைத்துத் தரும்படி சொன்னார் ஒருவர். அவர் விருப்பப்படி செய்ய எத்தனை வளையங்களின் வாயை வெட்ட வேண்டும்? நான்கு வளையங்களின் வாயை என்று நீ சொல்லுவாய் இல்லையா ? ஆனால் அந்தப் பொற்கொல்லன் கெட்டிக்காரன். மிகக் குறைந்த அளவு வளையங்களின் வாயை வெட்டி இந்தக் காரியத்தைச் செய்து விட்டான். அவன் வெட்டியது எத்தனை வளையங்களின் வாயை என்று உங்களால் சொல்ல முடியுமா ?

[illegible]

கேட்டுக் கொண்டிருந்த ரமேஷ், "உங்களுக்குக் 'கோரா' என்ற வார்த்தையின் மர்மம்தானே தெரிய வேண்டும்?" என்று கேட்டார் புன்சிரிப்புடன்.

"அதுமட்டுமல்ல, அந்தக் கொள்ளைக் கூட்டத்தையும் கூண்டுக்குள் அடைத்தாக வேண்டும்" என்றார் சந்தானம்.

"ஏதோ பார்க்கலாம். ஆனால் முதலில் 'கோரா' என்பதன் விளக்கம் இதுதான்: 'கோரா'வும்—கோவிந்தராஜனும் — அவர்களில் ஒருவன். இப்போது நிலவறைச் செய்தியின் முழு உருவமும் புரிந்து விட்டதல்லவா?" என்றார். கிட்டு ரமேஷின் திறமையிலே அப்படியே திகைத்துத் திக்கு முக்காடிப் போய் விட்டான்.

சந்தானமும், ரமேஷ் இதை இத்தனை சுலபமாக விடுவிப்பார் என்று எதிர்பார்க்கவில்லை. இவர்களின் திகைப்பைக் கண்ட ரமேஷ் "எப்படி நான் இதை இவ்வளவு விரைவில் விடுவிக்க முடிந்தது என்றுதானே பிரமிக்கிறீர்கள் ? விஷயம் இதுதான். இப்போதுதான் நீங்கள் சொல்லும் அந்தச் சதிகாரர்களில் ஒருவன் கொடுத்த மரண வாக்குமூலத்தைக் கேட்டுவிட்டு வருகிறேன். இன்று விடியற்காலை புலித்தேவன் தோப்புப் பங்களாவுக்கு அருகே கவிழ்ந்த காரில் இருந்த இருவரில் ஒருவன் அவன். இறக்கும்போது உண்மையைச் சொல்லும்படி வற்புறுத்தியதின் பேரில் இந்த ஊரில் தங்கள் தலைவன் கோவிந்தராஜன் என்று சொல்லிவிட்டுக் கண்ணை மூடி விட்டான். அதனால்தான் நீங்கள் 'கோரா'வுக்குப் பொருள் கேட்டதும், என்னால் சொல்ல முடிந்தது" என்றார். "இதைப் பற்றி யாரிடமும் பிரஸ்தாபிக்க வேண்டாம். இனி அந்தக் கூட்டத்தை வளைத்துப் பிடிப்பதில் முனையப் போகிறேன்" என்று அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார் ரமேஷ்.

* * *


நான்கு நாட்கள் கழிந்து விட்டன. அன்று சரித்திர வாத்தியார் சந்தானத்தினிடமிருந்து கிட்டுவுக்கும் மணிக்கும் உடனே வரும்படி அழைப்பு வந்தது. இருவரும் சந்தானத்தின் வீட்டை அடைந்தபோது அங்கே ரங்கசாமி தனது டாக்ஸியுடன் தயாராக நின்று கொண்டிருந்தான். ஒரு ஏழை நாட்டுப்புறத்தானைப் போல் மாறு வேஷம் அணிந்திருந்த துப்பறியும் உத்தியோகஸ்தர் ரமேஷ் சந்தானத்துடன் கூடத்தில் பேசிக் கொண்டிருந்தார்.

கிட்டுவும் மணியும் வந்ததும் எல்லோரும் ரங்கசாமியின் காரில் ஏறிக் கொண்டார்கள். "இப்போது நாம் எங்கே போகிறோம், தெரியுமா ?" என்று கேட்டார் துப்பறியும் ரமேஷ். (தொடரும்)

புத்துணர்ச்சி பெற

காவேரி சூபர்

வெப்பம் உங்களை வாட்டுகிறதா? காவேரி சூபர் சோப்பை உபயோகித்து வியர்வை துர்நாற்றத்தை விரட்டுங்கள்! காவேரி சூபர் உங்களுக்கோர் புத்துணர்ச்சியை அளிக்கும். அதன் ஔஷத மணம் உங்கள் மனதைக் கவரும்.



காவேரி சூபர் ஔஷத குணம் நிறைந்த சால்முக்ரா தைலம் கலந்தது



கையடக்கமானது, விலை குறைவானது.

தயாரிப்பு

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R.S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

MC-537

பன்னிரண்டாம் அத்தியாயம்

சுய சரிதம்



பொங்கி வரும்

கீ. ராஜேந்திரன்

மல்லிகா சொல்லப் போகும் வாழ்க்கைக் கதையைக் கேட்கக் காத்திருந்தான் நடராஜன். ஆனால் மல்லிகாவிடமிருந்து பேச்சே கிளம்பவில்லை. 'எப்படி ஆரம்பிப்பது? என்னமாகச் சொல்வது?' என்று தெரியாமல் தயங்கித் தயங்கி நின்றாள். அப்படியே சொல்லிக் கொண்டு போனாலும் அவனுக்குப் புரியுமா என்று சந்தேகப்பட்டாள்.

'கதை புரிந்து விடும். ஆனால் அதற்குப் பின்னால் மறைந்து கிடந்த உணர்ச்சிப் பெருக்குகள், உள்ளப் போராட்டங்கள் ஆகியவற்றையெல்லாம் அவர் உணர்ந்து கொள்வாரா? உணர்ந்து அனுதாபப் படுவாரா? அன்பு செலுத்துவாரா? அல்லது தான் கூறப் போகும் கதையைக் கேட்டதும் அவருக்குத் தன்னிடம் கொண்டிருந்த அன்பெல்லாம் மாறி வெறுப்பு மேலிட்டு விடுமா?

'தன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை மட்டுமே பார்த்தாரானால் விபரீதமாகத்தான் போய்விடும். தான் கதையைச் சொல்லத் தொடங்கியதே தவறாகத்தான் முடியும். சம்பவங்களை மட்டும் அவர் பார்க்காமல் அதனுள் புதைந்து கிடந்த அபிலாஷைகளையும், ஏமாற்றங்களையும் வெற்றி தோல்விகளையும் உள்ளத்தின் விசித்திரப் போக்கையும் சேர்த்துப் பார்க்குமாறு அவருக்கு எப்படி எடுத்துச் சொல்வது?'

பம்பாயிலிருந்து சென்னைக்குத் திரும்பி வந்து மூன்று நாட்களாக நடராஜனைக் காண ஏங்கிக் காத்துக் கிடந்தாள் அவள். அந்த மூன்று நாட்களும் மூன்று யுகங்களாகக் கழிந்திருக்கின்றன. அவன் வந்து பார்க்காததால் ஏற்பட்ட மனத் துயரத்துக்கிடையே பலப் பல விஷயங்களைப் பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். செண்பகபுரம் கிராமத்தில் சேகரைச் சந்தித்தது முதல் இன்று வரை தான் நடத்திக் கொண்டு வந்துள்ள வாழ்க்கையை அலசி ஆராய்ந்து, தன் மனச்சாட்சியிடமிருந்தே மூடி மறைத்து வைத்திருந்த பல உண்மைகளை ஒளிவு மறைவு இன்றி, தயக்கமின்றி ஒப்புக் கொண்டிருந்தாள். அவற்றில் எத்தனையோ இன்ப நினைவுகள், எவ்வளவோ பயங்கர எண்ணங்கள். எப்படியிருந்தாலும், 'இனிமேலும் இதையெல்லாம் மூடி மறைக்கக் கூடாது. தைரியமாக ஒப்புக்கொண்டு விடு' என்று உள்ளுணர்வு எச்சரித்தது அவளை. அவள் ஒப்புக் கொண்டாள்.

செண்பகபுரம் கிராமத்திலே சேகரிடம் முதன் முதலாக அவள் கொண்ட காதல் கூட இதய அந்தரங்கத்தில் ஒளிந்து கொண்டிருந்த 'சினிமா நட்சத்திரமாக வேண்டும்' என்ற சுயநல எண்ணத்தில் மாசுபட்டிருந்தது என்பதை ஒப்புக் கொண்டாள்.

இல்லாவிட்டால் அவருக்குக் கல்யாணமாகி விட்டது என்று அறிந்ததும், உலக வாழ்க்கையில் அவளுக்கு வெறுப்பு ஏற்படாமல் பற்றுதல் அதிகமாவானேன்? முன்னைவிட அதிக ஊக்கத்துடன் நாதன் நாட்டிய நாடக நிலையத்தில் தொடர்ந்து பயிற்சி பெற்று நடிப்புக் கலையில் வெற்றி பெற முயலுவானேன்? காரணம் பணத்திலும் புகழிலும் அவளுக்கு இருந்து வந்த பற்றுதல்தான்.

. . .

இப்போது அந்தப் பற்றுதல் அறுபட்டுப் போய் விட்டது. புகழ் ஏணியின் உச்சியிலிருந்து சறுக்கி விழுந்து விட்



டாள். சுகுமாரனின் திரைப்படம் ஒரே வாரத்தில் மூட்டை கட்டிக் கொண்டு பம்பாய் நகரத்தை விட்டுப் புறப்பட்டு விட்டது. மற்ற நகரங்களில் அதைவிட மோசமான நிலை.

இவ்வளவு இருளிலும் ஒரே ஒரு ஒளிக் கீற்று. அது நடராஜனிடம் அவள் கொண்ட காதல். அந்தக் காதல் மாசற்றது, உண்மையானது, முழுமையானது என்பதில் அவளுக்குச் சந்தேகமேயில்லை. ஏனெனில் அந்தக் காதலுக்காகப் பெரிய தியாகங்களைச் செய்ய அவள் தயாராக இருந்தாள். மற்ற எல்லாவற்றையும் விட, அந்தத் தூய காதலுக்காக அந்தக் காதலையே துறந்து விட, தியாகம் செய்து விட அவள் சிறிதும் தயங்கவில்லை.

தன் காதலனுடைய நல்வாழ்வை உத்தேசித்து, தன் மனச்சாட்சிக்கு விரோதமாக, தன் உள்ளத்தில் காதலுக்கு இடமேயில்லை என்று புளுகினாள். இதை விடப் பெரிய தியாகமாக வேறு என்ன செய்ய முடியும்?

தான் சினிமா நட்சத்திரமாக இருக்கும் வரையில மனைவியின் ஸ்தானத்தைச் சரிவரப் பூர்த்தி செய்ய முடியாது என்பது ஒன்று; தன்னை மணந்து கொண்ட பின்னர் சேகர், நடராஜனிடமும் வந்து, 'உன் மனைவியைப் பற்றியும், மாமாவைப் பற்றியும் ரகசியங்களை வெளியிடுவேன்' என்று பயமுறுத்திப் பணம் பறிக்க முயல்வானோ என்ற பயம் ஒரு பக்கம்; விமலாவுக்கும் நடராஜனுக்கும் இடையே இருந்த தொடர்பு பற்றிய நினைவு மற்றொரு பக்கம், சுகுமாரனை ஒரு இக்கட்டான நிலையிலிருந்து மீட்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் ஒரு புறம்; — எல்லாமாகச் சேர்ந்து

பெருநிலவு

கொண்டு சிந்திக்கவே இடமில்லாமல் நடராஜன் காதலை மறுதளித்துச் சேகரை மணக்கத் தூண்டின. இப்போது சேகர் அவளைத் தீர்மானமாக ஒதுக்கித் தள்ளியதும் அவளுடைய மனம் தங்கு தடையின்றி இயற்கையான வேகத்தோடு நடராஜனிடம் திரும்பியது.

'தான் கூறப் போகும் கதைக்குப் பின்னால் பொதிந்து கிடந்த இத்தனை உண்மைகளையும் அவர் சரியாகப் புரிந்து கொள்வாரா? அப்படிப் புரிந்து கொள்ளும்படி சொல்லத் தனக்குத் திறமை இருக்கிறதா?' என்றெல்லாம் யோசிக்கலானாள் மல்லிகா.

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு காத்திருந்த நடராஜன், "சொல்லு, மல்லிகா! என்னிடம் உனக்கு என்ன சந்தேகம்? தயங்காமல் சொல்லு!" என்று தூண்டினான்.

அதற்கு மேல் தாமதிக்க மல்லிகா விரும்பவில்லை. 'நடப்பது நடக்கட்டும்' என்று எண்ணியவளாகத் தன் சுயசரிதத்தைக் கூற ஆரம்பித்தாள்.

நடராஜனுக்கு எதிரே திரைப்பட நட்சத்திரம் மல்லிகா மறைந்து போனாள். சிறுமி ஒருத்தி துன்பத்தில் உழல்வதைப் பார்த்தான். குடிகாரத் தகப்பன் மனைவியை அந்தச் சிறுமிக்கு எதிரே அடிப்பதையும் திட்டுவதையும் கண்டான். அந்தச் சிறுமியின் உள்ளத்தில் தன்னைச் சுற்றிலும் உள்ளவர்கள் மீதும் சூழ்நிலை மீதும் அருவருப்பு உருவாவதைக் கண்டான். சக்திக்கு மீறிய அளவில் வயிற்றுப் பிழைப்புக்காக அந்தச் சிறுமி உழைக்கிறாள். அவள் மனத்தில் வெறுப்பு மேலும் மேலும் வளர்




கிறது. கிராம மக்கள் சிறுமியின் தகப்பன் குடி போதையில் கொலை செய்து விட்டு ஓடி விட்டான் என்று குற்றம் சாட்டுகிறார்கள். அந்தக் குடும்பத்தையே ஒதுக்கித் தள்ளுகிறார்கள். சிறுமி மல்லிகாவின் மனத்தில் கசப்பு மேலும் மேலும் வளர்கிறது.

அந்தத் தருணத்தில் யாருக்கும் தெரியாமல் அவள் ஒரு சினிமா பார்க்கிறாள். அதில் கதாநாயகியாகத் தோன்றுபவள், ஆடிப் பாடிச் சிரித்து மகிழ்வதைப் பார்த்து, அந்த மாதிரியான வாழ்க்கை தனக்குக் கிட்டி விடாதா 'என்று ஏங்குகிறாள். ஓயாத உழைப்புக்கு முடிவு காண விரும்புகிறது அவள் மனம்.

பல வருஷங்கள் அதற்கு ஏங்கிய பிறகு அந்த வாய்ப்பு அவளுக்குக் கிட்டுமென்று தோன்றுகிறது. திரைப்படத் தொழிலில்' ஈடுபட்டிருக்கும் சேகர் கிராமத்துக்கு வருகிறான். அன்பாகப் பேசுகிறான். அவன் மூலம் தன் விருப்பம் நிறைவேறப் போகிறது என்று நம்புகிறாள் அந்தப் பெண். அவனிடம் தான் காதல் கொண்டு விட்டதாகத் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறாள்.

ஆற்றங்கரையில் அவர்கள் தனித்திருப்பதைப் பார்த்து விடுகிறான் ஒருவன். அவ்வளவுதான்; வெறும் வாயை



மென்றவர்களுக்கு அவல் கிடைத்தது போல் வதந்தி விசுவரூபம் எடுக்கிறது. கிராம மக்கள் அவதூறு சொல்கிறார்கள். ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்த அந்தக் குடும்பத்தை மேலும் ஒதுக்கித் தள்ளுகிறார்கள். தாயார் இறந்து போகிறாள். இதனாலெல்லாம் அந்தப் பெண்ணுக்குச் சுற்றத்தாரிடம் வெறுப்பு வைராக்கியத்துடன் வளர்கிறது.

தன் காதலனைத் தேடிக் கொண்டு சென்னைக்கு வருகிறாள். அவனுக்குக் கல்யாணமாகி விட்டது என்று தெரிந்து அவள் துக்கப்படவில்லை. தன் லட்சியத்தை அடைய நாதன் என்பவரின் துணையை நாடுகிறாள். நாடக மேடையில் சுகுமாரன் அவளைக் கண்டுபிடித்துத் திரைப்படத்தில் நடிக்கச் செய்து அவள் லட்சியத்தைப் பூர்த்தி செய்கிறார். ஆனால் அப்போதும் அவளுக்குத் தன் வாழ்க்கை நிறைவு பெறவில்லை, அதில் ஏதோ ஒரு குறை இருந்துகொண்டே இருக்கிறது என்பதாகத் தோன்றுகிறது. அவளுக்கு உடம்பு சரியில்லாதபோது டாக்டர் வருகிறார். அவரிடம் உண்மையான காதல் கொள்கிறாள். ஆனால் அவருக்கும் அத்தை மகள் ஒருத்திக்கும் திருமணம் நிச்சயமாகிப் போன விஷயம் என்று தெரிந்ததும் அவர்கள் வாழ்க்கையைப் பாழடிக்க விரும்பாமல் பெருந்தன்மையுடன் ஒதுங்கிக் கொள்ள விரும்புகிறாள். தனக்கும் தன் தகப்பனாருக்கும் ஏற்பட்ட அவதூறுகள் தன் காதலனையும் சூழக் கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தோடு தன் காதலையே தியாகம் செய்யவும் நினைக்கிறாள். சேகருடைய வாயை அடக்க அவனை மனச்சாட்சிக்கு விரோதமாகக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறாள்.

ஆனால் சேகர் சினிமா நட்சத்திரத்தைத்தான் மணந்து கொள்ள விரும்புகிறானேயன்றி மல்லிகாவையல்ல. அப்போதுதான் தன் காதலையே தியாகம் செய்ய நினைத்தது பெரிய தவறு என்றும், அவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்யத் தான் அருகதையற்றவள் என்றும் மல்லிகா உணர்கிறாள். அதை ஒப்புக் கொண்டதும் சுயநலம் அவளை ஆட்கொள்கிறது. நடராஜனை அடைய உள்ளம் ஏங்குகிறது. ஆனால் அவனோ மூன்று நாட்களாக அவளைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

இவ்வளவையும் ஒரே மூச்சாக ஒளிவு மறைவு இல்லாமல் நடராஜனுக்குக் கூறி முடித்தாள் மல்லிகா.

“இப்போது சொல்லுங்கள், உங்களுடைய முடிவை!

“ஒரு கொலைகாரனின் பெண்ணைத் தைரியமாக மணக்க முன்வருவீர்களா?



உலகப்
பிரசித்திபெற்ற
தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக் குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டதால், பிராங்கைடிஸ் விரைவில் அகன்றது

தொண்டைப்புண், பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷம் முதலியவை பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணமளிக்கும் வில்லைகளை உட்கொண்ட உடனேயே அகலுகின்றன பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, நோய்க்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும், வலியைக் குறைக்கவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள்.



பெப்ஸ்

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணம் அளிக்கும்
வில்லைகள்

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

வி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-56-TAM

சோல் ஏஜண்டுகள் : தாதர் அண்டு கம்பெனி
86, லிங்கிச் செட்டி நாயக் தெரு. சென்னை - 3


நன்கு உறைவதற்கும், வாசனைமிக்க இன்பச் சுவைக்கும்

மணமிக்க அறுவகைச் சுவைகள் :
ராஸ்பெரி
ஸ்ட்ரா பெரி
லெமன்
பைன் ஆப்பிள்
ஆரஞ்சு
செரி



இந்தியாவிற்கான ஏஜண்டுகள்:
பாரி அண்டு கோ. லிமிடெட்.

பிரீப்மென் மற்றும் ஸ்லேகா



இன்றைய
மிகவும்
நம்பகமான
பேனாக்கள்

பலவித ரகங்களிலும் கவர்ச்சியான
தோற்றத்திலும் எங்கும் விற்கப்படும்

Sole Distributors :
PENMEN'S INDUSTRIAL SERVICES
Kandivli, Bombay (S. D.)

"புகழேணியின் உச்சியிலிருந்து சறுக்கி விழுந்து கேலிக்கு இடமாகிவிட்ட மாஜி நட்சத்திரத்தைத் தயக்கமில்லாமல் கல்யாணம் செய்து கொள்வீர்களா?

"கிராமத்தாரால் பழி சுமத்தப்பட்டு ஒதுக்கித் தள்ளப்பட்ட என்னை நீங்கள் மனமுவந்து ஏற்றுக் கொள்வீர்களா?

"என்னை மணம் புரிந்துகொண்டபின் சேகர் உங்களிடம் வந்து, என்னையும் என் தகப்பனாரையும் பற்றிய ரகசியங்களை வெளியிடுவேன் என்று பயமுறுத்தியும் மிரட்டியும் பணம் கேட்டால் அதற்குத் தயாராக இருப்பீர்களா?

"உங்களையே நம்பி உயிரை வைத்துக் கொண்டிருக்கும் விமலாவை மறந்து விட்டு என்னை மணப்பீர்களா?

"சினிமா நட்சத்திரமாகி விடவேண்டும் என்ற குருட்டு லட்சியத்துடன் அதற்காகப் பின்பற்றும் வழி முறைகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்காத என்னைத் தயக்கமின்றிக் கல்யாணம் செய்து கொள்வீர்களா?

' சொல்லுங்கள் . உங்கள் முடிவைச் சொல்லுங்கள்!"

நடராஜன் சொல்லவில்லை. உடனே பதில் பேச முடியவில்லை. பேலெழுந்த வாரியாக இதுவரை மல்லிகாவைப் பார்த்திருந்தான் அவன். இப்போது தான் அவனுடைய உள்ளத்துக்குள்ளே புதைந்து கிடந்த பல விஷயங்கள் வெளியே வந்திருந்தன. ஒன்றன் மீது ஒன்றாக அவை வெளிப்பட்டு அவனைப் பிரமிப்பில் ஆழ்த்திப் பேச முடியாமல் அடித்தன. இவ்வளவையும் ஒரே சமயத்தில் கேட்டுக் கிரகித்துச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வர எப்படி முடியும்?

அவன் பதில் பேசாததைக் கண்டு, மல்லிகா பயந்து விட்டாள். தன்னைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொண்டவுடன் அவர் தயங்குகிறார். தன்னை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுவார் என்று நம்பி விட்டாள். துயரக் கடலிலே மூழ்கிக் கொண்டிருந்த அவளுக்கு நம்பிக்கையூட்ட நடராஜன் ஒருவன்தான் இருந்தான். அவனும் மௌனம் சாதிக்கவே, கிடைத்த ஒரு துரும்பும் கைநழுவிப் போய் விட்டது போல் அஞ்சினாள்.

அந்தப் பயம் அவளை அவன் கால்களில் விழச் செய்தது. கெட்டியாக அவற்றைப் பற்றிக் கொண்டு, "என்னைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று சொல்லி விடாதீர்கள். எனக்கு இனிமேல் பணம் வேண்டாம்; புகழ் வேண்டாம்; லட்சியம் வேண்டாம்; ஒன்றுமே வேண்டாம். அன்பு ஒன்றுதான் சாசுவதமானது, நிலையானது, அமுதம் போன்றது. அந்த அன்பை உங்களுக்கு அளிக்கிறேன். அதை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கதறினாள் மல்லிகா.

நடராஜன் அவள் தோள்களைப் பற்றி எழுப்பினான். அணைத்தபடியே, "அழாதே, மல்லிகா! எங்கே, என்னைப் பார்த்துச் சிரி! நீ அழுதால் என்னால் சகிக்க முடியவில்லை. சதா சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும். தெரியுமா?" என்று ஆறுதல் கூறினான்.

பதின்மூன்றும் அத்தியாயம்

பெற்ற மனம்...

மல்லிகா பம்பாயில் இருந்தபோது, நடராஜன் அடிக்கடி விமலாவைப் போய்ப் பார்த்து வந்தான் அல்லவா? அப்போதெல்லாம் தன் தாயார் பொன்னம்மாளையும் அழைத்துப் போவதாகச் சொல்வான். வீட்டுக் காரியங்கள் அதிகமாக இல்லாத சமயங்களில் பொன்னம்மாளும் சந்தோஷமாக அவனுடன் போய் வருவாள். குழந்தைகள் நடந்ததையெல்லாம் மறந்து சிரித்துப் பேசி வருவதைக் கண்டு இரண்டு தாய்மார்களும் அகமகிழ்ந்து போவார்கள்.

அவர்கள் புரியும் விஷயங்களைப் பார்த்தும் பார்க்காதது போல் நடித்தார்கள். ஒருவருக்கொருவர் சைகையிலேயே கட்டிக் காட்டிப் புரிந்து கொண்டார்கள். காதோடு காதாகப் பேசி மனத்துக்குள் சிரித்தார்கள். எல்லாம் சுபமாக முடியப் போகிறது என்ற நம்பிக்கை அவர்களுடைய உள்ளத்தில் வேரூன்றியது. இருவரும் தனித் தனியாகத் தங்கள் கணவர் படத்துக்கெதிரே தினமும் நமஸ்கரித்து எழுந்திருக்கும் போது, 'உங்களுடைய விருப்பம் நிறைவேறப் போகிறது' என்று வாய் விட்டுச் சொன்னார்கள்.

இதெல்லாம் அன்று நடராஜன், "அம்மா! நான் கல்யாணம் செய்து கொள்வது என்று தீர்மானித்து விட்டேன்" என்று சொன்னபோது பொன்னம்மாளுக்குத் தலைகால் புரியவில்லை. அவனாகவே விஷயத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றுதான் அவள் காத்திருந்தாள். அவன் சுபாவம் அவளுக்குத் தெரிந்திருந்தது. தானே கல்யாண விஷயத்தை எடுத்தால் தொலைந்தது.

முன்பு ஒருமுறை இரைந்தது போலவே மறுபடியும் 'நான் இப்போதைக்குக் கல்யாணம் செய்துகொள்வதாக இல்லை' என்று முகத்தில் அடிப்பது போல் ஏதாவது பதில் சொல்லுவான் என்று அறிந்திருந்தாள். இப்போது அவனாகவே கல்யாணப் பேச்சை எடுத்தான். தான் ஒரு சுற்றுப் பருத்து விட்டது போலப் பெருமைப் பட்டாள்.

"அப்பா! இத்தனை நாட்கள் கழித்தாவது நல்ல முடிவுக்கு வந்தாயே, ரொம்ப சந்தோஷம்! மணிக்கு உடனே சொல்லி அனுப்ப வேண்டும். அவனை வைத்துக் கொண்டுதான் எல்லாவற்றுக்கும் நான் ஏற்பாடு செய்ய முடியும். தனியாக என்னத்தைச் செய்வது? உன்னையும்



இதற்கெல்லாம் எதிர்பார்க்க முடியாது. ஒரு மாதம் 'லீவ்' எடுத்துக் கொண்டு மணியை விட்டோடு வந்துவிடச் சொல்கிறேன். அப்போதுதான் சௌகரியமாக இருக்கும்" என்று அடுக்கிக் கொண்டே போனாள் பொன்னம்மாள்.

நடராஜனுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. அம்மாவின் சந்தோஷம் வேதனையாகக் கூட இருந்தது. முழுக்க விவரமாகக் கேட்காமல் அதற்குள், 'மணியைக் கூப்பிடு! மகராஜனைக் கூப்பிடு!' என்று பிராணனை விடுவானேன்?

"அம்மா!" என்று அழைத்துப் பார்த்தான் நடராஜன்.

பொன்னம்மாளின் காதில் அவன் அழைத்தது விழுந்ததாகவே தெரியவில்லை. "நாளைக்கே ஜோஸியரைப் பார்த்து நாள் நிச்சயம் செய்ய வேண்டும். நண்பர்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்ப முதலில் விலாசங்களைச் சேகரிக்க வேண்டும்." விரல் விட்டு எண்ணிக் கொண்டே போனாள் அவள்.

"அம்மா!" என்று மறுபடியும் அழைத்தான் நடராஜன்.

அவன் குரலில் தோன்றிய கடுமையைக் கண்டு ஒரு கணம் திகைத்தாள் பொன்னம்மாள். ஏதோ சரியாக இல்லை என்று அவளுக்குத் தெரிந்தது. 'ஒரு வேளை...?' அதைப் பற்றி நினைத்துப் பார்க்கக் கூட அவளால் முடியவில்லை. நடராஜனைப் பற்றியும் மல்லிகாவைப் பற்றியும் அவள் யாரிடமும் பேசியதில்லை; யாரும் பேசிக் கேட்டதுமில்லை. ஆனால் தாயின் மனம் பிள்ளையை அறியாமல் போகுமா? நன்றாகத் தெரிந்திருந்தது. ஆனால் அவையெல்லாம் இளமைத் துடிப்பிலே அவனுக்கு ஏற்படும் பிரமை. அவன் நடந்துகொள்ளும் விதத்தைக் கண்டு, அந்த வெளித் தோற்றத்தைக் கண்டு நாம் ஏமாந்து விடக்கூடாது. நாளடைவில் சரியாகி விடுவான் என்று தீர்மானமாக நம்பினாள். அவள் எதிர்பார்த்தபடியே தான் சென்ற சில நாட்களாக நடராஜனும் நடந்து கொண்டு வந்தான். கமலாவிடம் மிகுந்த அன்புடன் பேசிப் பழகி வந்தான். ஆனால் இப்போது திடீரென்று என்ன நேர்ந்து விட்டது? 'அம்மா!' என்ற அவன் அழைப்பில் ஏன் இந்தக் கடுமை தொனிக்கிறது? புருவங்கள் நெரிய இனந் தெரியாத பயத்துடன் மகனைப் பார்த்தாள் பொன்னம்மாள்.

"அம்மா! நான் சொல்வதை முழுக்கக் கேட்டுவிட்டு நீ பேச வேண்டும். இப்படிக் குறுக்கே ஏதேதோ உளறிக் கொண்டே போனால் என்ன செய்வது?"

"நீ இன்னும் சொல்வதற்கு என்ன இருக்கிறது, ராஜா? கல்யாணத்துக்கு நீ சம்மதம் தெரிவித்து விட்டாய். பாக்கியெல்லாம் நானே கவனித்துக் கொள்கிறேன். நீ சிரமப்பட வேண்டாம்." பொன்னம்மாள் வேண்டுமென்றே அப்படிப் பேசினாள். இப்படிச் சொல்லிச் சொல்லித் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வது போல் மகனையும் ஏமாறச் செய்து விடலாம் என்று அவளுக்கு ஒரு அசட்டு நம்பிக்கை!

நடராஜன் படாரென்று தலையில் அடித்துக் கொண்டான். "கொஞ்சம் வாயை மூடிக் கொண்டு கேட்டுத்தொலையேன்" என்று கத்தினான். உள்ளூற அம்மாவுக்குத் துன்பமளிக்கப் போகிறோமே என்ற வேதனை அவனுக்கு.

பொன்னம்மாள் பதறிப் போனாள். மகனுடைய கையைப் பிடித்துக் கொண்டு, "நடராஜா! இது என்ன இப்படி நடந்து கொள்கிறாய்? கல்யாண விஷயமாகப் பேசும்போது தலையிலா போட்டுக் கொள்வார்கள்? நீ இந்த முடிவுக்கு

எப்போது வரப் போகிருய்? எப்போது வாய் திறந்து இந்தச் சந்தோஷ சமாசாரத்தைச் சொல்லப் போகிருய் என்று ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடைய ஒரே மகன் நீ. உன்னைத் தவிர எனக்கு வேறு யார் இருக்கிருர்கள்? கண்ணுக்குக் கண்ணுக உன்னைப் பிறந்தது முதல் வளர்த்து வந்திருக்கிறேன் நான். அப்படிப்பட்ட உனக்குக் கல்யாணம் நடப்பதைக் கண் குளிரப் பார்க்க எனக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா? அதில் உன்னைக் காட்டிலும் நான் அதிக சந்தோஷப்படுவேன். இன்று நீ அந்தச் சந்தோஷச் செய்தியைச் சொன்னவுடன் எனக்குக் குதூகலம் கட்டுக்கடங்காமல் போய்விட்டது. அதனுல் சற்று அதிகமாகத்தான் பேசிவிட்டேன். ஆனுல் தவருக எதுவும் சொல்லவில்லையே? அப்படியே ஏதாவது கூறிவிட்டாலும் அதற்கு நீ என்னைக் கோபித்துக் கொள்வது தானே? எதற்காகத் தலையில் அடித்துக் கொள்கிருய்? இந்தக் காட்சியைப் பார்க்கத்தானு உன் அப்பா இறந்து போன பிறகும் நான் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன்?'' என்று புலம்பினுள்.

''நீ இப்படி விடாமல் பிதற்றிக் கொண்டே போனுல் நான் மறுபடியும் தலையில் அடித்துக் கொள்ள வேண்டியதுதான்'' என்ருன் நடராஜன்.

''மகனிடம் பேசக்கூட எனக்கு உரிமையில்லையா? இல்லையானுல் அதைச் சொல்லி விடு. வாயை மூடிக்கொண்டு இருந்து விட்டுப் போகிறேன். அதற்காக நீ தலையில் அடித்துக் கொள்ள வேண்டாமடா!'' என்று சொல்லிவிட்டுக் கண்களைக் கசக்கினுள் பொன்னம்மாள்.

''இந்த வீட்டில் ஒருவர் மாற்றி ஒருவர் அழுது புலம்புவதே காரியமாகப் போய்விட்டது. கொஞ்சம்கூட மன அமைதியே கிடையாது. இத்தனை நாட்களாக அந்தப் பெண் விமலா கதறிக் கொண்டிருந்தாள். இப்போது அவள் விட்டுப்போன சொத்தை நீ ஆள ஆரம்பித்து விட்டாயாக்கும்! நான் ஏதோ சொல்லவந்தேன். அதை முழுக்கக் கேட்பதற்கு முன்னுலேயே இப்படி அழுது ரகளை செய்தால் என்ன செய்வது? நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம்'' என்று வெறுப்புடன் பேசினுன் நடராஜன்.

''ஐயய்யோ! அப்படியெல்லாம் பேசாதே! என் அழுகைதான் அதிகமாகும்; உன் கோபமும் வளரும், நடராஜா! நீ என்ன சொல்லப் போகிருய் என்று எனக்குத்தெரியும்! வேண்டாமடா! அதைச் சொல்லாதே! ஊர் பேர் தெரியாத ஒரு பெண்ணை நம் குடும்பத்துடன் இணைக்காதே!''

''அம்மா!''

''ஒரு சினிமாக்காரியை உன் மனைவியாக்க நான் நிச்சயமாக ஒருநாளும் சம்மதிக்கவே மாட்டேன்.''

''அம்மா!!''

''கட்டி பேய்க்க உற்ருர் உறவினர் இல்லாமல் கண்டபடி திரிந்து கொண்டிருக்கும் ஒரு பெண்ணை இந்த வீட்டுக்குள் மருமகளாக அழைக்க என்னுல் முடியவே முடியாது!''

''அம்மா!'' என்று கத்திக்கொண்டே ஒரே தாவாகத் தாவிப் பொன்னம்மாளின் வாயையும் மூக்கையும் சேர்த்து மூச்சுத் திணறும்படி அழுத்திப் பொத்தி உலுக்கினுன் நடராஜன்.



''அம்மா! அவளைப் பற்றி அப்படியெல்லாம் பேசாதே. நான் பொறுக்கவே மாட்டேன். இன்னொரு தடவை இந்த மாதிரி பேசினுல் நான் விபரீதமாக ஏதாவது செய்து விடுவேன். வாயைத் திறக்காதே!'' என்ருன் கரகரத்தகுரலில்.

''இல்லை, நடராஜா! நான் அவளைப் பற்றிப் பேசவில்லை. ஆனுல் விமலாவை நினைத்துப் பார்! அந்தப் பேதைப் பெண் உன்மீது வைத்திருக்கும் அன்பை எண்ணிப் பார்! அவளை என்ன செய்வது? வாழாவெட்டியாக வீட்டில் வைத்திருக்கச் சொல்கிருயா?''

''காலம்வரும்போது யாராவது கல்யாணம் செய்து கொள்கிருன்'' என்று முணு

முணுத்தான், அதே வார்த்தைகளை உரக்கப் பேசத் தைரியம் இல்லாமல்.

பொன்னம்மாள் சிரித்தாள்.

"நீ இப்போது சொல்வதை உணர்ந்துதான் பேசுகிறாயா? காலம் வரும்போது எவனாவது அவளைக் கல்யாணம் செய்து கொள்வான் என்று நிஜமாகவே நம்புகிறாயா? அப்படி மணந்து கொண்டாலும் அவள் உன்னை மறந்து விடுவாள், கணவனுடன் இன்பமாக வாழ்க்கை நடத்துவாள் என்று எதிர்பார்க்கிறாயா? இப்படியெல்லாம் நீ நினைத்தாயானால் நீ ஒரு முட்டாள்! டாக்டருக்குப் படித்தால் என்ன, லண்டனுக்குப் போய் வந்தால் என்ன? நீ முழு மடையன்தான். ஆண் மனத்துக்கும் பெண் மனத்துக்கும் உள்ள வித்தியாசத்தை உணராத நீ படித்து என்ன பயன்? ஆண்களைப் போல் சஞ்சலப்படக்கூடிய மனம் பெண்களுக்குக் கிடையவே கிடையாது. நடராஜா! அப்படியே இருந்தாலும் அது லட்சத்தில் ஒன்றாக மிகமிக அபூர்வமாகத்தான் இருக்கும். விமலாவை நீ கல்யாணம் செய்து கொள்ளா விட்டால் அவள் உடல் உயிருடன் இருக்கலாம். ஆனால் ஆன்மா செத்துவிடும். உடலும் சாகும் வரை நடைப் பிணமாக அலைந்து கொண்டிருப்பாள். அத்தகைய கொடிய காரியத்தை மனமறிந்து நீ செய்யப் போகிறாயா? தீர்மானித்து விட்டாயா?"

நடராஜன் தலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். "எதற்கு இப்படி என் பிராணனை வாங்குகிறாய்? விமலா! விமலா! விமலா! என்று எப்போது பார்த்தாலும் அவளைப் பற்றியே பேசுகிறாயே? என்னைப் பற்றி நினைத்துப் பார்த்தாயா? நான் சந்தோஷமாக இருப்பதில் உனக்கு அக்கறை இல்லையா? பெற்றவளுக்கே பிள்ளையிடம் அன்பு கிடையாது. வெறுக்கிறாய். நான் வாழ் நாள் முழுவதும் அந்த அழுமூஞ்சியைக் கட்டிக்கொண்டு நாசமாய்ப் போனாலும் உனக்குக் கவலை இல்லை!"

"அவ்வளவுதானே! அவள் அழுமூஞ்சி யில்லை, நடராஜா! அதைப்பற்றி யோசிக்கவே வேண்டாம். தனக்கு ஏதோ நேரப் போகிறது என்று நினைத்துக்கொண்டு அழுகிறாள். நீ மட்டும் கல்யாணத்துக்குச் சம்மதம் தெரிவித்துவிடு. எவ்வளவு கலகலப்பாக இருக்கிறாள், பார்! இந்த வீட்டுக்கு அவள் மருமகளாக வந்து விட்டால் லக்ஷ்மீகரமாக இருக்கும்."

"அம்மா! நான் தீர்மானித்து விட்டேன். என் மனத்தை மாற்றமுடியாது" என்றான் நடராஜன்.

பொன்னம்மாள் தான் பாக்கி வைத்திருந்த ஒரே ஒரு அஸ்திரத்தையும் பிரயோகித்தாள். "உன் அப்பாவைப் பற்றி யாவது யோசித்துப் பார்த்தாயா? விமலாவின் தகப்பனார் இறந்து போகும் சமயத்தில் உன் அப்பா அவருக்குக் கொடுத்த வாக்குறுதியை நீ நிறைவேற்ற வேண்டாமா?"

"என்னைக் கேட்காமலேயே எப்போதோ யாரோ கொடுத்த வாக்குறுதிக்காக என் வாழ்க்கையையே பாழடித்துக் கொள்ள முடியாதம்மா! நாசமாக்கிக்கொள்ள முடியாது! உனக்கு இந்தக் கல்யாணத்தில் சம்மதம் இல்லையானால் நீ நடத்தி வைக்க வேண்டாம்; பார்க்க வரவேண்டாம். இருநீர்மலைக்குப் போய் நிர்மலாவின் கல்யாணத்தைப் போல் கச்சிதமாக முடித்துக் கொண்டு வருகிறேன். உனக்கு அவள் மருமகளாக இந்த வீட்டுக்கு வருவது பிடிக்கவில்லையென்றால் விட்டு விடு. அதுவும் வேண்டாம். இந்த வீட்டுக்கே அவள் வர வேண்டாம். அவள் தன் வீட்டிலேயே இருந்து விட்டுப் போகட்டும். அதனாலெல்லாம் கல்யாணம் நடக்காமல் போகாது" என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்து நகர்ந்தான் நடராஜன்.

பிள்ளை மனம் கல்லாக இருந்தது. பெற்ற மனம் பித்தாகியது. அவள் ஓடிச் சென்று அவனை வழிமறித்தாள். "நடராஜா! அவசரப்பட்டு ஒன்றும் செய்து விடாதே! கல்யாணத்தை நானே நடத்தி வைக்கிறேன். நீ நன்றாக இருக்க வேண்டும், சந்தோஷமாக வாழவேண்டும் என்பதுதானே என் ஆசை? மல்லிகாவை மணந்து கொண்டால்தான் நீ சந்தோஷப்படுவாய் என்றால் அப்படியே செய்! நானும் கைநீட்டி அவளை இந்த வீட்டுக்கு வரவேற்கிறேன். அவசரப்பட்டுக் கொண்டு ஒருத்தருக்கும் தெரியாமல் கல்யாணத்தை முடித்துக் கொண்டு வந்து விடாதே! நல்ல நாளாகப் பார்த்து நம்முடைய கௌரவத்துக்குக் குறைவில்லாமல் சம்பிரதாயப்படி நடக்க ஏற்பாடு செய்யலாம்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

அம்மாவின் கைகளைத் தன் கன்னங்களில் பதித்துக் கொண்டு சிரித்தான் நடராஜன். "எனக்குத் தெரியும் அம்மா, உனக்கு மனம் கேட்காது என்று! உன்னைப் போல் சமர்த்துத் தாயார் இந்த உலகத்தில் வேறு யாருமே கிடையாது!" என்று சொல்லி விட்டு வேகமாகப் போய் விட்டான்.

'உன்னுடைய நற்சாட்சிப் பத்திரம் யாருக்கு வேண்டும்?' என்று தனக்குள் நொந்து கொண்ட பொன்னம்மாள் மனத்துக்கு ஆறுதல் பெற மணிசேகரனைப் பார்த்துப் பேசி விட்டு வரப் புறப்பட்டாள்.

(தொடரும்)




அறுபதாண்டு நிறைவு விழா

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி வைபவம் புது தில்லியில் அவரது இல்லத்தில் டிசம்பர் 3-ந் தேதி அதிவிமரிசையாக நடந்தேறியது. டாக்டர் கிருஷ்ணன் அவர்களின் நண்பர்களும், உறவினர்களும் இவ்வைபவத்துக்கு வந்திருந்து கிருஷ்ணன் தம்பதிகளை வாழ்த்திச் சிறப்பித்தனர்.

இந்திய விஞ்ஞானிகளில் தலைசிறந்து விளங்குபவரும், உலக விஞ்ஞானிகளின் பெருமதிப்பைப் பெற்றவரும், இந்தியப் பௌதிகப் பேராசிரியராக இந்திய சர்க்காரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டவரும், தமிழ் வளர்ச்சியிலே மிகுந்த ஈடுபாடு கொண்டவருமான விஞ்ஞானி கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்திருந்து பாரதத்துக்குச் சேவைபுரிய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.


"உங்கள் பற்களை பாதுகாருங்கள் !"
விஸ்டம் பல் வைத்தியர் எப்படி என்று கூறுகிறார்
உங்கள் டூத் ப்ரஷின் குச்சங்களை பற்றி உங்கள் பல் வைத்தியரின் ஆலோசனையை கேளுங்கள். ஜனங்களின் தேவைகள் பலதரப் பட்டவை! "விஸ்டம்" நான்கு விதங்களில் உண்டு - 'ப்ரத்யேக உறுதி'யிலிருந்து 'மிருதுவான' ரகம் - இதில் ஏதாவது ஒன்று உங்களுக்கு பொருத்தமானது.
என்னுடைய ஈறுகள் கரைந்து போவதாகக் காண்கின்றன. புது டூத் ப்ரஷ் அவைகளுக்கு உகந்ததல்ல. அது மிகவும் உறுதியானது.
உங்கள் பற்களும் ஈறுகளும் ஆரோக்கியமாகத் தான் இருக்கின்றன. ஆனால் மிக உறுதியான ப்ரஷை உபயோகித்திருக்கிறீர்கள்.
நான் எப்போதும் உறுதியான ரக ப்ரஷையே உபயோகித்து வருகிறேன். ஈறுகள் இருக்கின்றன. நீ பல் வைத்தியரை போய் பார்?
என் கணவர் உறுதியான ரக ப்ரஷையே உபயோகிக்கிறார் ஈறுகளை பின் தள்ளாமல்
சிலருக்கு உறுதியான ரக ப்ரஷ்தான் தேவை ஆனால் இதரர்களுக்கு அது சரியல்ல. உங்கள் ஈறுகள் உறுதியாயில்லாவிட்டால் ஒரு நடுத்தர ப்ரஷை உபயோகியுங்கள். இல்லாவிடில் உங்கள் ஈறுகள் பின்னுக்கு தள்ளப்பட்டு பற்களில் வியாதி தொத்திக் கொள்ளும்.
விஸ்டம் ப்ரஷின் விரும்பப்படும் நைலான் குச்சங்கள் ஈறுகளை தடவிக் கொடுத்து பற்களின் இடுக்குகளையும், சுத்தம் செய்கிறது. விஸ்டம் உபயோகிப்பதற்கு இலகு. ஏனெனில் அதன் தலை சிறியது; கைப்பிடி சாய்த்தோட்டமான அமைப்பு பெற்றது. இவை காரணமாக விஸ்டம் பொருத்தமான வடிவம் கொண்ட டூத் ப்ரஷ் என்று பிரசித்தி பெற்றது!
காலாகாலத்தில் உங்கள் பல் வைத்தியரைக் காணுங்கள்
Wisdom
நீடித்து உழைக்கும் டூத் ப்ரஷ்



மயக்கம் தெளிந்தது!

எஸ்.ரங்கநாயகி

"சாந்தா! சாந்தா!"

சாந்தா எழுந்திருக்கவில்லை. கைகளைத் தூக்கி விட்டுக் கொண்டாள்.

"சாந்தா அக்கா! அம்மா கூப்பிடுகிறாளே, எழுந்திருக்கவில்லையா?" என்று சுமதி அவளை உலுக்கி விட்டு எழுப்பினாள். சாந்தா சற்றுக் கண்களைத் திறந்தாள். "என்ன அக்கா! நீ அழுதாயா என்ன?" என்று சுமதி நன்குத் திருத்த தலையணையைப் பார்த்துக் கேட்டாள்.

"சுமதி! பெண்களுக்கு எந்தக் கண் துடித்தால் கெடுதல் என்று தெரியுமா?"—சாந்தா கேட்டாள். அவளுக்கே இதற்கு விடை தெரியும். தன் விடை தவறாக இருக்கக் கூடாதா, எதிர்மாறாகத் தன் தங்கை கூறிவிடக் கூடாதா என்ற நப்பாசை.

"பெண்களுக்கு வலது கண் துடித்தால் கெடுதல் என்பார்கள். சரிதான் போ, இந்தக் கண் துடிப்புக்காகவா இப்படிக் கண் கலங்குகிறாய்? நேற்று முழுவதும் கண் எரிகிறது என்றாயே, துடிப்பு கிளம்பியிருக்கும். இதைப் போய்ப் பிரமாதமாக நினைக்கலாமா?" என்று சகோதரியைச் சமாதானம் செய்தாள் சுமதி. 'இனிமேல்தானாகட்டும். என்ன கெடுதல் வரப் பாக்கி இருக்கிறது இவளுக்கு' என்று தன் மனத்துக்குள் நினைத்துக் கொண்ட சுமதி பெருமூச்சு விட்டாள்.

"இல்லையடி, சுமதி! ஒருவேளை உன் அத்திம் பேருக்கு ஏதாவது..." வார்த்தைகள் வெளி வராமல் தொண்டையை அடைத்தது. தன் கணவரைப் பற்றிப் பேச்செடுக்கவே அந்த வீட்டில் அவளுக்குப் பயம்.

"சரி! சரி! போ. அசட்டுப்பிசட்டு என்று ஏதாவது நினைக்காதே. மணி ஏழாகிவிட்டது. கீழே காப்பிக்குக்கூட அடுப்பு மூட்டவில்லை. எழுந்து வா நீ."

"சுமதி! அக்காவை எழுப்பப் போனவள் மாடியிலேயே உட்கார்ந்து விட்டாயா? இரண்டு பேரும் கீழே வாருங்கள்! உள்ளே கொள்ளைக் காரியம் காத்துக் கொண்டிருக்கிறது!" என்று தாயார் பாக்கியம் கீழேயிருந்து குரல் கொடுத்தாள்.

"இதோ வந்து விட்டோம்." சுமதி பதில் குரல் கொடுத்து விட்டுச் சாந்தாவையும் அழைத்துக் கொண்டே கீழே இறங்கினாள்.

"சாந்தா! அடுப்பைப் பற்ற வைத்துக் காப்பிக்கு ஜலம் வை. நான் வெந்நீர் அடுப்பு பற்ற வைக்கிறேன். ஏகப்பட்ட நேரம் ஆகி விட்டது" என்று உத்தரவிட்ட பாக்கியம் கையில் இரண்டு ஓலைக் கருவை எடுத்துக் கொண்டு கொல்லைப்புறம் சென்றாள்.

சாந்தா புடவையை இழுத்துச் செருகிக் கொண்டு அடுப்பைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தாள். அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து அருகிலிருந்த பாத்திரத்தில் இருந்ததை அதில் கொட்டினாள்.

"அக்கா! முதலில் பாலை ஏன் காய்ச்சுகிறாய்? ஜலத்தை வை. டிகாக்ஷன் போட வேண்டாமா?" என்று அங்கே வந்த சுமதி கேட்டாள். உடனே பாலை, பால் பாத்திரத்தில் கொட்டி விட்டு ஜலம் வைத்தாள்.

கீழே 'பில்டரை' வைத்து அதில் பொடியைப் போடப் போனபோது சுமதி பார்த்து விட்டாள். "அக்கா! உனக்கு என்ன வந்து விட்டது? காப்பிப் பொடிக்குப் பதிலாகக் கொத்தமல்லிப் பொடியைப் போடுகிறாயே...? நீ நகர்ந்து கொள். உனக்கு மனசு சரியாக இல்லை. நானே காப்பி போடுகிறேன்." சாந்தாவின் கையிலிருந்த கொத்தமல்லிப் பொடி டப்பியை வாங்கி அலமாரியில் வைத்துவிட்டு, தானே காப்பிப் பொடியை எடுத்துப் போட்டுக் காப்பி தயாரித்தாள்.

காப்பி குடித்ததும் சாந்தா விறுவிடென்று கொல்லைப்புறம் போனாள். கிணற்றிலிருந்து தண்ணீரை மொண்டு விட்டுக் குளித்தாள். சின்னஞ்சிறு நெற்றியில் பளிச்சென்று குங்குமப் பொட்டு மின்னிக் கொண்டிருந்தது.

"அம்மா! நான் கோவிலுக்குப் போய் விட்டு வருகிறேன்" என்று கூறியபடியே வாசற் கதவைத் தாண்டிவிட்டாள் சாந்தா.

"அடே, ராஜு! அக்காவின் மனம் சரியாக இல்லை. நீயும் கூடவே போ"—தம்பியை விரட்டினாள் சுமதி.

கறிகாயை நறுக்கிக் கொண்டிருந்த பாக்கியத்திடம் வந்தாள் சுமதி. "அம்மா! அக்காவைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது" என்று நெஞ்சடைக்கக் கூறினாள்.

"என்ன செய்கிறது? அவளைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கும் வயிற்றைச் சங்கடம் செய்கிறது. உங்கள் எல்லோரையும் விட அவள்தான் செல்லமாக வளர்ந்தவள். எவ்வளவோ உயர்வாகத்தான் விவாகம் செய்து கொடுத்தோம். இந்த ஹரித்ரா நதிக் கரை

யிலேயே இருக்கிறான் பிள்ளை. பிக்கு பிடுங்கல் இல்லை. பிள்ளை ராஜாமாதிரி இருக்கிறான் என்றுதான் சாந்தாவை அந்த இடத்தில் கொடுத்தோம். மாமியார் ஒருத்தியே எட்டு நாத்தனாருக்கும் நாலு மைத்துனர்களுக்கும் சமானமாகப் படுத்தினாள். கடைசியில் இந்த வீட்டிலேயே கொண்டு வந்து தள்ளி விட்டார்கள்...'' மனம் நொந்து விம்மித் தவிக்க, பெற்றவள் கூறினாள்.

'' அந்தக் கதைதான் தெரிந்திருக்கிறதே! அதைப்பற்றி நான் கூறவில்லை. வலது கண் துடித்தால் அத்திம்பேருக்கு ஆபத்தோ என்று துடிக்கிறாளே! இப்படியா தவிப்பார்கள்?''

கொடியில் ஈர வேஷ்டியைப் போட்டபடியே சங்கரன், '' எல்லாம் நம்பிக்கைதான் காரணம். மாப்பிள்ளைக்கு ஆபத்து என்றால் வாழ்க்கை சூன்யமாகப் போய்விடப் போகிறதே என்ற பயம்'' என்றார்.

'' ஆ...மாம், இனிமேல்தான் வாழ்க்கை சூன்யமாகாமல் மலரப் போகிறதாக்கும்! எல்லாம்தான் ஒரு வழியாக முடிந்து விட்டதே!'' நறுக்கிய கறிகாய்களைக் கழுவிய படியே கூறினாள் பாக்கியம்.

'' அதற்குள் எப்படி முடிவு கட்டிவிட முடியும்?'' என்று அடுக்களைக்குள் நுழைந்த படியே கேட்டார் சங்கரன்.

'' முடிவு கட்டும் நேரமும் வந்து விட்டது. உங்க மாப்பிள்ளை மூர்த்தி இருக்கானே, அவன் வேறு பெண்ணை விவாகம் செய்து கொள்ளப் போகிறானாம். ஏற்பாடெல்லாம் முடிந்து விட்டதாம்!'' என்று கூறிய பாக்கியம் உருளியைத் தூக்கி 'டொக்' கென்று அடுப்பில் வைத்தாள்.

'' என்னது?'' மின்னல் தாக்குண்டவர் மாதிரி கேட்டார் சங்கரன்.

''யார் இந்தக் கதையைக் கூறியது? இரு தார தடுப்புச் சட்டம் இருக்கிறதே! அவனைச் சும்மாவிட முடியாது.'' கோபு முகத்தில் கோபம் பொங்கச் சட்டம் பேசினான். அவன் இளம் ரத்தம் கொதித்தது.

''அதற்கு விதிகளும்தான் இருக்கின்றனவே! தீராத வியாதியாக இருந்தால் தள்ளி வைத்துவிட்டுக் கொட்டு மேளம் கொட்ட மணை ஏறலாம், மற்றொரு தாலியைக் கையில் பிடிக்கலாம்! நம் பெண்ணுக்குத்தான் வியாதி என்று பெயர் வைத்து விட்டார்களே!'' பாக்கியம் இதைக் கூறிவிட்டுத் தண்ணீர் எடுத்து வரக் கிணற்றடிக்குச் சென்றவள் கிணற்று மேடையிலேயே உட்கார்ந்து விட்டாள். தாயின் உள்ளத் தவிப்பை அறிந்த சுமதி சமையல் வேலையில் ஈடுபட்டாள். அவள் மனமும் நிலைகொள்ளாமல் தவித்தது

* * *

மன்னார்குடியில் பெரிய மிராசுதார் சங்கரன். சாந்தா குடும்பத்துக்கு மூத்தவள். அவள் பிறந்த நாலைந்து வருடங்களுக்குப் பிறகுதான் கோபு பிறந்தான்: பிறகு சுமதி பிறந்தாள். இப்பொழுது சுமதி விவாகப் பருவத்தை அடைந்து விட்டாள். அவளுக் குப் பிறகு சீனு, ராஜு பிறந்தார்கள்.

சாந்தாவுக்குச் சீர் வரிசைகள் தாராளமாகச் செய்து விவாகத்தை முடித்தார் சங்கரன். மாப்பிள்ளை மூர்த்தி நரசிம்மா நதிகடாக நிரத்தில் இருந்தான். அவனுக்கு நிலபுலன்கள் இருந்ததோடு, வியாபாரத்தில் ஈடுபட்டு அதிலும் நல்ல வரும்படி. வறட்டு ஜம்பத்தில் தாயும், மகனும் குறைந்திருக்க வில்லை. சாந்தா அவர்கள் வீட்டில் சுகம் காணவில்லை. தாயும் மகனும் அவளை வீட்டு வேலைக்காரிக்குச் சமமாக மதித்தனர். பிறந்த வீட்டுக்கே அனுப்பாமல் இருந்தனர். சாந்தா சிணுங்கவில்லை. அவளது நிலைமை அறிந்த சங்கரன் அவர்கள் வீடு சென்று கோபமாக மகளைத் தன்னுடன் வரும்படி அழைத்தார். மகள் மறுத்து விட்டாள்.

தான் கூப்பிட்ட போதுகூட வராத மகள், எலும்பும், தோலுமாக ஒரு நாள் தன்னந் தனியாக வண்டியில் வந்து இறங்கியதும் சங்கரன் திடுக்கிட்டார். பாக்கியம் மகளின் உடலைக் கண்டு அச்சமடைந்தாள்.

'' என்ன அம்மா சாந்தா, இது என்ன?'' என்று உள்ளே வந்த மகளுக்குக் காப்பியைக் கொடுத்துவிட்டுக் கேட்டாள் தாயார். இதற்குள் குழந்தைகள் அவளைச் சூழ்ந்து கொண்டனர். சங்கரன் அருகில் வந்து நின்ற படியே மகள் என்ன கூறப் போகிறாளோ என்று அவளையே நோக்கினார்.

'' ஒன்றுமில்லை அம்மா! அனுப்பினார்கள், வந்து விட்டேன்''—முகத்தில் அமைதியை வரவழைத்துக் கொண்டு கூறியது போலிருந்தது சாந்தா கூறிய வார்த்தைகள்.

அன்னையின் அரவணைப்பும், தந்தை கொடுத்த போஷாக்கும், டாக்டர் கொடுத்த மருந்தும் சாந்தாவுக்கு வெகுவாகப் பலன் கொடுத்தன. இரவெல்லாம் தூக்கத்தைக் கலைத்த இருமல் நின்றது. கன்னங்கள் உப்பின. உடலில் சதைப் பற்று விழுந்தது. கண்களில் பழைய பிரகாசம் தூண்டது. வீட்டுக் காரியங்கள் முழுவதும் சாந்தாவே செய்ய ஆரம்பித்தாள்.

இவ்வளவிருந்தும் அனைவருக்கும் வேதனை. 'மீண்டும் சாந்தா புக்ககத்துக்குச் சென்றால் அங்கு அவளைக் கொலை செய்ய ஆரம்பித்து விடுவார்களே! அழகும், யௌவனமும் கொள்ளை போகின்றனவே. வாழ வேண்டிய வயதில் இப்படி நிற்கிறாளே! வியாதி என்று அனுப்பி விட்டு அந்த மாப்பிள்ளை இன்னும் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையே!'

சாந்தாவோ வாய் திறக்கவில்லை. கடைசியில் ஒரு நாள் புக்ககத்தில் நடந்த வரலாற்றைக் கூறினாள். அவள் புக்ககத்து மாமா ஒருவர், அரைகுறையாக டாக்டருக்குப் படித்தவர், அவர்கள் வீட்டுக்கு வந்தாராம். வந்தவர் சாந்தா இருமிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டுக் கையில் ஸ்டெதாஸ் கோப்பைக்கூட எடுக்காமல் அவளுக்கு டி. பி.



என்று கூறி விட்டாராம். 'என் தம்பி பார்த்த மாத்திரத்திலேயே வியாதியைக் கண்டுபிடித்து விடுவான். அவ்வளவு கெட்டிக்காரன். ஏண்டா. மூர்த்தி! இந்த வியாதிக்காரப் பெண்ணை வைத்துக் கொண்டு என்ன செய்வது?' என்று ஆரம்பித்தாள் மாமியார். மகனும் ஆமோதித்தான். வியாதிக்காரப் பெண்ணுக்குப் புக்ககத்தில்இடமில்லை. பிறந்த வீட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டாள்.

வியாதிக்கார மனைவியைப் பிறகு வந்து பார்க்கவேயில்லை மூர்த்தி. அவளோடு சேர்ந்தால் தனக்கும் வியாதி வந்து விடும் என்று பயந்துவிட்டான் போலும்!

"என் மகள் வியாதிக்காரப் பெண்ணாக என்னுடனேயே இருந்து கொள்ளட்டும்" என்று கூறிவிட்டார் சங்கரன். குடும்பத்துக்கு மூத்த மகள் வாழாவெட்டியாக நிற்கிறாளே என்று தாயாரின் நெஞ்சு துடிதுடித்தது. சாந்தாவின் உடலில் சக்தி ஏற ஏற உள்ளம் தவிக்கத் துவங்கி விட்டது. ஆயினும் அவள் வாய் திறந்து ஒன்றும் கூறவில்லை. அக்கம் பக்கங்களில் "சாந்தாவுக்கு உடம்பு சரியில்லையாமே! அதனால்தான் இங்கு கொண்டு வந்து தள்ளி விட்டார்களாமே!" என்று பேச்சு கிளம்பியது. சாந்தா உள்ளத் துயரை மறக்கச் சற்று நேரம் கோவிலுக்குப் போவதை வழக்கமாகக் கொண்டாள்.

இன்று கண் துடிப்பின் காரணமாகச் சாந்தாவின் மனத்தில் எல்லையற்ற துயரம்தேங்கியது. கணவனை விட்டுப் பிரிந்த போதுகூட இவ்வளவு ஏக்கம் குடிகொள்ளவில்லை. "அவருக்கு ஒரு ஆபத்தும் நேரிடக்கூடாது. ராஜகோபாலன்தான் துணை" என்று உள்ளம் உருக வேண்டி நின்றாள் சந்நிதியின் முகப்பில்.

கோயிலிலிருந்து சாந்தா வீட்டுக்குள் நுழைந்தபோது வீட்டில் காரசாரமான விவாதம் நடந்து கொண்டிருந்தது.

"தொலைத்து விடுகிறேன் பார் அவர்களை! எந்த டாக்டரை வேண்டுமானாலும் அழைத்து வரட்டும். அக்காவுக்கு வியாதி என்று எவன் சொல்லி விடுகிறான் பார்க்கிறேன்" என்று அவள் தம்பி கோபு கோபத்தோடு குதித்துக் கொண்டிருந்தான்.

"ஏண்டா! வீணுக்குக் கத்துகிறாய்? அவர்களை நீ வழக்குமூலம் தோற்கடித்து விட்டால் கூட அந்தப் பிசாசுகள் கையில் மீண்டும் சாந்தாவை ஒப்படைக்க நான் தயாராக இல்லை" என்றாள் பாக்கியம்.

"அதற்காக இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி அக்காவின் வாழ்வையே பாழடித்து விடுவதா? இவளைப் பாழடித்த அவனும் வாழக் கூடாது. அவனே வியாதிக்காரன். மூளை சரியில்லை என்று முடிவு செய்ய வைக்கிறேன் பார்!" கோபுவின் கைகள் மேஜையைக் குத்த, அவன் வாய் படபடத்தது.

சாந்தா ரேழியில் சற்று நேரம் நின்று எல்லா விஷயங்களையும் கேட்டு விட்டுப் பிறகு உள்ளே நுழைந்தாள். கோபுவின் கோபம் அவள் பக்கம் திரும்பியது. "அக்கா! கணவனுக்கு என்ன நேரிடுமோ என்று மறுகிறாயே! தீராத வியாதி என்று உன்னைத் தள்ளி வைத்து விட்டு வேறு விவாகம் செய்து கொள்ளப் போகிறானாம். உன் கையெழுத்துப் படச் சம்மதக் கடிதம் வேண்டுமாம். இதோ கடிதம்அனுப்பியிருக்கிறான் பார், முட்டாள்!" கடிதத்தை அவள் முன் வீசி எறிந்தான். சாந்தா கடிதத்தைப் படிக்கவில்லை. நின்ற இடத்தில் உட்கார்ந்து விட்டாள்.

பலவித வாதப் பிரதிவாதங்கள் காரசாரமாக நடந்தபோது சாந்தா அதில் கலந்து கொள்ளவில்லை. 'மாமா கூறியதை அவர் அப்படியே நம்பி விட்டாரே! அவர் ஒருமுறை நேரில் வந்து என்னைப் பார்க்கக் கூடாதா?' என்று மட்டும் மனம் விம்மித் தவித்தது. கடைசியில் எழுந்து நின்று, "என் சம்மதத்தைஅவர்களுக்கு எழுதி அனுப்பிவிடுங்கள். அவர் விவாகம் செய்து கொள்ளட்டும்" என்று கூறிய அவள் பொங்கிவந்த கண்ணீரை மனப்பெட்டியிலேயே அடக்கம் செய்யப் பிரயத்தனம் செய்தவளாய்ச் சமையலறைக்குச் சென்று விட்டாள்.

மெதுவாக ஒன்று, இரண்டு என்று நாட்கள் கடந்தன. இதோ ஞாயிற்றுக்கிழமை வந்து விட்டால் மூர்த்திக்குத் தஞ்சாவூரில் விவாகம் முடிந்து விடும். சங்கரன் வீட்டில் தினமும் கோபுவின் குரல்தான் கேட்டுக் கொண்டிருந்தது. மற்றவர்கள் நடைப்பிணமாக உலவினர். பாக்கியம் சாந்தாவை வாசலுக்குப்



போகக்கூட அனுமதிக்கவில்லை. அவளை யாராவது ஏதாவது கேட்டுத் துன்புறுத்தப் போகிறார்களோ என்ற பயம்.

சாந்தா தினமும் கோவிலுக்குப் போவதை மட்டும் நிறுத்தவில்லை. காலையில் தெரு நிறையக் கோலமிடவும் தவறவில்லை. கோவிலுக்குப் போகும்போது கமலி துணை.

அன்று வெள்ளிக்கிழமை. வாசலில் கோலமிட்டுக் கொண்டிருந்தாள் சாந்தா.

"சாந்தா, அடி சாந்தா!"

சாந்தா நிமிர்ந்து நோக்கினாள். நேரடித் தெரு பாலம்மாள் ஓடோடி வந்து கொண்டிருந்தாள். சாந்தா பயந்து விட்டாள்.

"நல்ல பலன் கிடைக்கப் போச்சடி அவர்களுக்கு! உன்னைப் படுத்தி வைத்த பாட்டுக்கு அந்த ராஜகோபால ஸ்வாமி தண்டனை கொடுக்காமல் போய் விடுவாரா? என்ன இருந்தாலும் ஒரு பெண்ணின் பாவத்தை இப்படிக் கொட்டிக் கொள்ள வேண்டாம்."

சாந்தா திடுக்கிட்டு நின்றாள். "ஐயோ! என்ன மாமி, என்ன வந்து விட்டது?"

"என்னடி வரும்? இந்தக் கலிகாலத்திலே கூடக் கடவுள், அநியாயம் செய்தவர்களுக்குக்



ஓய்வுபெற்ற சர்க்கார் உத்தியோகஸ்தர் திரு எல். வெங்கடகிருஷ்ணய்யரின் சஷ்டியப்தபூர்த்தி வைபவம் வெகு விமரிசையாகச் சமீபத்தில் நடந்தேறியது.

கைமேல் பலன் கொடுத்து விட்டார். உன் மாமியாரும் அவள் பிள்ளையும் தஞ்சாவூரிலே நாளைய மறு நாள் தாலிகட்ட இன்றே புறப்பட்டார்களாம். விடியற்காலே முதல் பஸ்ஸைப் பிடிக்க, ஹரித்ராநதித் தெருவிலிருந்து பஸ் ஸ்டாண்டுக்கு ஜட்காவில் வந்தார்களாம். பஸ் ஸ்டாண்டை நெருங்குவதற்குள் ஜட்கா வண்டியின் மீது ஒரு லாரி மோதி எல்லாருக்கும் படுகாயமாம். அந்தக் கிழவிக்குப் பிராணன் ஒட்டிக் கொண்டிருக்கிறதாம். மூர்த்திக்குக் காலில் நல்ல அடி. எல்லாரையும் முனிசிபல் ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறார்களாம். உன்னைப் படுத்தி வைத்த பாட்டுக்கு..."

சாந்தா அதற்கு மேல் ஒன்றையும் கேட்டுக் கொண்டு நிற்கவில்லை. "ஐயோ, அம்மா!" பேரிரைச்சல் ஒன்று அடிவயிற்றிலிருந்து வெளிவர உள்ளே ஓடினாள். பாலம்மாளும் அவளைப் பின்தொடர்ந்தாள்.

பாலம்மாளிடம் முழு விவரமும் அறிந்து பாக்கியமும் சங்கரனும் சாந்தாவைத் தேடிய போது அவள் பூஜை அறையில் இருந்தாள். "ராஜகோபாலா! நீதான் துணை. அவருக்கு வாழ்வு கொடு. அவர் வாழ்வுதான் என் வாழ்வு!" என்றாள் சாந்தா.

"நல்ல பைத்தியம்தான் நீ. அவர்களைப் போய்ப் பார்க்க உனக்கு வெட்கமாக இல்லை? திரும்பிப் பார்க்க ஆள் இல்லாமல் நன்றாகத் தவிக்கட்டும். நீ போகாதே" என்றான் கோபு ரத்தத்தில் ஏறிய உஷ்ணம் அடங்காமல்.

சாந்தாவுக்குக் கோபமாக வந்தது. "ஏ, கோபு! என்ன தான் உன் அத்திம்பேர் என்னை உதறித் தள்ளினாலும் அவர் உயிர் தான் என் மங்கள வாழ்வுக்கு உயிர்நாடி" என்று கூறி அவள் தெருப்பக்கம் விரைந்தாள். மகளின் பிடிவாதத்தை அறிந்த சங்கரன் அவளை நிறுத்தித் தாமே ஒரு வண்டியை அழைத்து வந்தார். சாந்தாவுடன் பாக்கியமும், சங்கரனும் ஆஸ்பத்திரிக்குச் சென்றனர்.

இவர்கள் சென்றபோது மூர்த்தியின் தாய் பாரேதி, எமன் வீட்டு நிலைப்படியில் காலடி வைத்து விட்டாள். சாந்தாவைக் கண்டதும் அவள் கண்களில் கண்ணீர் பெருகியது. மன்னிப்பைக் கோரி அவள் சாந்தாவை ஏக்கத்துடன் நோக்கினாள். "சாந்தா...!" என்று அவள் ஒரு வார்த்தை கூறுவதற்குள் யமன் அவளை உள்ளே தள்ளிக் கதவை மூடிவிட்டான்.

மூர்த்தியைப் பார்த்ததும் சாந்தா 'ஓ' வென அலறி விட்டாள். அவன் உடல் முழுவதும் கட்டு கட்டி யிருந்தது. அவன் ஸ்மரணையற்றுக் கிடந்தான்.

"ஸார்! நீங்கள் இவருக்கு உறவினரா?" டாக்டர் வந்து கேட்டபோது சங்கரன் என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தார். "ஆமாம். இவர் விபத்துக்குள்ளானவரின் மாமனார். நான் மனைவி" என்றாள் சாந்தா அழுத்தம் திருத்தமாக.

"ஸார்! ஒரு விஷயம் இவரைப் பற்றிக் கூற வேண்டியிருக்கிறது. காலில் நல்ல அடி. எலும்பு முறிவு ஏற்பட்டு விட்டது. அதனால் இவர் இனி ஒரு கால் ஊனத்துடன் இருக்கும்படி நேரிடும்."

"டாக்டர், உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லையே?" என்றாள் சாந்தா ஏக்கத்தோடு.

"அந்த விஷயத்தில் ராஜகோபால ஸ்வாமி உதவி விட்டாரம்மா. உயிருக்கு ஆபத்திருக்காது" என்றார் டாக்டர்.

நிம்மதியாக மூச்சு விட்டாள் சாந்தா. சங்கரன் எவ்வளவு கூறியும் மூர்த்திக்கு ஸ்மரணை திரும்பும் வரை அங்கிருந்து நகர மறுத்து விட்டாள். பாக்கியம் வீட்டு வேலைகளைக் கவனிக்கத் திரும்பிவிட்டாள். சங்கரன் சாந்தாவுக்குச் சாப்பாடு எடுத்து வருவதற்கு அவளைப் பின்பற்றினார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் மெதுவாக மயக்கம் தெளிந்தது மூர்த்திக்கு. எதிரே யார் இது? அழகு பிம்பமாக, பெண்மையின் பொலிவு பொங்க...சாந்தாவா இது?

"சாந்தா! நீ...நீ... சாந்தாதானே?"

"ஆமாம், சாந்தாவேதான். ஏன், வியாதிக்காரப் பெண்ணுக்கு எப்படி எழுந்து வர முடிந்தது என்று பார்க்கிறீர்களா? வியாதிக்கும், எனக்கும் என்றுமே விரோதம். இல்லாவிடில், உங்களுக்காக அவசியம் நேருமானால், என் ரத்தத்தைக் கொடுக்கும்படி நேரிடும் என்று டாக்டர் கூறியிருப்பாரா?" கொஞ்சுதலாகவும், அதே நிமிடத்தில் பரிகசிப்பில் தோய்ந்த வார்த்தைகளைக் கூறினாள் சாந்தா. அவளுக்கு இப்பொழுது துணிவு பிறக்கக் காரணம் இருந்தது. கணவனின் கால் ஊனமானதும் அவன் மனத்திலிருந்த ஊனம் மறைந்து விட்டதைப் புரிந்து கொண்டாள்.

"சாந்தா, நான் பாவி!" சாந்தாவின் கைகளைப் பிடித்தான் மூர்த்தி.

கணவனின் உள்ளத்தைப் புரிந்து கொண்ட சாந்தா. 'போதும் மனைவியிடம் மன்னிப்பு கேட்பது அழகல்ல. அப்பொழுதே மாமாவின் பேச்சைக் கேளாமல் என்னை ஒரு முறை வந்து பார்த்திருக்கலாம். இப்பொழுது அதைப் பற்றி என்ன!" என்றாள்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு கைத்தாங்குதலாகச் சாந்தாவைப் பிடித்துக் கொண்டு மூர்த்தி ஹரித்ரா நதி தெருவில் தன் வீட்டில் நுழைந்த போது தெருவிலுள்ளோர் ஆச்சரியத்தில் மூழ்கினர்.



வாழ்க்கையில் நீங்கள் பெறுவதென்ன?
விளங்கும் வீரியமா
அல்லது
வாழ்க்கையின் சந்தோஷத்தை கவலை, தெம்பின்மை, சிரமம் முதலியன கெடுக்காமல் காத்துக்கொள்ளுங்கள். வாழ்க்கையில் உண்மை வெற்றி தெம்பினால்தான் ஏற்படும்—ஸனடோஜன் புதுபலம் அளித்து, உடல்வலிமை மனசக்தி அதிகரிக்கச் செய்கிறது. 25,000 த்துக்கு மேற்பட்ட வைத்தியர்கள் அதன் அபூர்வ சக்தியளிக்கும் குணத்திற்கு அத்தாட்சி அளிக்கிறார்கள்.
ஸனடோஜன்
மிக்க உயர்ந்த பால் டானிக்

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

83. சிறுகக்கட்டி

'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்று ஒரு பழமொழி.

உரமிட்டு, உழுது பண்செய்த எனது மஹாமேதா விலாசத்தில் இப்பழமொழிக்குத் தோன்றிய புதிய பொருள் ஒன்று உண்டு. மிகவும் ஆழ்ந்த சிந்தனை, கடுமையான உழைப்பு, நெடுநாளைய முயற்சி, இடைவிடாது செய்த பண் என்று இப்படிப் பலவற்றின் விளைவாக,—கார்காலத்தில் உண்டாகும் மை இருட்டின் கருமேகங்களிடையே வையத்தையே நடுங்கச் செய்யும் இடிகளுடன் ஏற்படும் கண்ணைப் பறிக்கும் மின்னலைப் போல்—அந்தப் பழமொழிக்கு இப்புதிய பொருள் எனது மேதையில்...இல்லை இல்லை...மஹா மேதையில் உதித்தது.

சரிதான், ஐயா! திரைப்படத்துக்கு வசனம் எழுதுகிறீரா? நாட்டு வைத்தியக் கட்டுரை எழுதுகிறீரா? அப்படி உமது மேதையில்...

தப்பு...தப்பு. மஹாமேதையில் என்று சொல்லுங்கள்! சரி, அதில் உதித்த புதிய அர்த்தம் என்ன? அதைச் சொல்லுங்கள்.

அதுவா? "உடலுலர உயிர் வளரும்" என்பதுதான் அந்தப்பொருள். ஆன்மாவானது வீடு பெற நமது முன்னோர் என்ன செய்தார்கள், தெரியுமா?

வனநேற் கோசித்து
வனசிறகு வாயில்வந்தால்
வெம்பசி தவிர்த்து;
மழைவெய்யில் அனலாதியால்
வருந்தியும் மூல அனலைச்
சிரமேழ வெழுப்பியும்;
தேகம் நமதல்லவென்று
சிற் சுகவபேக்ஷையால்
யோகஞ் செலுத்தினர்.....

ஐயா! ஐயா! நிறுத்தும். ...வைத்திய விஷயமாக ஏதோ சொல்லப் போகிறீர் என்று காதைத் தீட்டிக்கொண்டு கேட்க வந்தேன். உமது யோகமும் - யாகமும் யக்ஞமும் யாருக்கு வேணும்...?

கோபிக்காதீர்கள். ஆறுவது சினம். ஏன் ஐயா இந்த யோகாப்பியாசத்தை வேண்டாமென்று....

அதெல்லாம் நமக்குச் சாத்தியமான காரியமல்ல. மஹா கஷ்டம். நம்மால் முடியாத காரியம் என்றே முடிவாகச் சொல்லி விடலாம்.

அப்படித்தான் 'ஊளைச் சதை போட்டவரை ஒல்லியாக்கிட'லும் சாத்தியமல்ல' என்று சாஸ்திரம் சொல்லுகின்றது.

சொல்கிறவன் சொன்னாலும் கேட்கிறவனுக்கு மதியில்லையா? ஊளைச் சதையைக் குறைத்தல் எளிதல்ல என்றால் யார் ஒப்புவார்கள்? இரண்டே நாட்கள் போதும். பட்டினி போட்டால் உடம்பு இளைத்துப் போகாதா?

ஊளைச் சதை போட்டவருக்கு ஏற்கெனவே ஒரு களைப்பு தேகத்தில் இருந்து கொண்டேயிருக்கும். இரண்டு அடி எடுத்து வைத்து நடந்தாலும், ஒன்றிரண்டு நிமிஷங்கள் பேசினாலும் மேல் மூச்சு வாங்கும். இந்நிலையிலிருப்பவருக்கு ஒருவேளை சாப்பாடு தட்டுக் கட்டினாலும் பயங்கரமான அளவுக்குப் பலஹீனமேற்படும். இந்தப் பலஹீனத்தின் காரணமாக ஊளைச்சதை குறைவதற்கு முன்பே—உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே ஊளைச் சதையுள்ளவருக்கு உபவாசத்தால் சதை குறைவதற்கு வழியில்லை.

மேலும், பட்டினி போடுவதால் பசி அதிகமாகும். ஆகவே......! கேட்கவேணுமா?

இதையெல்லாம் உத்தேசித்துத்தான் உடல் பருமனுவதைவிட ஒல்லியாயிருப்பதே விரும்பத் தக்கது. ஊளைச் சதையைக் குறைக்க வழியில்லை. ["நஹி ஸ்தூலஸ்ய பேஷஜம்"] என்று சாஸ்திரம் விதிக்கலாயிற்று.

ஒல்லியாயிருத்தலே மேல் என்பதற்காகக் 'கம்பங் கொல்லையில் காக்கை விரட்டி' போலிருப்பது காண்போரின் கண்களுக்கு அளிக்கும் ஒருகடுந்தண்டனையாகுமென்று கருதி ஓரளவாவது உடற்சதைபோடச் சிகிச்சைசெய்வது நியாயம் என்று சொன்னதுபோல, அதிஸ்தௌல்யத்தைக் குறைத்துவிடவும் முயலுவது அவசியம். குறைந்த மட்டும் குறையட்டும். அப்படி விசேஷமாகக் குறையாவிட்டாலும் மேன்மேலும் அதிகரித்துக் கொண்டே போகாமலாவது நிறுத்திக் கொள்ளலா மல்லவா?

பலத்தைக் கொடுக்கக் கூடிய ஆகாரங்கள் அல்லது மருந்துகள், ஆனால் புஷ்டியை அதிகரிக்கச் செய்யாதவை.

இவற்றைத்தான் இந்த ஊளைச் சதை போட்டவருக்குக் கொடுக்க வேணும். அனேகமாகப் பலத்தைக் கொடுப்பவை யாவும் புஷ்டியையும் கொடுப்பவைகளாகத்தான் இருக்குமே தவிர, பலத்தைக்

குறைக்காது; புஷ்டியையும் அதிகரிக்கச் செய்யாது என்னும் விருத்த குணங்களுள்ள உண்டிப் பொருள்களோ மருந்துகளோ இல்லை; இருப்பினும் அவை மிக மிகச் சில. இதையும் உத்தேசித்துத் தான் "நஹி ஸ்தூலஸ்ய பேஷஜம்" என்றார் வைத்திய நூலாசிரியர். ஊளைச் சதையைக் குறைக்க 'மருந்து இல்லை' என்றதில் ஆஹார விஹாரங்கள் உண்டு என்னும் பொருள் மறைந்து கிடக்கிறதென்று என் மஹாமேதையில் தெளிவாகிறது.

பகலில் எக்காரணங் கொண்டும் சிறிதளவுகூட உறங்காமல் இருத்தல். இரவிலும் ஓரளவு கண் விழிப்பது ஆகியவை ஓரளவு பருமனைக் குறைக்க உதவும்.

கூடுமான வரையில் அரிசியைத் தவிர்த்து அதற்குப் பதிலாகக் கோதுமையை உபயோகிப்பதும், பார்லி தேன் ஆகியவற்றை ஏற்பதும், கொழுப்புச் சத்துள்ள ஆகாரங்களைத் தவிர்ப்பதும் மிகவும் நல்லது.

வறட்சிமிக்க கண்டி வெண்ணெய், கோஷ்டம், அகில் கட்டை, தேவதாரு, காட்டுமிளகு, கோரைக்கிழங்கு, ஆல், அரசு, அத்தி, இத்தி, கல்லால் இவற்றின் துளிர்கள், மட்டிப்பால், லவங்கம், இவற்றை அரைத்துச் சிறிது ஊமத்தை இலையின் சாறும் சேர்த்துக் குழைத்ததைத் தேகத்தின் மேல் நலங்கு மாவு போல் பூசிப் பூசிச் சிறிது உலரும்போது இதைத் தேய்த்துத் தேய்த்துத் திமிரித் திமிரி முழுதும் உதிர்ந்து விடும்படி உடலைப் பிடித்து விடுவதால் உடலிலுள்ள ஊளைச்சதை குறையும்.

தயிரிலிருந்து இறுத்து எடுத்த ஜலத்தில், செவ்வியம், ஜீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, காயம், துவர்ச்சிலையுப்பு, சித்திரமூலத்தின் வேர் மேல்ப் பட்டை ஆகியவற்றின் சூரணங்களை வகைக்கு ஒரு சிட்டிகை வீதம் சேர்த்துக் கலக்கியதில் பொரிமா [ஸத்துமா] வைக் கலக்கிக் குடிப்பது நல்லது. பலம் குறையாது. பருமன் குறையும்.

திரிபலை, சுக்கு, திப்பிலி, வறுத்துப் பொடித்த இந்துப்பு ஆகியவற்றைச் சமன் எடையில் சேர்த்துத் தினமும் 2, 3 வேளை, வேளைக்கு 2 சிட்டிகை வீதம் நல்லெண்ணெய் விட்டுக் குழைத்ததை ஆறுமாதங்கள் வரையில் நக்கிச் சாப்பிட்டு வருவது நல்லது. இது செய்வதற்கு மிகவும் எளிதான முறை. நல்ல பலனையும் கொடுக்கக் கூடியது.

சிலாஜதுவைத் தொடர்ந்து சாப்பிட்டு வருவதும் உடல் பருமனைக் குறைத்து விடும்.

பச்சைப்பயறு, கொள், நரிப் பயறு, துவரை ஆகியவற்றை நெல்லி முள்ளியுடனோ, பேய்ப் புடலுடனோ சேர்த்துச் சமைத்த வியஞ்சனங்களை ஆகாரங்களுடன் சேர்த்து வருவது நல்லது.

இடுப்புக்குக் கீழேயும் முட்டிக் கால்களுக்கு மேலும் மட்டும் மிகவும் அதிகமாக ஏற்படும் ஒருவகை உடற்பருமன் உண்டு. பார்ப்பதற்கு எப்படி இருக்குமென்பதைப் பற்றிக் கவலையில்லை. இவர்களுக்குத் தமது உடலே ஒரு பளுவாகத் தோன்றும். ஸ்திரீகளானால் இவ்வினத்தோருக்கு மக்கட்பேறு உண்டாவது அபூர்வமாகும். இத்தகையோருக்கு ஆமணக்கின் வேரைப் பஞ்சு போல் இடித்துத் தேனில் சேர்த்துப் பிசைந்து கொஞ்சம் ஜலமும் சேர்த்து ஓரிரவு ஊற வைத்திருந்து, மறுநாள் காலையில் மருந்தைக் கசக்கிப் பிழிந்து களைந்து நீரை மட்டும் வடிகட்டிக் குடிப்பது நல்லது. இந்த ஊறல் நீரைக் காய்ச்சினால் ஓர் உப்பு கிடைக்கும். இந்த உப்பை அளவோடு நொய்க் கஞ்சியில் சேர்த்துச் சிறிது பெருங்காயத்தையும் இட்டுக் குடித்து வருவது மிகவும் நல்லது. இதுவும் எளிதில் எல்லோரும் செய்து கொள்ளக் கூடியதுதான். ஆராய்ச்சி ஆராய்ச்சி என்று அல்லும் பகலும் அலறுவோர், சிறிது செயலில் முனைய விரும்புவராயின் இதைத் தமது ஆராய்ச்சிக்கான விஷயமாக ஏற்கட்டுமே?


உடற்பருமன். அதிலும் மேற்சொன்ன இனத்தைச் சேர்ந்தது. அதிலும் மக்கட்பேறு இல்லாத ஸ்திரீ. விலக்குக் காலத்தில் வயிற்று வலியும் உண்டு. இவருக்குத் தமிழ் நூல்களின் வாயிலாகச் சித்தர் அளிக்கும் ஓர் எளிய சிகிச்சையுமுண்டு.

கலியாணமுருக்கு [இதைச் சிலர் முள் முருங்கை என்பர்] என்னும் சிறு மரத்தின் இலையின் ரஸத்தில் ஒரு தேக்கரண்டியளவில் 2, 3 மாத காலம் தொடர்ந்து உட்கொண்டு வந்தால், வயிற்றுவலியைப் போக்கி விலக்கைச் சரிக்கட்டி, உடற் பருமனைப் போக்கி, மலட்டு நோயையும் நீக்கும். கடிதம் எழுதி [தன் விலாசத்தைக் கொடுக்காது] கேட்ட சகோதரி கவனிக்கவும்.

மன்னிக்கவும்; கலியாண முருக்கு என்றதும் நினைவுக்கு வருகிறது. குழந்தைக்குப் பால் போதவில்லை என்றும் பாலே இல்லை என்றும் எழுதிய சகோதரிகளுக்கு—ஏற்கெனவே பெங்களூர் சகோதரி உபயோகித்துப் பலன் கண்ட விவரத்தைத் தெரிவித்திருந்தேன். கலியாண முருக்கின் இலையைத் தேங்காய் எண்ணெயில் சமைத்துப் புசித்தால் தாராளமாகப் பால் சுரக்கும். தக்க இடத்தில் இதைச் சேர்த்துக் கொள்ளவும். இதை எப்படிச் சமைப்பது என்கிறீர்களா? பெண்களுக்குச் சமைக்கச் சொல்லிக் கொடுப்பதும், மீன்குட்டிக்கு நீந்தக் கற்றுக் கொடுப்பதும் கஷ்டம். (தொடரும்)



எச்சரிக்கை!
உங்கள் ஜலதோஷம் அபாயகரமாகக் கூடும்!
வியாதி ஆரம்பமாகு முன்னரே, ஜலதோஷ அவஸ்தைகளை இந்த நல்ல, சக்திவாய்ந்த ஆயின்மெண்ட்டால் ஒழியுங்கள்!
உங்கள் சளித்தொந்திரவுகளை லகுவில் ஒழிக்க வழியிருக்கும்போது, வியாதி ஏற்பட ஏன் விடவேண்டும்? படுக்கும் முன், விக்ஸ்வேபோரப்பை மார்பிலும், தொண்டையிலும், முதுகிலும் தேயுங்கள். உடனேயே உபாதை இருக்கும் இடத்திலேயே ஆஸ்வாஸம் ஏற்படுவதை உணர்வீர்கள்! நீங்கள் நிம்மதியாக தூங்கும் சமயம், விக்ஸ் வேபோரப் சளி உபாதைகளை விரட்டியடிக்கிறது! மறுநாட்காலையிலேயே நீங்கள் சுகம் பெறுகிறீர்கள்!
ஜலதோஷத்திலிருந்து 2 விதங்களில் நிம்மதி தருகிறது!
1
மூக்கின் வழியே வேலை செய்கிறது. விக்ஸ் வேபோரப் சக்திவாய்ந்த ஔஷத ஆவிகளை வெளிவிடுகிறது. நீங்கள் சுவாசிக்கும்பொழுது மூக்கிலும் தொண்டையிலும் உள்ள சளி உபாதைகளை அகற்றுகிறது.
2
சருமத்தின் மூலமும் வேலை செய்கிறது.
விக்ஸ் வேபோரப்பின் நிம்மதி தரும் உஷ்ணம்
மார்பு, தொண்டை, முதுகில் தேய்த்தாலே போதும்.
VICKS
VAPORUB
விக்ஸ்
வேபோரப்
327 Tam
"விக்ஸ் வேபோரப்" டிரேட் மார்க்
இன்றே விக்ஸ்வேபோரப்பை உபயோகித்து பாருங்கள்!
புதிய கைக்கடக்கமான பரீட்சார்த்த சைஸ் டின் 40 ந.பைசா தான்
வரி எக்ஸ்ட்ரா


இப்பொழுது எலுமிச்சை ரசத்துடன்
டீயைக் குடித்துப் பாருங்கள்
LEMON
எக்காலத்திலும் இது
வசீகரிப்பது! ஒரு
கோப்பை மிகச் சூடான
டீயில் சிலதுளி எலுமிச்சம்பழ
ரசத்தை விட்டு. ருசிக்கேற்ற
வாறு சர்க்கரையைச் சேர்த்து
(பால் கூடாது) கலக்கி டீயின்
தன்மையுடன் எலுமிச்சம்பழப்
புஷ்டியையும் பருகுங்கள்
TEA BOARD INDIA
நான்தான் டீ — நான் உங்கள் நண்பன்



காட்சி 1

[பள்ளி ஆசிரியர்கள் கணேசய்யர், அகோரம் இருவரும் அகோரத்தின் வீட்டிலிருந்து உலாவக் கிளம்புகிறார்கள். வேளை : மாலை ஆறு, ஆறரை இருக்கலாம்.]

கணேசய்யர் (நண்பரிடம்) : என்ன, ஒரு மாதிரியாகச் சோர்ந்து இருக்கே? வீட்டில் ஒருவருக்கும் ஒண்ணுமில்லையே?

அகோரம் (அலுப்புடன்) : என்னைத் தவிர ஒருவருக்கும் ஒன்றுமில்லே. எனக்குத்தான் பைத்தியம் கொஞ்சம் கொஞ்சமாகப் பிடிச்சிண்டிருக்கு!

கணே : என்னப்பா, புதிர் போட்டுப் பேசறே? விஷயத்தைக் கொஞ்சம் தெளிவாகத்தான் சொல்லேன்.

அகோ : மனசிலே தெளிவு இருந்தால் தானே, வார்த்தையிலே தெளிவு இருக்கப் போகிறது? போன மாசந்தான் மூணாவது பெண் அவயம் பிரசவிக்க ஊருக்குப்போனாள். இப்போது கடைக்குட்டி அம்முவுக்குச் சீமந்தம் செய்யணும்னு சம்பந்தி கடிதாசு போட்டிருக்கிறார்!

கணே : அம்முவுக்குப் போன சித்திரையிலேதானே கல்யாணமே ஆச்சு! அவளுக்குத் தலைதீபாவளியே இந்த வருஷமில்லே? அதுக்குள்ளே சீமந்தம் வந்திடுத்தா! உன் ஜன்மம் என்னவோ விடியாமலேயேதான் போய் விட்டது. நான் என்னடான்னா இன்னிக்குக் கண்டிச்சுப் பேசி எப்படியாவது உன்னையும் உடன் அழைத்துப் போகணும்னு வந்தேன். நீ சொல்கிற கதையைக் கேட்டால், அது எங்கே நடக்கப் போகிறது!

அகோ : எதைச் சொல்லறே?

கணே : அதாம்பா, பள்ளிக்கூடத்திலே ஏற்பாடாகியிருக்கும் வடநாட்டு யாத்திரை. முந்நூறு ரூபாய் செலவிலே இப்படிக் காசி, ஹரித்வார், கயை ஆக்ரா, டில்லின்னு பார்க்க முடியுமா? அதுவும் வாத்தியார்களாகச் சேர்ந்து போகிறோம். துணைக்குத் துணையும் ஆச்சு, வேடிக்கை தமாஷாவுக்கும் குறைவில்லே. இப்பக்கூடச் சொல்றேன், நீயும் வா. இந்தக் கஷ்டமும் பிடுங்கலும் சாகிற வரை நம்மை விடப் போகிறதில்லே. இவைகளை மீறிண்டு வந்தால்தான் இப்படி நாலு இடங்களைப் பார்க்க முடியும்.

அகோ : உனக்குக் குழந்தை குட்டியில்லே, சம்சாரமும் நீயும் இரண்டே பேர், ஏன் பேச மாட்டே? நான் இருக்கிற நிலையிலே இப்போது வடநாட்டு யாத்திரை கிளம்பினால், என் வீட்டுக்காரி திரும்ப என்னை வீட்டுக்குள்ளே அனுமதிக்க மாட்டாள். உனக்கே தான் அவள் சுபாவம் தெரியுமே.

கணே : பள்ளிக்கூடத்திலே எல்லாருமே போய்த்தான் ஆகணும்னு மானேஜ்மெண்டோட உத்தரவுன்னு சொல்லிப் பாரேன்.

அகோ : அப்படியே சொல்றதாக வைச்சுப்போம், நான் பணத்துக்கு எங்கே போவேன்? அவயத்தின் பிரசவத்துக்கு வாங்கின கடன் இன்னும் தீர்ந்தபாடில்லே, அதற்குள் இந்தச் சீமந்தம் வேறு வந்திருக்கு.

கணே : நீ வரேன்னு மட்டும் கண்டிச்சுச் சொல்லு, நான் இதுக்குப் பணம் தரேன். மெள்ள, சௌகரியம்போல் கொடு. எனக்கு இப்போ அவசரமுமில்லே, உன் நாணயத்திலே எனக்கு நம்பிக்கையும் இருக்கு.

அகோ : அப்போ அந்தப் பணத்தைச் சீமந்தத்துக்குக் கொடுத்து உதவேன்.

கணே : இதோ பார், அது மட்டும் நடக்காது. ஏதோ, பால்யத்திலேருந்து பழகின உன்னோடு, இந்த இடங்களை யெல்லாம்



சேர்ந்து பார்க்கணும்னு எனக்கு ஒரு ஆசை. அதனாலே இதுக்குன்னு பணம் தரேன், வேறு ஒண்ணுக்கும் பைசா பெயராது.

அகோ : வீட்டிலே அவளை விட்டுட்டு நான் காசி கயைன்னு போனால் அவள் என்னைக் கொத்திப் போட்டுவிடுவாள்.

கணே : அப்போ அவளையும்தான் அழைத்துக் கொண்டு வாயேன். நான் கூட என் சம்சாரத்தை அழைத்துக் கொண்டுதான் வரப் போறேன்.

அகோ : உன் விஷயமே வேறு. இரண்டே பேர், பணத்துக்கும் பஞ்சமில்லே. நானும் என் சம்சாரமும் கிளம்பினால், கூட என் பயல் பிச்சையும் கிளம்பி விடுவான்.

கணே : அவனை அவன் மாமா வீட்டிலே விட்டுட்டு வந்தால்? நாலே வாரந்தானே?... உனக்கு இஷ்டமில்லேயா....சரி. அப்போ,

பௌர்ணமியன்று தாஜ்மஹாலைப் பார்க்கும்போது உன்னைப் பற்றி நினைக்கவாவது நினைக்கிறேன்.

அகோ (திடுக்கிட்டு): தாஜ்மஹாலைப் பௌர்ணமியிலே பார்க்கப் போறயா?

கணே: ஆமாம். ஹரித்வாருக்கும் போகலாமென்று உத்தேசம்...

அகோ: நான் ஏன் உன்னோடே வரக்கூடாது? இந்தத் தொல்லைகளெல்லாம் என்றைக்குந்தான் இருக்கு.

கணே: சபாஷ்! அப்படி வா வழிக்கு. பணம் ரெடியா வைத்திருக்கிறேன்.

அகோ (மனைவி நினைவு வர): அவளுக்கு என்னடா பதில் சொல்லுவேன்?

கணே: நாம் இங்கெல்லாம் போறதாகச் சொல்லுவானேன்? பள்ளிக்கூட விஷயமாக நாலு வாரம் நாக்பூர் வரை மட்டும் போகிறதாகச் சொல். நானும் "ஆமாம்" போட்டு வைக்கிறேன்.



அகோ: உன் சம்சாரம் இவளுக்கு வேண்டியவளாச்சே, அவள் சொல்லி வைச்சால்?

கணே: என் சம்சாரம் வரவில்லை, பிறந்தகம் போயிருக்கிறாள். உனக்கே தெரியும். நாம் கிளம்புகிற தினம் காலையிலேதான் கும்பகோணத்திலிருந்தே திரும்பப் போகிறாள்.

அகோ: திரும்பின பறகு சந்தித்தால்?—

கணே: அதைப் பற்றி இப்போ என்ன கவலை? 'நான் நாக்பூர் வரையில்தான் போகிறதாகக் கிளம்பினேன். போன இடத்திலே திமர்னு இங்கெல்லாம் போகும்படியாச்சு'ன்னு சொன்னால் போகிறது.

அகோ: என்னவோ போபடமாக இருக்கு. நாம் திரும்பி வந்ததும் வராததுமா, தலை தீபாவளி வேறு காத்துக் கொண்டிருக்கும்.

கணே: அது நீ போனாலும் போகாவிட்டாலும் வரத்தான் போறது. சரி, நாளையிலேருந்தாவது மூட்டையைக் கட்ட ஆரம்பி. உனக்கும் சேர்த்து நான் டிக்கெட் வாங்கி விடறேன். அடுத்த வாரம் இந்நேரம் பெஜவாடாவை நெருங்கிக் கொண்டிருப்போம்.

அகோ: என்னவோ போ, எல்லாம் நல்லபடியாக முடியவேணும். (காட்சி மாற்றம்)

காட்சி 2

[அடுத்த நாள் காலை. பள்ளிக்கூடம் கிளம்பிக் கொண்டிருக்கும் அகோரம் நாக்பூர் பிரயாணம் பற்றி மனைவி பர்வதத்திடம் சொல்லி அவள் உத்தரவு கேட்கிறார். பர்வதம் சீறி விழுகிறாள்.]

பர்வதம்: முடியாது, முடியாது! முடியவே முடியாது.

அகோரம் (குழைவாக): ஏற்கனவே வருவதாக நான் வாக்குக் கொடுத்து விட்டேன். இனிமேல் பின்வாங்கினால் நன்றாயிருக்காது.

பர்: என்னைக் கேட்காமல் யார் உங்களை வாக்குக் கொடுக்கச் சொன்னது?

அகோ: கேட்க அவகாசமில்லை. நாக்பூரில் பள்ளி ஆசிரியர்களுக்கெல்லாம் ஆதாரக் கல்வி பயிற்சி தருகிறார்களாம். பயிற்சி முடிந்து ஊர் திரும்பினால் மாசம் பத்து ரூபாய் கூடக் கிடைக்கும்.

பர்: போகிற செலவு யாருடையதோ?

அகோ: பாதி சர்க்கார் கொடுப்பார்கள். முந்நூறு ரூபாய் நான் போடும்படி இருக்கும்.

பர்: முந்நூறு ரூபாய்? அவயத்தின் பிரசவத்துக்கு வாங்கின கடன் அடைஞ்சபாடில்லை. அம்முக் குட்டியின் தீபாவளி, சீமந்தம் இரண்டும் வேறே வருகிறது. உங்களுக்குப் புத்தியில்லை?......

அகோ: இதிலே என் இஷ்டம் ஒன்றுமில்லே. போய்த்தான் ஆகணும்னு மானேஜ்மெண்டார் உத்தரவு. வேறே வழியில்லாமல் நான் ஒப்புக் கொண்டேன்.

பர்வ: யார் உங்களை ஒப்புக் கொள்ளச் சொன்னது? அது யார் பிரமாத மானேஜ்மெண்ட்! அடுத்த தெருவிலே இருக்கே. அந்தக் கிழம் சக்கிராச்சாரி தானே? நான் போய் அதுக்கிட்டே உங்களாலே வர முடியாதுன்னு சொல்லி விட்டு வருகிறேன்.

அகோரம் (பயந்து): ஐயையோ! அப்படியெல்லாம் செஞ்சுடாதே. இனிமேல் அப்படிச் சொன்னால் நன்றாயிருக்குமா? டிக்கெட்டெல்லாம் வேறு வாங்கியாச்சு.

பர்: டிக்கெட் வாங்கப் பணம்?..

அகோ: கணேசய்யர் கைமாத்தாகக் கொடுத்தார்.

பர்: ஓகோ! அவரோடே வேலை தானா இதெல்லாம்? அது சம்சாரம் விசாலம் ஊரிலே இல்லேன்னு இப்படியெல்லாம் கூத்தடிக்கிறது போலிருக்கு...... அவள் வரட்டும், நானே விஷயத்தைச் சொல்றேன்.

[அவர்கள் பையன் பிச்சை வருகிறான்.]

பிச்சை: அப்பா! நீ காசி, டெல்லி எங்கெல்லாமோ போகிறயாமே? எனக்குச் சலவைக் கல்லிலே தாஜ்மகால் பொம்மை வாங்கிண்டு வரணும். ஆக்ரா ரயில்வே ஸ்டேஷனில் கிடைக்கும்னு வேம்பு சொன்னான்.

அகோரம் (பரபரப்புடன்): நான் ஒன்றும் அங்கெல்லாம் போகல்லே. நாக்பூர் வரைதான் போகப் போறேன்.

பர்வதம் (குறுக்கிட்டு): பிச்சை! எந்த வேம்புடா ஒங்கிட்டே சொன்னான்? .... (சந்தேகத்துடன்): இதென்ன இது. இவன் காசி, கங்கைன்னு சொல்றானே. அங்கெல்லாம் வேற போகப் போறேளா என்ன?

அகோ: அவன் குழந்தை என்னத்தைக் கண்டான்? நானும் தன் பின்னைகிட்டே விளை

சாட்டாகச் சொன்னதை நெஜம்னு இவன் நம்பிக் கொண்டிருக்கான்.

பிச் : இல்லேயம்மா, வேம்பு மாத்திரம் சொல்லவில்லே...அவன் அம்மாவே நேற்று மாலே சொன்னாள். என்னைக் கூடக் கேட்டாள், உங்கம்மா போகப் போறதில்லேயான்னு.

அகோ (பயந்து) : எலே, நீ சும்மா இருக்க மாட்டே? பெரியவா பேசும்பொழுது உனக்கு என்ன இங்கு வேலே? புத்தகத்தை எடுத்துக் கொண்டு பள்ளிக்கூடம் போ.

[இப்பொழுது வாசலில் கணேசய்யர் கனைத்துக் கொண்டே அகோரத்தைக் கூப்பிடுகிறார்.]

கணே : என்ன அகோரம்! பள்ளிக்கூடம் கிளம்பவில்லேயா? நேரமாகிறதே!

அகோ : உனக்கு நூறு வயசு போ, பார்வதம் என்னை நாக்பூர் போக வேண்டாமென்கிறாள்.

கணே : டிக்கெட்டெல்லாம் வாங்கி நாக்பூரிலே வேறு தங்க ஏற்பாடுகள் செய்தாச்சே!

பார் : அதற்காகப் போய்த் தான் ஆகணுமோ! உங்களையும் விசாலத்தையும் போலிருந்தால் ஏன் இதற்கெல்லாம் நாங்க கவலேப்படப் போறோம்?

கணே : பணத்தைப் பற்றிக் கவலேப்பட வேண்டாம்னு நான் தான் சொன்னேனே. சௌகரியப்படி திருப்பித் தந்தால் போதும்.

பார் : நீங்க விசாலத்தையும் அழைத்துக்கொண்டு போறேளா?

கணே (திடுக்கிட்டு) : இல்லேயே.....யார் சொன்னது?

பார் : நானேதான் கேட்டேன். இவருக்குத் தரேங்கற முந்நூறு ரூபாயிலே அவளை நாலு இடம் அழைத்துக் கொண்டு போய்க் காட்டுங்களேன்.



விசா: புழுக்கமாக இருந்தது... (சிரித்து) மாமிதான் ஊருக்கு முன்னாடியே தனக்கும் உங்க சிநேகிதருக்கும் இடத்தைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கமாட்டேன்கிறாரே!

கணே (புரியாமல்): என்ன சொல்றே? யாரைச் சொல்றே...?

[இதற்குள் அகோரம் பார்வதத்தைப் பார்த்து விடுகிறார்]

அகோ : என்ன பார்வதம்! ஸ்டேஷனுக்கு வருவதாகச் சொல்லவே இல்லேயே?

பார்வ : நீங்கள் கூப்பிட்டேளா? விசாலம் வழி அனுப்ப வரச் சொன்னாள். அவளே ஸ்டேஷனுக்குப் போகிற வழியிலே வந்து என்னை அழைத்துக் கொண்டும் வந்தாள்.

கணே : அவளுக்கு இதெல்லாம் பிடிக்காது. மேலும், பள்ளிக்கூடத்திலே வாத்தியார்களாகப் போகிற கும்பலிலே பெண்களை எப்படி அழைத்துக்கொண்டு போகிறது?

பிச்சை : அப்படி யொன்றும் தடை இல்லேயாமே? நாணு மாமா, அவர்கள் வீட்டு மாமி போகிறதாக முதலில் இருந்ததாம். கடைசியிலே அவரேதான் குளிர் தாங்காதுன்னு வரவில்லேன்னு சொல்லிவிட்டாராம்.

அகோ (கோபமாக) : எலே! நீ சும்மா குறுக்கே பேசாமல் இருக்க மாட்டே?

[அகோரமும் கணேசய்யரும் அவன் சொல் மாரிகளுக்குப் பயந்து விரைவில் வெளியே செல்லுகிறார்கள்.]

காட்சி 3

[சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு அருகில் பஸ்ஸிலிருந்து இறங்கிய அகோரமும் கணேசய்யரும் பிளாட்பாரத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறார்கள். காலை பத்துமணி யிருக்கும்.]

அகோரம் : ஏதோ பெரியவர்கள் செய்த புண்ணியம், கடைசி நிமிஷத்திலேயாவது காசி, கயை எல்லாம் கிடைச்சது. ஏன் முந்தா நாள்கூட இந்தப் பிரயாணம் சாத்தியமாகும்னு எனக்கு நம்பிக்கையில்லே.

கணேசன் : என்னாலே நம்ப முடியவில்லேயே! எதனாலே உன் மனைவி மனம் மாறி விட்டது? இப்போ நீ புறப்பட்டு வரப்போ, ஏதாவும் சொன்னாளா? எப்படி இருந்தாள்?

அகோ : நான்தான் எட்டு மணிக்கே வீட்டை விட்டுப் புறப்பட்டேனே? வரப்போ சிரித்துக்கொண்டு, சுமுகமாகத்தானே விடை கொடுத்தாள். வாசல் வரை கூட வந்தவள் 'உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று ஆயிரம் தடவைகள் சொல்லி அனுப்பினாளே.

கணே : என்ன சண்டை, சச்சரவு இருந்தாலும் கணவன், மனைவி உறவு விட்டுப் போகுமா? அதுவும் கோபம் இருக்கிற இடத்திலேதான் குணமும் இருக்கு.

[பிளாட்பாரத்தை அடைந்து ரயில் பெட்டியை நெருங்கி விட்டார்கள்.]

கணே (மனைவியைப் பார்த்து) : உள்ளே உட்காருவதற்கு என்ன?

அகோ : இப்போதான் நினைச்சேன். உன்னை விட்டுப் போக வேண்டி இருக்கேன்னு...

பார்வ : ஏன் நினைக்க மாட்டேள்? யார் அழைத்துக் கொண்டு போக வேண்டாம்னு உங்களைத் தடுத்தது?

அகோ : நினைத்ததெல்லாம் முடிகிறதா?

பார்வதம் (உஷ்ணமாக) : முடிகிறதெல்லாம் நினைக்கிறோமா?

(ரயில் கிளம்பக் கடைசி மணியும் அடித்தாகிவிட்டது. விசாலம், கணேசய்யர், அகோரம் மூவரும் பெட்டிக்குள் ஏறுகிறார்கள்.)

அகோரம் (உள்ளே வந்தவுடன்) : இறங்கு, பார்வதம்! இறங்கு. ரயில் கிளம்பிவிடப் போகிறது. ஆமாம்...யார் துணையிலே வீடு திரும்புவாய்?

பார்வ : என்னாலே தனியாகப் போக முடியாது. அதுவும் இத்தனை பெரிய பட்டணத்திலே. நீங்களும் கூட வாங்கோ.

அகோரம் (உண்மையிலேயே பயந்து) : டிக்கெட்டெல்லாம் வாங்கியாச்சே? நான் எப்படி வருவேன்? இறங்கு பார்வதம், அதோ கொடி வேறு காட்டுகிறான்!

பார்வ: எனக்குத் தனியாகப் போகப் பயமாக இருக்கு. நீங்கள் இல்லாமல் நான் கீழே இறங்க மாட்டேன்...உம்... வாங்கோ!

(ரயில் கிளம்பி நகருகிறது)

அகோ: அய்யய்யோ! நான் என்ன செய்வேன்!

விசாலம் (சிரித்தவாறே): பார்வதம்! போதும் விளையாட்டு. நிஜத்தைச்சொல்லு. அவர் அழுதுவிடப் போகிறார்.



பார்வ: அடி, அவசரக் குடுக்கை! அவரும், உன் கணவரும் சேர்ந்து கொண்டு சொல்லியிருக்கிற பொய்களுக்கு இன்னும் கொஞ்ச நேரம் இரண்டு பேரையும் கதற வைச்சிருக்க வேண்டாம்? அதற்குள்ளே உண்மையைச் சொல்லி விட்டாயே.

விசாலம் (தன் கணவனைப் பார்த்து): நான் எதேச்சையாகப் பார்வதத்துக்கு, 'நான் காசிக்குப் போகிறேன், நீயும் உன் புருஷனோடு காசி, டெல்லி எல்லா இடங்களுக்கும் வாயேன்' என்று கடிதாசு போட்டேன்.

பார்வ: ஆதாரக் கல்வியின் அடிப்படை அப்போதுதான் எனக்கு அம்பலமாச்சு.

விசா: கடிதாசு மூலமாகவே எப்படிப் பொய்க்குப் பொய் சொல்லி உங்க இரண்டு பேரையும் திணற வைக்கிறதென்று திட்டம் போட்டோம்.

பார்வ: அதன்படி, ஊரிலே விருந்து விட்டுக் காவலுக்கும், பிச்சையைப் பார்த்துக் கொள்ளவும் என்னுடைய தம்பியை உடனே வரச் செய்தேன்.

விசா: என் தம்பி, பார்வதத்துக்கும் டிக்கெட் வாங்கி, இதே பெட்டியிலே ரிஸர்வும் செய்து கொடுத்தான்.

பார்வ: உங்களுக்கு உங்க சிநேகிதர் கடன் கொடுத்தார். எனக்கு விசாலம் டிக்கெட்டுக்கும் செலவுக்கும் பணம் தந்தாள். ஆதாரக் கல்வி பயின்று வந்தால்தான் அதிகச் சம்பளம்கிடைக்குமே? அதிலேயிருந்து சௌகர்யப்படி, கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் கடனைத் திருப்பிக் கொடுத்து விட்டால் போகிறது. என்ன விழிக்கிறீர்கள்?

விசாலம் (சிரித்துக்கொண்டே): உட்காருங்களேன். இரண்டு பேரும் ஏன் அப்படியே சிலைமாதிரி நின்று கொண்டே யிருக்கிறீர்கள்?

(நண்பர்கள் இருவரும் மனைவிகளுக்கு எதிர்ப்பலகையில் வந்து உட்காருகிறார்கள்.)

கணே: ராமேச்வரம் போனாலும் ஏதோ விடாதுன்னு கேள்விப்பட்டிருக்கோம். அந்தக் கதி இப்போது காசிக்கும் ஏற்பட்டிருக்கு போலே இருக்கு.

அகோரம் (பயந்து): உஸ்.........இரையாதேடா. நீ சொன்னது மட்டும் அவள் காதிலே விழுந்திருந்தால், இந்த ரயிலேயே ஒரு குலுக்கு குலுக்கியிருப்பாள். ஆமாம்!

(ரயில் எழுப்பும் அமளியில் நண்பர்களின் இந்தப் பேச்சு நல்லவேளையாக அவர்களது மனைவிமார் காதுகளில் விழவில்லை. அவர்கள் இருவரும் இன்னமும் தங்கள் வெற்றியின் பெருமையில் மெய்மறந்திருக்கிறார்கள்!)

ஸ்ரீ ராம்தீர்த் யோகாசிரமம்

✻

ஸ்ரீ யோகாசாரியர் உமேஷ்சந்திரரால் பம்பாயில் நடத்தப்படும் ராமதீர்த் யோகாச்ரமம் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் பம்பாய் மாதுங்காவில் ஆரம்பிக்கப்பட்டது. இங்கே ஆசனங்களைப் பற்றியும் யோக தரிசனங்களைப் பற்றியும் சரீர நலனுக்காகவும் மனோ நிம்மதிக்காகவும் பல வழிகள் போதிக்கப்படுகின்றன. இதனுடைய வெள்ளி விழா அடுத்த 1959 ஜனவரி மாதம் நிகழவிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை யொட்டி இந்த ஆசிரமத்தை விரிவுபடுத்தவும், சிகிச்சை முறைகளை மேற்கொள்ளவும், சாதகர்கள் அங்கேயே தங்கிப் பயிற்சி பெற வசதியாக உணவு விடுதிகள் அமைக்கவும், இயற்கைச் சூழ்நிலையில் யோக மந்திரம் அமைக்கவும் 'உமேஷ் யோக தர்சன்' என்னும் அரிய நூலை வெளியிடவும், ஒரு மாதப் பத்திரிகை வெளியிடவும் திட்டமிட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் பற்றுள்ளவர்களும் இந்தக் கைங்கரியத்தில் கலந்து கொள்ள விரும்புவோரும் ஸ்ரீ ராம்தீர்த் யோகாச்ரமம் (விஸ்தரிப்புத் திட்டம்) 27 வின்சென்ட் சதுக்கம், இரண்டாவது தெரு, தாதர், பம்பாய்-14 என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

சோலைகள் சூழ்ந்த கோவில்

பிலோ இருதயநாத்

அத்திப்பட்டு ரயில் நிலையத்தில் இறங்கிச் சுமார் நான்கு மைல் மேற்கே நோக்கி நடந்தால், 'மேலையூர்' என்ற கிராமத்தை அடையலாம். இது பொன்னேரி தாலூக்காவைச் சேர்ந்த ஒரு கிராமம். அங்குள்ள கோபுரம் வெகு தூரம் வரையில் தெரிவதால், அக்கிராமத்துக்குச் செல்லுவோர் யாரையும் வழி கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. அக்கிராமத்தில் உள்ள கோவில் மிக மிகப் புராதனமானது. கோவிலைச் சுற்றி வயல்களும், சோலைகளும் கண்ணுக்கினிய காட்சியாக விளங்குகின்றன.

கல்வெட்டுக் காலத்தில் இந்தக் கிராமத்துக்கு வல்லூர் என்ற பெயர் வழங்கி வந்ததாகத் தெரிகிறது. இங்குள்ள திருக்கோவில் "திருமணங்கா உடையார் கோவில்" என்று வழங்கியது.

கி. பி. 1715-ம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் இவ்வூர் 'மேலையூர்' என்றும், கோவில் 'திருமணங்கீச்சரம்' என்றும் குறிக்கப்பட்டுள்ளன. மேலையூர் என்பதே காலப்போக்கில் 'மேலூர்' என்று மாறியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

இத்தலம் மிகப் பழைமையானது. பண்டைக் காலத்தில் கிழக்கில் கடலும், தெற்கே திருவொற்றியூரும், மேற்கே குசஸ்தல நதியும், வடக்கே திருவெள்ளைவாயிலும் இவ்வூருக்கு எல்லையாக இருந்தனவாம். அக்காலத்தில் இங்கு வேளாளர்கள் மிகுதியாக வாழ்ந்தனர்.

இத்தேவாலயத்தில் ஏழு கல்வெட்டுகள் இருக்கின்றன. அவற்றுள் ஐந்து கல்வெட்டுகள் கி. பி. 1250 முதல் 1282 வரையிலிருக்கும் சரித்திரங்களைப் பற்றிப் பேசுகின்றன. அவைகளில் ஒன்று கி.பி. 1266-வது ஆண்டில் பாண்டிய நாட்டு மன்னனான திருபுவன சக்கரவர்த்தியாகிய சுந்தரபாண்டிய தேவர் (கி. பி. 1251 கி. பி. 1271) இத்தேவாலயத்தைத் தரிசனம் செய்து, இக் கோவிலைப் புதுப்பிக்க வேண்டி, பொருளுதவி செய்ததைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

மற்ற நான்கு கல்வெட்டுகளும் இப் பாண்டிய மன்னன் ஆணைக்குட்பட்டிருந்த ஜயங்கொண்ட சோழ மண்டலம் எனப் பெயர் பெற்று விளங்கிய தொண்டை நன்னாட்டுக்கு ராஜப் பிரதிநிதியாயிருந்த, விஜயகண்ட கோபால தேவரைப் பற்றிய விஷயங்களை விரிவாகக் குறிப்பிடுகின்றன.

பாண்டிய மன்னர்களுக்குப் பின்னர், நாயக்கர் பரம்பரையில் இராசகாவிதி நாயக்கருடைய விசேஷ குணங்களைப் பாராட்டி, அவரது பிரதிநிதியாக இருந்த திருமலை நாயக்கர் முயற்சியால் பல சிறப்புகள் நடந்தன என்று ஒரு கல்வெட்டிலிருந்து அறிகிறோம்.

1715-ம் ஆண்டில் பெரியபாளையத்திலிருந்த ஒரு வணிகப் பெருமகனால் யாகசாலையும், மடைப்பள்ளியும் கட்டப்பட்டன என்ற விவரமும் மற்றொரு கல்வெட்டிலிருந்து தெரிகிறது.

இத்தேவாலயத்தினுள் மூலத்தானத் திருமாளிகையைச் சுற்றிலுமுள்ள சுவர் மாடங்களில் பல அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த பல சிலை உருவங்கள்



மேலையூர் கோவில்

காணப்படுகின்றன. அச் சிலைகளைக் காண்போர், 'சிற்பி இவற்றை நேற்றுத் தான் செய்து முடித்தாரோ!' என்று வியக்கும்படியாக இருக்கிறது. கோவில் பிராகாரத்தின் மேற்கில் ஒரு சுரங்கப் பாதை இருக்கிறது. அச்சுரங்கம் எங்கு செல்கிறதென்றும், யார்காலத்தில் எதற்காக ஏற்பட்டது என்றும் தெரியவில்லை.

இவ்வளவு பண்டைப் பெருமைகளோடும், பேசும் பாறைகளோடும், பல மன்னர்கள் வழிபட்ட புனித ஸ்தலமாக விளங்கும் இத் தேவாலயம் இன்று மிகவும் சிதிலமான நிலையில் இருக்கிறது. கிராம மக்கள் நல்ல குடி தண்ணீருக்கு வழியில்லாமல் தவிக்கின்றனர். உற்ற காலத்தில் இத் திருக்கோவிலில் திருப்பணிகள் கைக்கொள்ளப் பட்டாலன்றி, பண்டையப் பெருமை வாய்ந்த மேற்படி கிராமமும் கோவிலில் காட்சியளிக்கும் அற்புத சிற்பக் கலைகளும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.


WAKEFIELD
Castrol
MOTOR OIL
XXL
SAE 40
THE MASTERPIECE IN OILS



அன்பின் அழைப்பு

சேந்தார்கூத்தன்

'பிரமன்' துறைமுகத்தில் நூற்றுக்கணக்கான போர்க் கப்பல்கள் அணிவகுத்து நின்றன. ஜெர்மனி போர்க்கோலம் பூண்டுவிட்டது. 'அடால்ப் ஹிட்லர்' உலகம் முழுவதும் தன்னைப் பற்றி யோசிக்கும்படியாகச் செய்து விட்டான். ஒரு விதத்தில் அதிகார வெறி பிடித்த பேராசைக்காரனாக இருந்தாலும் மற்றொரு விதத்தில் எவ்வளவு திறமைசாலி!

அந்தப் போர்க் கப்பல்களில் இருந்தவர்களுக்கு இதைப் பற்றியெல்லாம் சிந்திக்கச் சிறிதும் அவகாசம் இல்லை. ஆனால் ஒரே ஒரு ஜீவன் மட்டும் தன்னுடைய அறையில் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிக் கிடந்தது. அதன் சிந்தனை ஹிட்லரைப் பற்றியதோ, ஜெர்மனியைப் பற்றியதோ இல்லை. இந்தியாவைப் பற்றியது: இந்தியாவின் தென்கோடியில் இருக்கும் தமிழ் நாட்டைப் பற்றியது: தமிழ் நாட்டின் கீழ்ப்பகுதியில் இருக்கும் நாகப்பட்டினத்தைப் பற்றியது: நாகப்பட்டினத்துக்கு நடுவே இருக்கும் சிவன் கோயில் தெருவைப் பற்றியது: அந்தத் தெருவின் மேற்குக் கோடியில் இருந்த ஓட்டு வீட்டைப் பற்றியது: அந்த வீட்டிலே வாழ்ந்து வறுமையால் இறந்த அவனுடைய அருமை அக்காளைப் பற்றியது: அக்காள் மகள் சகுந்தலையைப் பற்றியது.

ஆம்! அவன் தமிழ் மண்ணிலே பிறந்தவன். பெயர் முருகேசன். ஆனால் 'மோர்ஸ்' என்றுதான் அவனை அந்தக் கப்பலில் உள்ளவர்கள் அறிந்து கொள்வார்கள்.

முருகேசன் எப்படி 'மோர்ஸ்' ஆனான்? தமிழ் நாட்டுக் கடற்கரையிலே பிறந்தவன் எப்படி ஜெர்மன் நாட்டுக் கடற்கரையிலே வாழ்ந்து வருகிறான்? அதைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்றால், இருபது ஆண்டுகளுக்கு முன்னே நாம் செல்ல வேண்டும்.

* * *

அது கோடைக் காலத் துவக்கம். ஜெர்மனியிலிருந்து புறப்பட்ட ஒரு வியாபாரக் கப்பல் சிங்கப்பூர் துறைமுகத்தை நோக்கி வேகமாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தது.

பல நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் காலை நேரம் கதிரவனின் பளபளக்கும் கதிர்களால் நீலக் கடல் தகதகத்துக் கொண்டிருந்தது. கப்பல் இந்துமகா சமுத்திரத்தில் விரைந்து கொண்டிருந்தது.

காலை நேரமாதலின் கப்பல் தலைவர், 'டோனிட்ஸ்' முதல் சாதாரணச் சிப்பந்தி வரையில் மேல்தளத்தில் நின்று கொண்டிருந்தார்கள். கப்பல் தலைவர் தம் கையில் இருந்த 'தூரதரிசினி'யால் கடல் பரப்பில் ஏதாவது தென்படுகிறதா என்று கவனித்துக் கொண்டிருந்தார். திடீரென்று, "அதோ பாருங்கள் அதோ பாருங்கள்!" என்று ஜெர்மன் மொழியில் கத்தினார்.

எல்லாரும் அவர் காட்டிய வடகிழக்குத் திசையை உற்று நோக்கினார்கள். ஆனால் ஒன்றும் புலப்படவில்லை. வெறும் கண்ணால் பார்த்தால் வெகுதூரத்தில் உள்ள பொருள் எப்படித் தெரியும்?

கப்பல் தலைவர் 'மாலுமி'க்குக் கட்டளை இட்டார். கப்பல் வடகிழக்குத் திசையில் திரும்பி விரைந்தது. சுமார் கால்மணி நேரத்துக்குப் பிறகு ஒரு மரத்துண்டும் அதன் மேல் ஒரு சிறுவனும் மிதந்து வருவது தெரிந்தது. அவன் உயிர் இழந்தோ, நினைவிழந்தோ கிடந்தான். அவன் முதுகும் தலையும் மட்டுந்தான் வெளியே தெரிந்தன.

அவன் அருகில் போய்க் கப்பல் நின்றது. சிப்பந்திகள் இருவர் சிறு படகின் உதவியால் அவனை நெருங்கினர். அந்தச் சிறுவனை 'அலாக்'காகத் தூக்கிக் கொண்டு மேலே வந்து சேர்ந்தார்கள். அவனுக்கு உயிர் இருந்தது. உடனடியாக முதல் உதவி சிகிச்சை செய்யப்பட்டது. பசியால் மயங்கிக் கிடந்த அவனுக்குப் பழரசமும் ரொட்டித் துண்டுகளும் கொடுக்கப்பட்டன.

சில மணி நேரத்துக்குள்ளேயே அவனுக்கு ஆயாசம் தீர்ந்து புதிய பலம் உண்டாயிற்று.

கலகலப்பாக எழுந்து நின்றான். எல்லோரும் ஆச்சரியத்தோடு அவனையே பார்த்தார்கள்.

தன்னையே எல்லோரும் கவனிப்பதைக் கண்ட சிறுவன், "என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? இது ஒரு அதிசயமா?" என்று கேட்டான்.

அவன் கேட்டது ஒருவருக்கும் புரியவில்லை. 'தமிழ்' என்று ஒரு மொழி இருப்பதையே அறியாதவர்கள் அவன் கேள்வியை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? கப்பலில் இருந்த பெரும்பாலோருக்கு ஜெர்மன் மொழியும், ஆங்கிலமும்தான் தெரிந்திருந்தன. கப்பல் தலைவருக்கும் மாலுமிக்கும் மட்டும் பல மொழிகள் தெரிந்திருந்தன. அந்தப் பல மொழிகளில் ஒன்றுகூட இந்திய மொழியாக இல்லை. எனவே அவன் கேள்வியைப் புரிந்து கொள்ள முடியாமல் அனைவருமே 'திரு திரு' வென்று விழித்தார்கள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு கப்பல் தலைவர் அவனை அருகே அழைத்து அன்போடு தட்டிக் கொடுத்து விட்டுக் கேட்டார்:

"தம்பி! நீ யார்? உன்னுடைய பெயர் என்ன? உன் நாடு எது?"

பையன் விழித்தான். தமிழைத் தவிர வேறொன்றையும் அறியாத அந்தச் சிறுவனுக்கு ஜெர்மன் மொழி எங்கே தெரியப் போகிறது? பையன் கெட்டிக்காரன். உடனே சைகை காண்பித்தான்: 'நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே?' என்று.

டோனிட்ஸ் நல்ல அனுபவசாலி. கருணை மனம் உடையவர். பையனின் நிலையை ஒருவாறு தெரிந்து கொண்டார். உடனே தம் சகாக்களைப் பார்த்துப் பின்வருமாறு பேசினார்:

"இந்தச் சிறுவன் தென்னிந்தியாவைச் சேர்ந்தவனைப் போல் தோன்றுகிறான். எந்தக் காரணத்தாலோ தன் நாட்டை விட்டுக் கடல் மார்க்கத்தில் கிளம்பியிருக்கிறான். அவனுடைய நற்காலம் அவனுடைய உயிருக்கு ஒரு ஊறும் ஏற்படவில்லை. இனி அவன் நம்முடையவன். நாம் உண்ணும் ஒவ்வொரு பொருளிலும் அவனுக்கும் பங்கு உண்டு. நம் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்வதில் அவனுக்கும் உரிமை உண்டு. உடனடியாக அவனுக்கு ஆங்கிலமும் ஜெர்மனியும் கற்பிக்க வேண்டும்..."

வியாபாரக் கப்பல் தன் பிரயாணத்தை முடித்துக் கொண்டு ஜெர்மனிக்குத் திரும்பியது. டோனிட்ஸ் பையனைத் தம் பக்கத்திலேயே வைத்துக் கொண்டு கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார். அவனுடைய தலை கிராப் செய்யப்பட்டது. கப்பல் சம்பந்தமான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. காலையும் மாலையும் ஆங்கிலமும் ஜெர்மனியும் கற்பிக்கப்பட்டன. பையன் எல்லாவற்றையும் ஊக்கத்தோடு கற்று வந்தான். தன்னுடைய பெயர் முருகேசன் என்று கூறினான். ஆனால், ஒருவருக்காவது அந்தப் பெயர் வாயில் நுழையவில்லை. அவர்களால் 'மோர்ஸ்' என்றுதான் சொல்ல முடிந்தது.

காலமெனும் நீள் கடலில் ஆண்டெனும் அலைகள் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. பத்தாண்டுகள் எப்படியோ ஓடி மறைந்து விட்டன. பையன் இப்பொழுது இளங் காளையாகக் காட்சி அளித்தான். கப்பல் பயிற்சிகள் அனைத்திலும் முதல்வனாக அவன் விளங்கினான்.

ஒரு நாள் டோனிட்ஸின் விருப்பத்தின் பேரில் தனது கதையைக் கூறினான். வளமான ஜெர்மன் சொற்களை உபயோகித்து உணர்ச்சி ததும்பக் கூறினான்:

"தென்னிந்தியாவில் பிரசித்திபெற்ற நாகப்பட்டினத்துக்கு வடக்கே சிறிது தொலைவில் இருக்கும் வெளிப்பாளையத்தில் நான் பிறந்தேன். ஆனால் விவரம் தெரிவதற்கு முன்பாக என் உடன் பிறந்த ஒரே ஒரு அக்காள் என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போய் விட்டாள். நாகப்பட்டினத்தில்தான் அவள் வாழ்க்கைப் பட்டது. அவளுடைய கணவர் சிவன் கோவிலில் குருக்கள்.

குருக்கள் இறைபணியின் சேவையில் தமது வறுமையை மறந்தார். தனது வயதான தாய் தந்தை, கைக் குழந்தையோடு கூடிய விதவையான தமக்கை, திருமணத்துக்கு நிற்கும் ஒரு தங்கை, படிமண்டுவான ஒரு தம்பி, மனைவி, நான்கு பெண் குழந்தைகள், நான்—இத்தனை பேர்களையும் அவர் சமாளித்தார். சிறு முனகல் கூட இல்லாமல் தம் குடும்பத்தை நடத்தினார். ஒரு நாளாவது அவர் கோபப்பட்டதை நான் கண்டதில்லை.

"அப்படிப்பட்டவருக்குத் திடீரென்று ஒரு முடிவு வந்தது. பூசைக்காக நீர் எடுத்துக் கொண்டிருந்தவர் ஆழ்கிணற்றில் தவறி விழுந்து உயிரை இழந்தார். குடும்பம் நிர்க்கதியானது. எட்டு வயது கூட நிரம்பாத எனக்கு நிலைமை ஓரளவு புரிந்தது. அடுத்த வேளை சோற்றுக்கு வழியில்லை என்பதை உணர்ந்து கொண்டேன். கோவிலை நோக்கி ஓடினேன். கோவில் நிர்வாகஸ்தர்களிடம் என் நிலையை விளக்கி என் அத்தான் பார்த்து வந்த வேலையை எனக்கு அளிக்கும்படியாக வேண்டினேன். அவர்கள் சிரித்தார்கள். வெகு நேரம் சிரித்து விட்டு ஒரு காவல்காரனை அழைத்து, என்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் செய்தார்கள்.

"நான் அயரவில்லை. கடைகடையாகச் சென்று வேலை தேடினேன். பலன் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு புண்ணியவான் ஒரு யோசனை கூறினார். இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் சுலபமாக வேலை கிடைக்கும் என்றார். கப்பலுக்குப் பணம்? அதோடு என்னை இலங்கைக்கு அனுப்ப அக்கா சம்மதிப்பாளா? எப்பாடுபட்டாவது என்னையும் மற்றவர்களையும் காப்பாற்றுவாளேயொழிய நான் கடல் கடந்து செல்ல அவள் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டாள். இருந்தாலும், அந்தப் பயங்கரக் கஷ்டத்தைப் பார்த்துக்



கொண்டு என்னால் சும்மா இருக்கமுடியவில்லை; அக்காவிடம் சொல்லாமலேயே இலங்கைக்குப் புறப்படுவதென்று தீர்மானித்து விட்டேன். ஆனால் அக்காவின் இரண்டாவது பெண் சகுந்தலையிடம் என் திட்டத்தைக் கூறாமல் இருக்க முடியவில்லை.

''அவள் மட்டும் எப்படியோ மற்ற எல்லோரையும்விட எனக்கு மிகவும் வேண்டியவளாகப் போய் விட்டாள். அன்று அவள்மேல் கொண்டிருந்த அசாதாரணமான அன்பை இன்று நினைத்துப் பார்த்தாலும் என் நெஞ்சம் ஆனந்தத்தால் தத்தளிக்கிறது. ஒருநாள் இரவு யாருக்கும் தெரியாமல் அவளை மட்டும் அழைத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்தேன். அவளைத் திரும்பிப் போகச் சொல்லி விட்டு நான் மட்டும் கடலில் இறங்கி இலங்கையை நோக்கி நீந்தினேன். நான் நீந்திய திசையில்தான் இலங்கை இருக்க வேண்டுமென்று எனக்கொரு அசட்டு நம்பிக்கை.

''நான் அலைக்கரங்களை எதிர்த்து நீந்தினேனே யொழிய என் நினைவு முழுவதும் சகுந்தலையிடமே இருந்தது.

''ஆனால் எண்ணியபடி ஒன்றும் நடக்கவில்லை. பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் அவர்களுக்கு ஒரு கடிதம்கூட நான் போடவில்லை. என் அக்காவும் மற்றவர்களும் என்ன ஆனார்களோ, தெரியவில்லை. என் மேல் தன் உயிரையே வைத்திருந்த சகுந்தலை வறுமையில் வாடி மடிந்தாளோ அல்லது உயிரோடு இருக்கிறாளோ...ஒன்றுமே புரியவில்லை...''

முருகேசன் அழுது விட்டான். மகாதைரியசாலி என்று கருதப்பட்ட முருகேசன் சிறு குழந்தையைப் போல் கண்ணீர் விட்டான்.

டோனிட்ஸ் அவனைத் தட்டிக் கொடுத்தார். ''முட்டாள்! இதற்காகவா அழுவது? நாளைக்கே உன் அக்காவுக்குக் கடிதம் எழுது. பதில் வந்த பிறகு என்னிடம் சொல். வேண்டிய பணம் தருகிறேன். தாராளமாக வாரா வாரம் வேண்டுமானாலும் அனுப்பி வை. ஆனால் நீ மீண்டும் உன் நாட்டுக்குத் திரும்ப வேண்டும் என்று மட்டும் நினைக்காதே. அது கனவிலும் நடக்காத காரியம். எனக்குப் பிறகு யுத்தக் கப்பலின் தலைவனாக வேண்டியவன் நீ. நினைவிருக்கட்டும்...''

முருகேசன் அவர் பேச்சை மறுத்துப் பேசவில்லை. அந்த இடத்திலிருந்து மௌனமாகப் போய் விட்டான். மறுநாளே நாகப்பட்டினத்துக்குக் கடிதம் எழுதினான். ஆறு மாதங்களுக்குப் பிறகு பதில் வந்தது. சகுந்தலை தன் கைப்படவே கடிதம் எழுதியிருந்தாள்.

'' அத்தான்,

நீங்கள் என்றாவது ஒரு நாள் திரும்பி வருவீர்கள்; உங்களிடமிருந்து கடிதம் வரும் என்று நம்பியிருந்தேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை.. நீங்கள் வீட்டை விட்டுப் புறப்பட்ட சில நாட்களில் உங்கள் நினைவாகவே இருந்து அம்மா இறந்து போனாள். கைக் குழந்தையும் அவளைத் தொடர்ந்து போய் விட்டது. தாத்தாவும் பாட்டியும் பசியின் கொடுமை தாளாது மாண்டு போனார்கள். திருமணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சின்ன அத்தை நிலைகுலைந்து தற்கொலை செய்து கொண்டாள். சித்தப்பா எங்கே போனார் என்றே தெரியவில்லை. இப்பொழுது நானும் அக்காவும் தங்கையும் விதவை அத்தையின் துணையைக் கொண்டு வாழ்ந்து வருகிறோம். பூத்தொடுத்து விற்பதால் எங்கள் ஜீவனம் நடைபெறுகிறது......''

அதன் பிறகு அடிக்கடி கடிதம் எழுதினான். பணமும் அனுப்பிக் கொண்டிருந்தான். பதிலும் வந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு கடிதத்திலும், 'எப்பொழுது வருவீர்கள்?' என்று வினா எழுப்ப அவள் தவறியதில்லை.

காலதேவனின் வலக்கரத்தில் இருந்த காலச்சக்கரம் சிறிதுகூடத் தயக்கமில்லாமல் சுழன்றுகொண்டேயிருந்தது. இந்தச் சமயத்தில்தான் இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பமாயிற்று. ஜெர்மனி நாட்டின் துறைமுகங்களில் இருந்த வியாபாரக் கப்பல்கள் யாவும் போர்க் கப்பல்களாக ஆக்கப்பட்டு விட்டன. முருகேசன் உதவிக் கப்பல் தலைவனாக நியமிக்கப்பட்டான். அவன் பொறுப்புகளும் கடமைகளும் அதிகமாயின.

நாளை எல்லாக் கப்பல்களும் பிர்மன் துறையிலிருந்து புறப்படப் போகின்றன. ஆனால் எங்கே போகின்றன? எதற்குப் போகின்றன?...என்பவையெல்லாம் ரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நாளை புறப்படுகிறவர்களில் திரும்பி வருபவர்கள் மிக மிகச் சொற்பமாகவே இருப்பார்கள். அவர்களில் முருகேசனும் இருப்பான் என்பது என்ன நிச்சயம்?

முருகேசன் மரணத்தைக் கண்டு அஞ்சவில்லை. ஜெர்மன் நாட்டின் வெற்றிக்காக - தனக்கு வாழ்வளித்த நாடு என்ற காரணத்துக்காக - தன் உயிரையே பலி கொடுக்க அவன் தயாராக இருந்தான். ஆனால் அதற்குள் ஒரு முறை தன் குழந்தைப் பருவத்துக் காதலியைச் சந்திக்க விரும்பினான். அவன் எண்ணத்தை நேற்று சகுந்தலையிடமிருந்து வந்த கடிதம் மேலும் பலப்படுத்தியது. உடனே டோனிட்ஸிடம் சென்று கடிதத்தையும் காண்பித்துத் தன் ஆவலையும் வெளியிட்டான்.

''யுத்தம் ஆரம்பமாகி விட்டது. எந்த நேரத்திலும் நான் சாகக் கூடும். அதற்குள் இளமையிலேயே ஈருடலும் ஓருயிருமாய் இருந்த என் அருமைச் சகுந்தலையை நான் காண விரும்புகிறேன். எனக்கு விடை தாருங்கள். விரைவிலேயே நாகப்பட்டினம் சென்று அவளையும் அழைத்துக் கொண்டு உடனே திரும்பி விடுகிறேன்!''

டோனிட்ஸ் முருகேசனை வெறுப்போடு முறைத்துப் பார்த்தார். இதுவரையில் ஏற்



படாத ஒரு அருவருப்பு அவன் மேல் உண்டானதைப்போல் தோன்றியது.

"மோர்ஸ்! இந்த இருபது ஆண்டுகளில் ஒருநாள் கூட உன்னிடம் நான் குறை கண்டதில்லை. ஆனால் இப்பொழுது அதற்கு நீ வழி செய்வதைப் போல் தோன்றுகிறது. இந்தியாவுக்குப் போகிறேன் என்கிறாயே, அது எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா? ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்ட ஒரு நாட்டுக்கு ஜெர்மனியைப் பற்றிய பல ரகசியங்கள் அறிந்த ஒருவன் போவதென்றால். யோசித்துப் பார். இன்றோடு உன் நாட்டையும் உன் அன்புக்குரியவளையும் மறந்துவிட்டு மறுப்புக் கூறாமல் மகா அழகியான கேதரைனை மணந்து கொள். இதை மீறி நீ தப்பிச் செல்ல முயன்றால் உன் உயிர் உடலில் தங்காது."

"கேதரைனையா கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்? கேட்கும்பொழுதே எவ்வளவு வெறுப்பாக இருக்கிறது?" முருகேசன் சொல்ல முடியாத ஆத்திரத்தோடு தன் அறைக்குத் திரும்பினான். அதன் பிறகுதான் அவனுடைய மனம் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்க ஆரம்பித்தது.

அவன் சிந்தனையின் நரம்புகள் அறுந்து விழுந்தன. கடைசி முறையாகச் சகுந்தலை எழுதிய கடிதத்தை எடுத்துப் படித்தான்.

"அருமை அத்தான்!

நீங்கள் அன்புடன் அனுப்பிய அந்தப் பணத்தைக் கொண்டு வறுமைப்பேயை விரட்டி விட்டேன். அக்காவுக்கு ஒரு நல்ல இடத்தில் திருமணத்தை முடித்து விட்டேன். தங்கைக்கும் பெரிய பணக்காரன் வீட்டில் திருமணம் நடந்து விட்டது. இதையெல்லாம் பார்ப்பதற்கு அம்மாவுக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை. போகட்டும், நீங்கள் எப்பொழுது வருகிறீர்கள்? இருபது வருஷங்களாக நாம் பிரிந்து வாழ்ந்தது போதாதா? இனியும் ஏன் தாமதம்? யுத்தம் பெரும் அனலை பரவுவதற்குள்ளாக நீங்கள் வந்துசேருங்கள். நீங்கள் வருகிறவரை ஒவ்வொரு நாளும் நான் கடற்கரையிலேவந்து காத்திருப்பேன், அத்தான்!"

அதற்குமேல் அவன் படிக்கவில்லை. தன் இடத்தினின்று 'விருட்'டென்று எழுந்தான். டைரியைப் பிரித்து மளமளவென்று ஏதோ எழுதினான். எழுதிய டைரியைக் கோட்டுப் பைக்குள் திணித்துக் கொண்டான். தலையை மூடிக் கொழுப்பு பூசிய அங்கியை எடுத்து அணிந்து கொண்டான். முதுகில் உணவுப் பையையும் நீர்ப்பையையும் கட்டிக் கொண்டான். அதன் பிறகு 'லைப் ஜாக்கெட்'டை எடுத்து மாட்டிக் கொண்டான்.

யார் கண்ணிலும் படாமல் பதுங்கிப் பதுங்கி மேல்தளத்துக்கு வந்து சேர்ந்தான். நள்ளிரவு நேரமாதலின் காவல்காரர்களைத் தவிர மற்றவர்கள் உறங்கிக் கிடந்தார்கள். அந்தக் காவல்காரர்களுக்கும் 'டிமிக்கி' கொடுத்துவிட்டு ஒரு கயிற்றின் உதவியால் கப்பலிலிருந்து கடலில் இறங்கினான். ஓசைப் படாமல் நீந்தத் துவங்கினான்.

ஒரு சாதாரண மானிடப் பெண்ணின் அன்பின் அழைப்புக்காக, காதலின் அறைகூவலுக்காக எந்த மனிதனும் செய்யமுடியாத ஒரு அசாதாரணமான காரியத்தைச் செய்தான்.

ஐந்தாவது கடல் மைலில் பாதி தூரம் வந்திருந்தான். அப்பொழுது...

பிரகாசமான வெளிச்சம் அவன்மேல் விழுவதைப் போல் தோன்றியது. அதை அடுத்துக் 'கர்ர்...' என்ற ஓசையோடு நீராவிப் படகு வருவதைப் போலவும் தோன்றியது. முருகேசன் திரும்பிப் பார்க்க முயன்றான். அதற்குள் 'படபட' வென்ற நெஞ்சைக் குலுக்கும் சத்தம். செவிப்பறை கிழிந்ததைப் போல் இருந்தது. சரமாரியாக முருகேசனைக் குறி வைத்துக் குண்டுகள் பொழிந்து கொண்டிருந்தன. ஒரு குண்டு அவன் தலையில் பாய்ந்தது. அந்தக் கணமே அவன் ஆவி பிரிந்தது. பைத்தியக்காரன்! வளமாக வாழ வேண்டிய வாழ்க்கையை ஒரு பெண்ணின் காதலுக்காகப் பாழாக்கிக் கொண்டான்.

நீராவிப் படகில் வந்தவர் 'கேப்டன்' டோனிட்ஸ்தான். அவர் கையால் சுட்ட குண்டுதான் முருகேசனை உயிரற்றவனாக்கியது.

கண்ணீர் கொப்புளிக்க முருகேசனின் பிரேதத்தை எடுத்து நீராவிப் படகில் போட்டார். அவன் கோட்டுப் பையிலிருந்த டைரியை எடுத்துப் பிரித்தார். கண்ணீரைத் துடைத்துக் கொண்டே படித்தார்:

"வடகடலையும், இங்கிலிஷ் கால்வாயையும், அட்லாண்டிக் மகா சமுத்திரத்தையும், மத்திய தரைக்கடலையும், செங்கடலையும், அரபிக் கடலையும், இந்து மகா சமுத்திரத்தையும், வங்கக் கடலையும் கடந்து என் சகுந்தலையிடம் பத்திரமாகப் போய்ச் சேர்ந்து விடுவேன் என்று எனக்கு ஒரு நம்பிக்கை. வழியிலே உள்ள இடர்களையெல்லாம் வென்று நாகப்பட்டினத்துக்குப் போய் விட்டால் அடுத்த நாளே சகுந்தலையை அழைத்துக் கொண்டு ஜெர்மனிக்குக் கப்பல் ஏறிவிடுவேன். தமிழ் மண்ணிலே பிறந்தவனாக இருந்தாலும் ஜெர்மன் மண்ணிலேதான் இறக்க ஆசைப்படுகிறேன். என்னால் ஜெர்மன் படைகளைப் பற்றிய எந்த ஒரு ரகசியமும் வெளியாகாது என உறுதி கூறுகிறேன். ஒருவேளை என் நம்பிக்கை பாழாகி ஜெர்மன் வீரர்களாலேயே நான் சாக நேர்ந்தால் என் பிரேதத்தை ஜெர்மன் மண்ணிலே அடக்கம் செய்து விடவும். ஆனால் நான் இறந்துபோன செய்தியை எவ்வகையிலும் சகுந்தலைக்குத் தெரிவிக்கவே கூடாது. நான் இருக்கிறேன் என்ற நினைவே அவளுக்கு இன்பத்தை அளிக்கும். அந்தப் பொய் ஆனந்தத்தைக் கொண்டே அவள் நீண்ட நாட்கள் வாழ்ந்து நிம்மதியாகச் சாவாள்!"

பிரும்மாண்டமான இராணுவ மரியாதைகளோடு முருகேசனின் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது.

சகுந்தலை ஒவ்வொரு நாளும் தனது ஆசை அத்தானை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். யுத்தத்தில் அவன் மாண்டிருப்பான் என்று பலர் சொன்னார்கள். ஆனால் அதை அவள் அணுவளவுகூட நம்பவில்லை. 'என்னை ஒரு முறையாவது சந்திக்காமல் அவர் செத்துப் போக மாட்டார்' என்று எல்லோரிடமும் உறுதியாகக் கூறினாள். 'என்றாவது ஒருநாள் என் அத்தான் வந்தே தீருவார்' என்று எண்ணிக் கொண்டு ஒவ்வொருநாளும் கடற்கரைக்குச் சென்று அன்புடன் அவனை அழைத்துக் கொண்டிருந்தாள்!

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

புடவை

புதிதா?



இல்லை—லக்ஸினுல் சலவை செய்தது!

ஷிபான், நைலன், வாயில், பட்டு — எவ்வகையான உங்கள் ஆடைகள் எல்லாவற்றிற்கும் மென்மையான, தூய லக்ஸ் பராமரிப்பு அவசியம். அற்புதமான சுத்தத்துடன் வெளுப்பதோடு, துணிகளின் மெருகு மாறாமல் பராமரிக்கும்.

அழகான ஆடைகளுக்கு நெடுங்காலம் புதுமைத் தோற்றம் அளித்துக் காப்பது லக்ஸ்

LUX

For gentle washing of lovely clothes

LX. 139-50 TM

பம்பாயிலுள்ள ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தயாரிப்பு

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



காகிதத்தைக் கிழித்தே காலத்தைக் கழிப்பவர்!

காகிதத்தின் சத்ருவோ என்று நினைத்துவிடாதீர்கள்; காகிதத்தைக் கிழித்துப் பார்ப்பது இவர் உத்தியோகம் . . . அதாவது, அவற்றின் வலிமையை விஞ்ஞான முறைப்படிப் பரிசோதிப்பவர்.

மேலுறைகள், டப்பாக்கள், அட்டைப் பெட்டிகள், அடக்கம் செய்வதற்கான பெட்டிகள் எல்லாமே உறுதியாக உள்ளதா என்று பார்ப்பதற்காக ஹிந்துஸ்தான் லீவர் கம்பெனியில் பூர்வாங்கமான பரிசோதனைகளுக்கு உள்ளாகின்றன. எமது தயாரிப்புக்களைப்போல, உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் எமது விஞ்ஞானிகளும், தொழில்வல்லுனர்களும் பதம்பார்த்துப் பரிசோதிக்கின்றனர்.

ஹிந்துஸ்தான் லீவர் தயாரிப்புக்களில் எப்பொழுதும் நீங்கள் எதிர்பார்ப்பது மாறாத மேன்மை என்பதை நாங்கள் உணர்ந்தவர்கள்தானே! உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் அவற்றின் தராதரத்தைப் பரிசோதித்துப் பார்ப்பது ஒன்றேதான் அதற்கான வழி. இத்தகைய தராதரக் கட்டுப்பாட்டின் நற்பலனாக, தேசத்தின் அரும்பெரும் இயற்கைச் செல்வங்களையும், மூலாதாரமான உற்பத்திக் காலத்தையும் விரயமாகாது காத்துக்கொள்ள எங்களால் இயலுகிறது.

குடும்பந்தோறும் தழைத்தோங்க ஊழியம் புரிவது ஹிந்துஸ்தான் லீவர்

HLL. 16-50 TM